23 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



நதி 23 | பாலம் 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2013


# கனடாவிற்கும் இலங்கைக்கும் இடையே முறுகல்!

கனடாவிற்கும் இலங்கைக்கும் இடையே உயர் ஆணையாளர் (High Commissioner) நியமன விடயத்தில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக 'Sunday Times' கூறுகிறது. இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய தலைவர்களது மாநாட்டை பொதுநலவாய உறுப்புநாடுகள் பகிஸ்கரிக்க வேண்டும் என கனடா கேட்டுக்கொண்டதை தொடர்ந்து கனடாவிற்கும் இலங்கைக்கு




மான உயர்ஆணையாளர் நியமனங்களில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது உதவி தூதுவராக (Deputy Ambassador) அமெரிக்காவில் பணியாற்றும் Esala Weerakoon ஐ கனடாவிற்கான புதிய உயர் ஆணையாளராக இலங்கை நியமிக்க விரும்புவதாக கனடாவிடம் தெரிவித்தது. ஆனால் அதை கனடிய வெளிவிவகார அமைச்சு உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல் காலம் கடத்திக் கொண்டு இருக்கிறது.

பொதுநலவாய அமைப்புகளின் விதிப்படி ஒரு நாடு ஒருவரை உயர் ஆணையாளராக மற்றைய நாட்டிற்கு நியமிக்கும் இடத்து அதை மற்றைய நாடு சம்பிரதாயரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு மற்றைய நாடு ஏற்க மறுத்தால் அவரால் உயர் ஆணையாளராக அந்த நாட்டில் பதவிவகிக்க முடியாது. கனடாவின் இந்த காலம் கடத்தும் செய்கைக்கு இலங்கைக்கான புதிய உயர் ஆணையாளராக கனடா நியமித்த Shelly Whiting ஐ இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாததே காரணம் எனக் கூறப்படுகிறது. கனடிய வெளிவிவகார அமைச்சின் தகவல்களின்படி Shelly Whiting தனது இலங்கைக்கான உயர் ஆணையாளர் பதவி ஏற்பதற்காக கடந்த




மூன்று மாதங்களுக்கு முன்னரே இலங்கைக்கு வந்திருந்தும் அவரது நியமனத்தை இன்னமும் இலங்கை ஏற்றுக் கொள்ளாததால் அவர் இன்னமும் இலங்கைக்கான உயர் ஆணையாளராக பதவி ஏற்காமல் இருக்கிறார்.

இவ்வாறு மூன்று மாதங்களுக்கு மேலாக இலங்கை இழுத்தடிப்பு செய்வதாலேயே கனடிய வெளிவிவகார அமைச்சும் இலங்கையின் கனடாவிற்கான உயர் ஆணையாளர் நியமனத்தை ஏற்காமல் காலம் கடத்துகிறது என கூறப்படுகிறது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம கூறுகையில், தற்போது தனது பதவிக் காலத்தை முடிக்கும் சித்திராங்கனி வாகீஸ்வராவின் இடத்திற்கு கனடாவிற்கான புதிய ஆணையாளராக Esala Weerakoon யை நியமிக்க தாங்கள் விரும்புவதாக கனடிய அரசிற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே தெரிவித்ததாக கூறுகிறார்.




அவர் மேலும் கூறுகையில் தாங்கள் இலங்கைக்கான உயர் ஆணையாளர்கள் நியமனங்களை தொகுதி தொகுதியாகவே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாகக் கூறினார். கனடாவின் இலங்கைக்கான புதிய உயர் ஆணையாளர் Shelly Whiting இன் நியமனமும், இந்தியாவின் இலங்கைக்கான புதிய உயர் ஆணையாளர் Y.K. Sinha இன் நியமனமும் அடுத்த தொகுதி உயர் ஆணையாளர்களின் நியமனம் யூலை மாதத்தில் பரிசீலனை செய்யப்படும் போது எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

கனடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் இலங்கை அரசின் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் ஒழிய தான் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் பங்குபற்றப் போவதில்லை என ஏற்கனவே தெரிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து கனடா, பொதுநலவாய தலைவர்களது மாநாட்டை இலங்கையில் நடைபெறவிடாமல் வேறு ஒரு நாட்டில் நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. இதனாலேயே இலங்கைக்கும் கனடாவிற்கு மான இராஜதந்திர நடவடிக்கைகளில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக Sunday Times கூறுகிறது.

# கனடாவின் மிகத்திறமையான மாகாணம் ஒன்ராரியோ

2011 இல் வீட்டு குடியிருப்பாளர்களுக்கு இடையே நடத்திய தேசிய கணிப்பீடு ஒன்றின்படி கனடாவில் திறமையானவர்கள் அதிகம் வாழும் தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markham & Steeles, Tel: 416.609.2022








# கனடாவுக்கு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மிகத்திறமையான மாகாணமாக (Smartest province) ஒன்ராரியோ மாகாணம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கணிப்பீட்டில் 24 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகளின் எண்ணிக்கையும் கணக்கிடப் பட்டது. அதன்படி மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழக பட்டதாரிகளின் வீதம் பின்வருமாறு

| | |
|---|---|
| ஒன்ராரியோ | 28.9% |
| பிரிட்டிஸ்கொலம்பியா | 27.3% |
| யூகோன் பிரதேசம் | 25.8% |
| அல்பேட்டா | 25.6% |
| நோவாஸ்கோர்சியா | 23.4% |
| குவிபெக் | 23.3% |
| மனிரோபா | 22.7% |
| வடமேல் பிரதேசம் | 22.7% |
| பிரின்ஸ் எட்வேர்ட் தீவுகள் | 21.0% |
| சஸ்கச்சுவான் | 19.6% |
| நியூ பிரவுன்ஸ்விக் | 18.8% |
| நியூ பவுண்லாந்து மற்றும் லபிரடோர் | 16.4% |
| நுணவிற் பிரதேசம் | 13.0% |

இதேபோல் கனடாவின் நகரங்களில் வாழும் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் பல்கலைக் கழக பட்டதாரிகளின் எண்ணிக்கையும் கணக்கிடப்பட்டது. அதன்படி நகரங்களில் உள்ள பல்கலைக்கழக பட்டதாரிகளின் வீதம் பின்வருமாறு.

இந்தக் 2011 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின்படி கனடாவில் பல்கலைக்கழக பட்டதாரிகளின்

| | |
|---|---|
| ஒட்டாவா | 31.5% |
| ரொறொன்ரோ | 29.9% |
| கல்ஹரி | 28.8% |
| ஃபரடிக்ரன் | 28.4% |
| வன்கூவர் | 27.8% |
| விக்ரோரியா | 26.6% |
| ஜெலோநைவ் | 26.2% |
| வைற்கோர்ஸ் | 23.9% |
| சாலட்ரவுண் | 23.6% |
| மொன்றியல் | 22.9% |
| சஸ்கரூன் | 22.4% |
| குவிபெக் | 22.2% |
| வினிபெக் | 22.0% |
| சென்.யோன்ஸ் | 21.8% |
| எட்மென்ரன் | 21.2% |
| றிஜைனா | 20.8% |
| இக்குவால் | 19.2% |

எண்ணிக்கை வீதம் 2006 ஆம் ஆண்டில் இருந்ததைவிட சிறிது அதிகரித்துள்ளது. 2011 இல் எடுக்கப்பட்ட இக்கணிப்பீட்டில் இருந்து கிடைக்கப்பெற்ற வேறு சில விபரங்கள் பின்வருமாறு.

• 93% ஆன கனடியர்கள் வேலைக்கு செல்வதற்கு தமது சொந்த மோட்டார் வாகனத்தையே பயன்படுத்துகிறார்கள். பொது வாகனங்களை பாவித்து வேலைக்கு செல்பவர்கள் சராசரியாக 43 நிமிடங்களையும் சொந்த வாகனங்களில் வேலைக்கு செல்பவர்கள் சராசரியாக 25 நிமிடங்களையும் பிரயாணத்திற்கு செலவிடுகின்றனர்.

• 85% ஆன கனடியர்கள் தமது அலுவலகங்களில் வேலைகளை ஆங்கில மொழிமூலம் செய்கிறார்கள். 25% ஆன கனடியர்கள் பிரஞ் மொழியை வேலைத் தளங்களில் உபயோகிக்கின்றனர். அலுவலகங்களில் ஆங்கிலம் மற்றும் பிரஞ்மொழிக்கு அடுத்ததாக அதிகமாக பாவிக்கப்படும் மொழி சீனமொழியாகும்.

• தற்போது வேலையில் இருந்து இளைப்பாறும் வயது எல்லை அதிகரித்துள்ளது. 2001 இல் 11.7% ஆனவர்களே அலுவலகங்களில் 55 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தனர். இது 2011 இல் 18.7 % ஆக அதிகரித்துள்ளது. 5 இலட்சம் கனடியர்கள் வேலைக்காக ஒரு மாகாணத்தில் இருந்து இன்னொரு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

• கனடாவில் பல்கலைக்கழக பட்டதாரிகளை விட கல்லூரி பட்டதாரிகளுக்கு (College Grads) வேலை வாய்ப்புக்கள் அதிகம் கிடைக்கின்றன. ஆனால் இவர்கள் இருசாராரையும் விட பட்ட மேற்படிப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் மிகவும் அதிகம் பெறக்கூடியதாக உள்ளது.

• கனடாவில் கண் பரிசோதகர் (Optometrist), பிராணிகளின் வைத்தியர் (Veterinarian), பல் வைத்தியர் (Dentist) மற்றும் மருத்துவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக்கள் உண்டு. கனடியர்களில் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி அதிகமானவர்கள் சில்லறை வியாபார நிலையங்களிலேயே (Retail trade) வேலை செய்கிறார்கள். தொழில்சார் அனுமதிப்பத்திரங்களை (Apprentice certificates) வைத்திருப்பவர்களில் 80% ஆனவர்கள் ஆண்கள். பெண்கள் அதிகஅளவில் வேலை பார்க்கும்



தொழில்கள்: சில்லறை விற்பனை நிலையங்களில் விற்பனையாளர் (Retail sales), நிர்வாக உதவியாளர் (Administrative assistant), மருத்துவ தாதி (Nurse) மற்றும் காசாளர் (Cashier) ஆகும். இளம் கனடியர்கள் (25 வயதிற்கும் 34 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்) இயந்திரங் களை திருத்துபவர்களாக இருப்பதை விட (Mechanic) சமையலாளர்களாகவே (Cook) அதிக அளவில் இருக்கிறார்கள். இது வயது முதிர்ந்தவர்களிடம் (இளைப்பாறும் வயதை எட்டியவர்கள்) எதிர்மாறாக உள்ளது.

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com*
   *www.tamilvanakkam.com*


Dr. Bhaminy Mohendran
*Dentist*
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
Opened 7 days a week

# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

### கனடாவில் பிற ஆட்சிக் கூறுகள்

சட்டப் பேரவையில் மாகாண, ஆள்புலச் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டப் பேரவையே மாகாணங்களிலும் ஆள்புலங்களிலும் ஆட்சி புரிகின்றது. சட்டப் பேரவை உறுப்பினர்கள் (MLAs), தேசிய பேரவை உறுப்பினர்கள் (MNAs), மாகாண மன்ற உறுப்பினர்கள் (MPPs), பேரவை உறுப்பினர்கள் (MHAs) என்று சட்டப் பேரவை உறுப்பினர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.



மாநகராட்சி மன்றங்களால் நிறைவேற்றப் படும் சட்டங்கள் உபவிதிகள் எனப்படும். அவை உள்ளூர் சமூக விடயங்கள் சார்ந்தவை. மாநகராட்சி மன்றம் ஒரு மாநகராதிபதியையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மன்றாளர்கள் எனக் குறிப்பிடப்படும் பிரதிநிதிகளையும் கொண்டது.

மாகாண, ஆள்புல, மாநகரத் தேர்தல்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படும். கூட்டாட்சித் தேர்தல் விதிகளின்படி இவை நடத்தப்படுவதில்லை. மாகாண, ஆள்புல, உள்ளூர் தேர்தல் விதிகளைக் கண்டறிந்து உங்கள் வாக்குரிமையைக் கையாள்வது முக்கியம்.

### தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் பிரதிநிதிகளை உங்களுக்குத் தெரியுமா?

### கூட்டாட்சி

அரசுத் தலைவர்: அரசியின் கனடா முழுவதுக்குமான பிரதிநிதி, ஆளுநர்-அதிபதி:

ஆளும் அரசாங்கத் தலைவர்: பிரதம அமைச்சர்:

எதிர்க்கட்சித் தலைவர்:

நேரெதிர்க் கட்சி:

வேறு எதிர்க்கட்சிகள், தலைவர்கள்:

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**

# கனடாவை வாழ்த்திடுவோம்! வணங்கிடுவோம்!

கனடா என்றொரு கனிவான நாடாம்
கருணைக்கு பெயர் பெற்ற களங்கமில்லா நாடாம்
கடல் வளமும் கனி வளமும்
கல்வி வசதியும் கலாச்சார உரிமையும்
கரையில்லா வழங்கும் கனிவான நாடாம்



உலகில் இரண்டாவது பெரிய தேசம்
உதவுவதில் முதலாவதாய் உள்ள தேசம்
உழைப்பதற்கும் உரிமையோடு வாழ்வதற்கும்
உன்னதமாய் வாழ்வதற்கு உதவிகள் புரிவதிலும்
ஒப்பிட முடியாத உன்னத தேசம்

பல்கலாச்சார மக்களையும் பரிவோடு பாதுகாத்து
பண்பான சமூகத்தை பார் போற்ற உருவாக்கி
பகல் இரவாய் பாங்காக பணியாற்றும்
பல்லோரும் போற்றும் பண்பான தேசத்தை
பணிவோடு போற்றி பவிசாக வாழ்வோம்!

முத்துப்போல் பனி பொழிவதும் அழகு
மொட்டை மரம் துளிர்ப்பதும் அழகு
மொட்டு முகிழ்ந்து விரிவதும் அழகு
முற்றிக்காய் பழுப்பதும் முழு அழகு
முதியோர் முழு நிறைவாய் வாழ்வதும் தனி அழகு

வந்தாரை வரவேற்கும் வளமான நாடு
வாழ வழியற்றோரை வாழ்விக்கும் நாடு
வருணனின் வரவால் வளம் கொழிக்கும் நாடு
வற்றாத நீர்நிலைகள் வழிந்தோடும் நாடு
வறுமை என்ற பேச்சுக்கே வழியில்லா நாடு


தன்மானத் தமிழன் தலை நிமிர்ந்து வாழ்ந்திட
தன்நிகரில்லாத் தமிழ்க் கலைகள் தளர்வற்று வளர்ந்திட
தரணி புகழ் முத்தமிழும் தடையில்லா ஓங்கிட
தளம் அமைத்து தந்த தங்கத் திருநாடே
தரணியில் உதித்த உன் தண்ணொளி நாளை
தலை சாய்த்து தாள் பணிந்து வாழ்த்திடுவோம்! வணங்கிடுவோம்.!

*ஆக்கம்: மார்க்கம் சந்திரன்*

**APPLEMORE AUTOMOTIVE**
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# மழையில் நனைந்து பாருங்கள்!



## சத்குரு வாசுதேவ்

கோடைக்காலத்தில், 'மழை வந்தா நல்லயிருக்குமே!' மழைக்காலத்தில், 'வெயில் அடிச்சா தேவலயே!' என்று பிதற்றும் மனங்கள் ஏராளம். ஆனால் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து, அந்த அனுபவத்தில் குதூகலித்ததுண்டா நீங்கள்? இல்லையென்றால், இனிமேலும் தாமதிக்காமல் சத்குருவின் மழை அனுபவத்தைக் கேட்டுவிட்டு, நனையக் காத்திருங்கள் மழைக்காக!

சத்குரு:

திறந்த வெளியில் நடந்து செல்கிறீர்கள். திடீரென்று மழை வருகிறது. என்ன செய்வீர்கள்? அருகிலிருக்கும் ஏதாவது ஒரு கூரைக்கு அடியில் ஓடிப்போய் ஒளிந்து கொள்வீர்களா? ஓ! சர்க்கரையைப் போல், உப்புக் கட்டியைப் போல் மழையில் கரைந்து விடுவோம் என்று பயமா உங்களுக்கு? மழையைக் கண்டதும் ஓடுவதேனோ?

எனக்கு மூன்று, நான்கு வயது இருக்கும். எங்கள் வீடு மிகப்பெரிய திறந்த வெளியில் அமைந்திருந்தது. மைசூரில் மழைக்காலம் வந்தால், வானம் பொத்துக் கொண்டு ஊத்தும். மழையைவிட்டு விலக மாட்டேன். ஆனால் பெரியவர்களோ, நெருப்பில் கால் வைக்க அஞ்சுபவர்களைப் போல் மழையைக் கண்டால் எட்ட ஓடி விடுவார்கள். 'உள்ளே வா' ஜலதோஷம் பிடிக்கும், காய்ச்சல் வரும்' என்று என்னென்னவோ சொல்லி மிரட்டுவார்கள், நான் கொஞ்சம் கூட அசைந்து கொடுக்க மாட்டேன்.

என்னைக் கவர்ந்து செல்ல வருபவர்களிடம் சிக்க மாட்டேன். தினமும் திமிறத் திமிற குடம் குடமாகத் தண்ணீரை ஊற்றி குழந்தைகளைக் குளிப்பாட்டுபவர்கள் கூட, அதுவாகப் பொழியும்போது எதற்காகப் பதறி நனையவிடாமல் தடுக்கிறார்கள் என்னும் கேள்வி என் உள்ளத்தில் அப்போதே உதிக்கும்.

கோடையில் வரும் முதல் மழைத்துளி என் மீது மோதும்போது, எனக்குள் அளவிலா ஆனந்தம் பொங்கி ஆர்ப்பரித்திருக்கிறது.

பிற்பாடு தோப்பு, விவசாயம் என்று என்னை ஈடுபடுத்திக் கொண்டபோது, தனியாளாக இருந்தேன். புல் தரையில் படுத்து நனைவேன். மழை என் மீது சுதந்திரமாகப் பொழியும். மழைநீர் என்னைத் தழுவி ஓடும். என்னைச் சுற்றி தேங்கும். இயற்கையுடன் எனக்குத் தொடர்பு கொடுக்கும்.

அனுபவங்களைத் தேடும் இளைஞனாக என் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்ய ஆரம்பித்த வயதில்கூட, நான் மழைக்காக ஒதுங்கியதில்லை. மழையில் வாகனத்தை சந்தோஷமாகச் செலுத்துவேன். முகத்தில் மோதும் மழை, பார்வையைக் குறைக்கும். ஆனால், எப்போதும் எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடன், முழுமையான கவனத்துடன் செய்து வந்ததால், மழை எனக்கு சவாலாக இருந்ததில்லை.



மழையில் நான்கு ஐந்து மணி நேரங்கள் கூடத் தொடர்ந்து பைக்கை செலுத்தி இருக்கிறேன். 'சூரியன் வெளிச்சம் பொழியும்போது நான் தொடர்ந்து பயணம் செய்வதில்லையா? மழையைக் கண்டு மட்டும் ஏன் ஓட வேண்டும்?' என்பேன்.

மழை பொய்த்துப் போய் தமிழ்நாடே வறண்டிருந்த நேரம் அது!

ஈஷா அன்பர் ஒருவரின் மகள், தனக்குப் பள்ளியில் சொல்லிக் கொடுத்தப் பாடலை என்னிடம் ஆசையுடன் பாடிக் காட்டினாள். "ரெயின் ரெயின் கோ அவே" அதிர்ந்தேன். மழைக்காக தமிழகமே ஏங்கிக் காத்திருக்கும் போது, அதை வராதே, போ போ! என்று விரட்டும் பாடல் அது.

ஆங்கிலேயரின் குளிர் தேசத்தில் மழை என்பது அவஸ்தையான ஒன்று. அதற்காக, அவர்கள் சொன்னதை இங்கே அப்படியே எடுத்தாள்வதா? கலப்படமில்லாத குழந்தைகளின் மனதில் அந்த எண்ணம் தங்கிவிடாதா? மழையைக் கண்டாலே, அதை போகச் சொல்லி அவர்கள் கோரிக்கை வைக்க மாட்டார்களா?

ஈஷா மையம் நடத்தும் பள்ளிக்கூடத்தில் பயிலும் குழந்தைகளை, மழையிலிருந்து பதுங்கச் சொல்வதில்லை. மழையை மழையாக அவர்கள் அனுபவித்து உணரக்கூடிய வாய்ப்பைக் கெடுப்பதில்லை. குடைகள் இன்றி அவர்களை ஒரு நாளாவது மழையில் நடத்திச் செல்லுமாறு சொல்லி இருக்கிறேன்.

கோடை வந்தால், நிலம் காய்ந்து வறண்டு இருக்கும். மழைத்துளிகள் நனைத்ததும், எல்லாம் மாறிவிடும். புல்லும், செடிகளுமாக பூமி சடசடவென்று பசுமையாகிவிடும். எங்கேயிருந்து வந்தது இந்தப் பசுமை? பூமிக்குள் விதைகள் மழைக்காகப் பொறுமையாகக் காத்திருந்தன. வருடக் கணக்கில் மழை பொய்த்த பூமியில் கூட இந்த விதைகள் பொறுமையை இழக்கவில்லை. நம்பிக்கையை இழக்கவில்லை. அதேபோல தான் உங்களுக்குள் விதைக்கப்பட்டிருக்கும் விதைகளும் பொறுமையாகக் காத்திருக்கின்றன.

சரியான சூழல் கிடைத்ததும், சடாரென்று மலர்கின்றன. சிலருக்கு சில ஜென்மங்களே காத்திருக்க நேரிடலாம். நீங்கள் ஏன் அந்தப் பட்டியலில் இருக்கிறீர்கள்? உங்களுக்கு அது இப்போதே நிகழ வேண்டும் என்பதே என் விருப்பம். உங்களுக்குள் அதற்கான சூழலை இப்போதே உருவாக்கிக் கொள்ளுங்கள்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

ஒரு கட்டத்தில் உன்னத உணர்வுகள் என்னை ஆட்கொண்டு என் வாழ்க்கை புது அர்த்தம் பெற்ற பிறகு, மழை எனக்கு மிக மிக அற்புதமானதோர் அனுபவத்தைத் தந்திருக்கிறது. இப்போதும் என் வீட்டில் திறந்தவெளி முற்றம் ஒன்று இருக்கிறது. மழை வந்தால், ஆனந்தமாக அங்கே நனைந்து கொண்டு கிடப்பேன்.

மழை வேறு, நீங்கள் வேறு அல்ல. மழை வருகையில், நீங்களே உங்கள் மீது பொழிவதுபோல் உணருங்கள். மழை என்பது உங்களுக்கு இயற்கை வழங்கும் மாபெரும் வாய்ப்பு. அடுத்த மழையில் நனைந்து பாருங்கள்!

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

வருடாந்த கல்விசார்போட்டிகள் - 2013

(Educational Contest 2013 )

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தனது கல்லூரியின் பழைய மாணவர்களினதும் அவர்கள் குடும்பங்களினதும் சிறார்கள் மத்தியில் நடத்தும் வருடாந்த கல்விசார் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. பழைய மாணவர்களினது குடும்பங்களினது சிறார்கள் இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். **விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதி திகதி *June 30th, 2013.***

இடம்: St. Stephen's presbyterian Church
3817 Lawrence Ave.East, Scarborough,Ontario, M1G 1R2

நேரம்: 8:00 AM காலம்: JULY 6th 2013.

மேலதிகவிபரங்களுக்கு:

| | | | |
|---|---|---|---|
| R. Mahendran: | 416.296.7037 | Nageswaran: | 416.299.6645 |
| Jeya: | 416.283.5265 | Namagal: | 416.283.1439 |
| Jeyarnee: | 416 431.9929 | Santhila: | 905.471.0906 |





விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா
DAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- மற்றும் பல சேவைகள்



ஜெ இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001426
**Cell : 416-624-4843**

**இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001836
**Cell : 647-385-2710**



சுரேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 350

## சொந்த மண்ணில் இந்தியாவிடம் வீழ்ந்தது இங்கிலாந்து: ஐ.சி.சி சாம்பியனானது இந்தியா

'கிரிக்கெட்டின் தாயகம்' என்றழைக்கப்படும் இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் 5 ஓட்டங்களால் வீழ்த்திய இந்திய அணி, ஏழாவதும் இறுதியுமான சாம்பியன் கிண்ணத்தை கைப்பற்றி சாம்பியனானது. பிர்மிங்காம் மைதானத்தில் நடைபெற்ற ஐ.சி.சி சாம்பியன்ஸ் தொடரின் கடைசி அத்தியாயத்தின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - இந்தியா அணிகள் பலப் பரீட்சை நடத்தின. மழை காரணமாக தாமதமாக ஆரம்பமாகிய இப்போட்டி 20-20 போட்டியாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து களத்தடுப்பினைத் தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட இந்தியாவின் ஆரம்ப வீரர்களாக தவான் - ரோஹித் ஷர்மா ஜோடி களமிறங்கினர். இந்த ஜோடி 19 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரோஹித் ஷர்மா 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து தவானுடன் இணைந்து கொண்டார் கோஹ்லி. இவர்கள் இருவரும் இணைந்து விரைவாக ஓட்டங்களைக் குவித்து 50 ஓட்டங்களை இந்தியா பெற்றபோது தவான் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் கார்த்தி (6), ரெய்னா (1) மற்றும் தோனி (0) என்று அடுத்தடுத்த விரைவாக ஆட்டமிழக்க இந்தியா தடுமாறியது. பின்னர் அதிரடியாக ஆட ஆரம்பித்த கோஹ்லியும் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் இறுதி நேரத்தில் 7வதாக களமிறங்கிய ஜடேஜா 25 பந்துகளுக்கு 33 ஓட்டங்களை பெற்று இந்திய அணியை ஒரு வலுவான இலக்கினை நோக்கி கொண்டு சென்றார்.

20 ஓவர்கள் நிறைவில் இந்தியா 7 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக போபரா 3 விக்கெட்டுக்களையும் அண்டர் சென், ட்ரெட்வெல் மற்றும் ப்ரோட் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர். தொடர்ந்து 130 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே சொதப்பலாக அமைந்தது. 2 ஓட்டங்களுடன் அணித் தலைவர் குக் வெளியேறினார். பின்னர் ட்ரொட் (20), ரூட்(7) மற்றும் பெல்(13) ஆகியோரும் சிறிய இடைவெளியில் வெளியேற இங்கிலாந்து ஆட்டம் கண்டது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த மோர்கன் மற்றும் போபரா இங்கிலாந்து நம்பிக்கை ஊட்டினர். ஒரு கட்டத்தில் 2.3 ஓவர்களுக்கு 20 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கினை இங்கிலாந்து அடைந்த நிலையில் இசாந்த் சர்மா அடுத்தடுத்த பந்தில் மோர்கன் (33) மற்றும் போபரா (30) ஆகியோரை வெளியேற்ற போட்டி இந்தியா வசமாக மாற ஆரம்பித்தது. இதனையடுத்து ஜடேஜாவின் 19வது ஓவர் போட்டியை முழுமையாக இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சென்றது. இதில் பட்லர் மற்றும் பிரஸ்னன் ஆகியோர்



ஆட்டமிழந்தனர். இறுதி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அஸ்வின் சிறப்பாக பந்து வீசி 10 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து இந்தியாவின் வெற்றியை உறுதி செய்தார். இதன் மூலம் இந்தியா 5 ஓட்டங்களினால் இங்கிலாந்தை வீழ்த்தி இறுதி ஐ.சி.சி சாம்பியன்ஸ் தொடரின் சாம்பியனாகியது. இங்கிலாந்து அதன் சொந்த மண்ணில் ஏமாற்றமடைந்தது. பந்து வீச்சில் ஜடேஜா, அஸ்வின் மற்றும் ஷர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் ஐ.சி.சி சாம்பியன்ஸ் தொடரின் ஏழாவதும் இறுதியுமான அத்தியா யத்தில் இந்தியா சாம்பியனான போது ஐ.சி.சியின் அனைத்து தொடர்களையும் கைப்பற்றிய தலைவராக டோனி மாறினார். போட்டியின் ஆட்ட நாயகனாக ஜடேஜா தெரிவானார்.

## ஜேர்மன் கால்பந்தாட்டத்தில் கிண்ணத்தை கைப்பற்றியது பேயர்ன் அணி


ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் நடைபெற்ற ஜேர்மன் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பேயர்ன் அணி, ஸ்டட்கார்ட் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. இத்துடன் இந்த சீசனில் மூன்று கிண்ணத்தை வென்ற முதல் ஜேர்மன் அணி என்ற பெருமையைப் பேயர்ன் அணி பெற்றுள்ளது. பண்டேஸ்லிகா கிண்ணம், ஐரோப்பியன் கிண்ணம் மற்றும் ஜேர்மன் கிண்ணம் ஆகிய மூன்று கிண்ணங்களையும் இந்த ஆண்டு பேயர்ன் அணி வென்றுள்ளது. பேயர்னின் தாமஸ் மியுலர் முதல் கோலையும், இடைவேளைக்குப் பின்னர் கோம்ஸ் இரண்டு கோல்களையும் போட்டனர். ஸ்டட்கார்ட் அணியின் மார்ட்டின் ஹார்நிக் இரண்டு கோல்கள் போட்டபோதும், இறுதியில் பேயர்ன் அணியே வெற்றி பெற்றது. இந்த அணியின் பயிற்சியாளரான ஜப் ஹேநிக்ஸ் பங்கு பெறும் கடைசி ஆட்டம் இதுவாகும். இவரது பயிற்சியின் கீழ், இந்த சீசனில் நடந்த 16 போட்டிகளில் இவர்கள் 15ல் வெற்றி பெற்றுள்ளனர். வருகின்ற யூன் 26ம் திகதி முதல், பார்சிலோனா அணியின் முன்னாள் பயிற்சியாளரான பெப் குவார்டியோலா பேயர்ன் அணிக்குப் பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளார்.

## உருகுவே சவாலை முறியடித்து இறுதியில் பிரேசில்!

பிரேசிலில் நடைபெற்று வரும் கொன்பெடரேஷன் கோப்பை கால்பந்து போட்டிகளின் முதல் அரையிறுதியில் உருகுவே அணியின் அச்சுறுத்தலை முறியடித்து பிரேசில் 2- 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இன்னொரு அரையிறுதி நடைபெறுகிறது. இதில் உலக சாம்பியன் ஸ்பெயினும் இத்தாலியும் மோதுகின்றன. ஆட்டத்தின் முதல் பாதி முடிவடைய 5 நிமிடங்கள் இருக்கும் போது உருகுவேயிற்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. அதனை உருகுவே வீரர் டீகோ ஃபோர்லான் வேஸ்ட் செய்ய. உடனடியாக பிரேசில் வீரர் ஃபிரெட் முதல் கோலை பிரேசிலுக்காக அடித்தார். ஆனால் இடைவேளைக்குப் பிறகு உருகுவே வீரர் எடின்சன் கவானி ஒரு கோலை அடித்து சமன் செய்தார். இதன் பிறகு ஆட்டம் சூடு பிடித்தது. பிரேசிலின் ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. குறிப்பாக தடுப்பு உத்தி சரியாக அமையவில்லை.

இதனால் பிரேசில் தடுப்பு வீரர் டேவிட் லூயிஸ் கோல் அருகே உருகுவே வீரர் டீகோ லுகானோவை மறித்ததால் சிலி நடுவர் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையே பெனால்டி கிக் கொடுத்தார். ஃபோர்லான் கோலை நோக்கி அடிக்க பிரேசில் கோல் கீப்பர் ஜூலியோ சீசர் டைவ் அடித்து இடது புறம் சென்ற பந்தை தட்டி விட்டார் கோல் வாய்ப்பு பறிபோனது. இடையில் பிரேசில் வீரர் ஹல்க் ஒருமுறை பயங்கர வேகத்தில் உருகுவே வீரர்களைக் கடைந்து பந்தை எடுத்துச்சென்று கடைசியில் கோல் போஸ்டிற்கு மேலே அடித்தார். உருகுவே யிற்கு மேலும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அந்த அணியின் சிறந்த வீரர் சுவாரேஸ் காத்துக் கொண்டிருக்க ஃபோர்லான் தானே பந்தை கோலில் அடிக்க முயன்று தோற்றார். சுவாரேஸ் வெறுப்படைந்தார். பிறகு பிரேசில் பெரிய நெருக்கடி கொடுக்கத் தொடங்கியது. சூப்பர் ஸ்டார் நெய்மார், இடது புறம் பாய்ச்சல் காட்ட நடுவில் ஹல்க்கிற்கு பாஸ் செய்யப்பட்டது ஆனால் உருகுவே தடுப்பு வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டனர். பிறகு நெய்மார் ஒரு நீண்ட பாஸை பாக்ஸிற்குள் எடுத்துச்சென்றார். தன் நெஞ்சில் தடுத்து உருகுவே கோலை நோக்கி அடித்தார். ஆனால் பெர்னாண்டோ முஸ்லேரா அதனை சரியாகத் தடுக்காததால் பந்து பட்டு வந்தது அதனை ஃபிரெட் கோலாக மாற்ற பிரேசில் கொண்டாட்டம் தொடங்கியது.

இரண்டாவது பாதி தொடங்கி 3 நிமிடத்திற்கெல்லாம் உருகுவே தாக்குதலை மூன்று முறை முறியடிக்க வாய்ப்பிருந்தும் பிரேசில் கோட்டை விட்டதால் கவானி கோலாக மாற்றி சமன் செய்தார். ஆட்டம் முடிய 5 நிமிடங்கள் இருக்கும்போது நெய்மார் கார்னர் ஷாட்டை பாய்ச்சலாக அடிக்க கோல் அருகே நின்று கொண்டிருந்த பாலிந்கோ எம்பி அருமையாக தலையால் முட்டி கோலுக்குள் திணிக்க அதுவே வெற்றி கோலாக அமைந்தது.



**எஸ். கணேஷ்**



யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும் - 2013

யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடாவினால் ஒழுங்கு செய்யப்படும் விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும் திங்கட்கிழமை, ஜுலை முதலாம் திகதி (July 01, 2013) காலை 10.00 மணி முதல் Sunnybrook Park, 1102, Leslie Street, Toronto (Eglinton Ave E, and Leslie) இல் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் நலன் விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
உணவு தேவையாயுள்ள குடும்பங்களுக்காக "உணவு சேகரிப்பு முன்னெடுப்பு" ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தங்களால் இயன்ற பழுதாக முடியாத தகரத்தில் அடைக்கப்பட்ட செப்ரெம்பர் 30 இற்கு முன் காலாவதியாகாத உணவுப் பொருட்களை கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிக விபரங்கள்: www.JaffnaHinduCanada.com
647.802.7482 / 416.930.9119 / 416.856.6900 / 416.953.3297



திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்



திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும், திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை, படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

Call: Meenakshisundram Ramasamy 416.439.2002

# உலக பணக்காரர்கள்

## நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 393

பணம் படைத்தவர்கள் அதிக பணம் படைத்தவர்களாக மாறும் போது, ஏழைகள் பரம ஏழைகளாக மாறுகின்றார்கள். இதுவே உலக நியதி போலும். உலகின் பணக்காரர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. பூமிப்பந்தில் சனத்தொகை 7.2 பில்லியன் (7,200 மில்லியன்) தொகையைத் தாண்டி விட்டது. இதில் இந்தியாவின் சனத்தொகை அதிகரிப்பு குறிப்பிடக்கூடியது. இந்த வேகத்தில் சென்றால் இந்திய சனத்தொகை, இன்றைய அதிகூடிய சனத்தொகை நாடான சீனாவை (1,400 மில்லியன் (2011)) மிஞ்சிவிடும். பணக்காரர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பும், இந்த நாடுகளில் வேகமாக அதிகரிக்கின்றன. குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளில் பணக்காரர்களின் எண்ணிக்கை கடுகதி வேகத்தில் அதிகரிக்கின்றது.

இன்றைய நாளில் (யூன் 18, 2013), உலக பொருளாதாரத்தில் $46.2 ரில்லியன் ($46.2 Trillion) பெறுமதியை உலகப் பணக்காரர்கள் தம்மகத்தே கொண்டுள்ளனர். இந்த அறிக்கையை 'The world wealth report' வெளிவிட்டுள்ளது. கடந்த வருடம் மட்டும் உலகளாவிய பணக்காரர்களின் (மில்லியனர்கள்) எண்ணிக்கை 1 மில்லியனால் அதிகரித்து 12 மில்லியன் என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது. இந்த அதிகரிப்பிற்கு ஆதன அதிகரிப்பு மற்றும் பங்குச் சந்தையில் ஏற்பட்ட அதீத அதிகரிப்பே காரணமாக கருதப்படுகின்றது.

பணம் படைத்தவர்களில் அதிகூடிய மில்லியனர்களைக் கொண்ட பகுதியாக வடஅமெரிக்கா திகழ்கின்றது. 3.73 மில்லியன் மில்லியனர்கள் வட அமெரிக்காவில் உள்ளனர். இவர்களின் மொத்த பெறுமதி $897 பில்லியன். கனடிய சனத்தொகையின் 1% இற்கு குறைந்தவர்களே மில்லியனெர்களாகக் காணப்படுகிறார்கள். கனடாவின் மில்லியனர்களின் எண்ணிக்கை 298,000 ஆகும்.

**கனடாவில் சனத்தொகையில் அதிகூடிய முதல் 10 நகரங்கள் (2011)**

| | |
|---|---|
| 1. ரொறொன்ரோ | 2,615.060 |
| 2. மொன்றியல் | 1,649,519 |
| 3. கல்ஹரி | 1,096,833 |
| 4. ஒட்டாவா | 883,391 |
| 5. எட்மென்ரன் | 812,201 |
| 6. மிசிசாக | 713,443 |
| 6. வினிபெக் | 663,617 |
| 7. வன்கூவர் | 603,502 |
| 8. பிறம்ரன் | 523,911 |
| 9. ஹமில்டன் | 519.949 |

இந்த மில்லியனர்கள் மூன்று வகையாக பிரிவு படுத்தப்படுகின்றார்கள்.
1. Millionaires next door இவர்களின் பெறுமதி $1 மில்லியனில் இருந்து $5 மில்லியன் வரை
2. Midtier millionaires இவர்களின் பெறுமதி $5 மில்லியன் தொடக்கம் $30 மில்லியன் வரை
3. Ultra millionaires, இவர்களின் பெறுமதி $30 மில்லியனிற்கு மேல்

Ultra millionaires உலக பணக்காரர்களில் 1%ஐ விட குறைவாகக் காணப்படுகின்றார்கள். அதாவது 110,000 ஆனவர்கள். Ultra millionaires ஆக உள்ளார்கள்.

புள்ளிவிபரங்களின் பிரகாரம் சனத்தொகை அதிகரிப்பு பிறம்ரன் நகரில் 20.8% ஆக உள்ளது.

மொன்றியல் நகரம் குறைந்த அதிகரிப்பு வீதம் 1.8% ஐ கொண்டுள்ளது.

### எதிர் நீச்சல் போடும் ஆதன வியாபாரம்

பலவிதமான எதிர்மறையான தகவல்கள் நாளிற்கு நாள் கனடிய ஊடகங்களால் ஆதன வியாபாரத்தை பற்றி வெளிவிடும் இக்காலத்தில் உண்மை நிலை வேறுமாதிரி காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. உலகளாவிய மக்கள் கனடிய நாட்டில் குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் முதலிட விரும்புவதே ஒரு காரணம். அண்மையில் வெளிவந்த இருப்பிட ஆதனம் சம்பந்தமான அறிக்கையில் கடந்த வருடத்தில் ஆதனம் வாங்கியவர்களில் கொங்கொங், சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாட்டு பிரஜைகள் முன்னிற்கிறார்கள். Toronto real estate board இன் மாதாந்த ஆதன விற்பனை அறிக்கையில் மே 2013 இல் வீட்டின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுக்குமாடிக் கட்டிடத்தின் வியாபாரம் குறைந்துள்ள போதிலும் Lowrise (தனிவீடு, இரு வீடுகள் சேர்ந்தவை தொடர்வீடுகள் போன்றன ஆதனங்களின் விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. யூன் 2013இன் இரண்டாவது கிழமையில் அடமானக் கடனில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இந்த அதிகரிப்பு வியாபாரத்தில் எதுவித நிலைமாற்றத்தையும் காட்டவில்லை. இவ்வாறு இருக்க யூன் 24, 2013 இலிருந்து 5 ஆண்டு அடமானத்தின் வட்டிவீதத்தில் மேலும் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

Toronto Realestate Board இல் இப்பொழுது விலை கூடிய வீடுகளின் எண்ணிக்கை அதிகமாக சந்தைப்படுத்து வதனை காணக்கூடியதாக உள்ளது. ரொறொன்ரோவின் மேற்கு பகுதியில் (West end) இல் 38 வீடுகள் $2 மில்லியனிற்கு அதிகமானவையாக MLS இல் காணலாம். குறிப்பாக

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


## HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"




**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969**

### CONVENIENCE STORE FOR SALE
Over 10 years in business. convenience / Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps..
Asking only $99,900

### Brand New Condo. For sale
**FRONT & SPADINA (Toronto)**



1 + Den. 633Sq.ft. Close to CN Tower, Rogers, Sky Dome, Aquarium... etc.
Asking price $289,900

### HOUSE FOR SALE
**HWY 07 & 9TH LINE**
4 Bedroom house for sale. 2 Garage. Close to all facilities. Price $689k.

### HOUSE FOR SALE
**LAKESHORE & PARKLAWN**
2 Bedroom house for sale. 2 Washrooms. Close to all facilities.
Asking price $419,900

### CONDO FOR SALE
**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom condo for sale. 1 Washroom. Parking, laundry. Close to TTC, mall, GTA Square mall. Price $199k.

### HOUSE FOR SALE
**EGLINTON & MIDLAND**



Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft.
3 Bedroom finished bsmt. Close to RH King School.
Asking Only $419,900

### HOUSE FOR SALE
**NEILSON & SHEPPARD**



Semi detached 4 bedroom house for sale. 2 Storey.
Asking Only $299,900

# இடது பக்கம் திருப்பும் வாகனமும் எதிர் நேரே வரும் வாகனமும் சந்திகளில் மோதல்! தீர்ப்பு!

## Left turn vehicle vs straight driving vehicles

## கனடிய தகவல் தொடர் 198

### சந்திகளில் விபத்து தீர்வு?

விபத்துகள் என்பது வீதிகளில் பல வடிவங்களில் நடக்கின்றது. விபத்துகள் ஒவ்வொன்றிலும் சரி, பிழையினை தீர்மானிக்கும் சட்டவிதிகள் (Accident fault determination rules & regulation) என்பது ஒவ்வொரு விபத்திலும் தப்புக்குரியவர் யார்? எத்தனை வீதத்தில் தப்பு என்பதனை முடிவு பண்ணுகின்றது. அதன் அடிப்படையில் காப்புறுதி கம்பனிகளின் கொடுப்பனவுகள் கொடுத்து தீர்க்கப்படுகிறது. இப்படி அனேகமாக நடக்கும் விபத்துகளில் சந்தி ஒன்றில் இடது பக்கம் திருப்பும் வாகனம் ஒன்று நேரே வந்த வாகனத்துடன் மோதிவிட்டது. இடது பக்கம் திருப்புபவரே என்று தப்புக்குரியவர் ஆகின்றார். சட்டங்களும் அதனையே வலியுறுத்து கின்றது. ஆனால் இந்த விடயங்களில் 'தீர்ப்பு' என்ற முடிவு கனடாவில் பல சந்தர்ப்பங்களில் மாறியும் நடக்கின்றது. "ரொறொன்ரோ ஸ்ரார்" பத்திரிகையில் வாகனங்களின் பிரிவு' (Wheels Section) என்னும் ஒரு தொடர் தலைப்பில்

- வாகனங்கள்
- வாகன விபத்துகள்
- வீதி ஒழுங்கு சட்டங்கள்
- வாகன விபத்துகளில் சரி? பிழை? தீர்மானம்?

போன்ற பல விடயங்களில் ஆய்வுக் கட்டுரைகளை விபரமாக எழுதி வருபவர் திரு. ஏரிக் லாஜ் (Mr. Eric Laj) என்னும் இத்துறை சார்ந்த நிபுணர். இவரது கட்டுரை தொடரில் இத்தகைய விபத்துகளில் இடது பக்கம் சந்தியில் வாகனத்தினை திருப்பும் போது விபத்தினை எதிர்கொண்டவர். பின்வரும் மூன்று சந்தர்ப்பங்களில் நிரபராதியாகலாம் என குறிப்பிடுகின்றார். அவையாவன பின்வருமாறு

1.The Vehicle approaching from the opposite direction in a straight path is traveling too fast & speed through a light in excess of the speed limit.

நேரே வந்த வாகனம் வீதியின் வரையறுக்கப்பட்ட வேகத்தினைவிட அதி வேகமாக ஓட்டி வந்து சந்தியினை கடக்க முயலும் போது அதே சந்தியில் இடது பக்கம் திருப்பும் வாகனத்துடன் மோதும் போது, நேரே வந்தவர் குற்றவாளியா கின்றார். இடது பக்கம் திருப்பியவர் நிரபராதியாகின்றார்.

2.The vehicle approaching from the opposite direction in a straight path drove through a red traffic light.

நேரே வந்த வாகனம் சிவப்பு நிற சைகையில் சந்தியில் பிரவேசிக்கும் போது இடது பக்கம் திருப்பும் வாகனத்துடன் மோதல் நடந்தால் நேரே வந்தவர் தப்புக்குரியவர் ஆகின்றார். இடது பக்கம் திருப்பியவர் நிரபராதி ஆகின்றார்.

3.The vehicle making the left turns started its turning maneuver when it was safe to do so, and traffic was clear, but during the course of turning some unexpected event occured that made the car slow or stop its turning maneuver

அதாவது சாதகமான சூழ்நிலையில் சந்தியில் இடது பக்கம் திருப்பும் போது, சில நேரங்கள் எதிர்பாராத தடைகளினால் வேகத்தினை மெதுவாக குறைக்க வேண்டிய நிலைமை, அல்லது நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டால் (பொதுவாக பாதசாரிகள் குறுக்கே போவதால் ஏற்படும் இடையூறுகள்) அந்த சந்தர்ப்பங்களில் நேரே வந்த வாகனம் மோதி விபத்து நடந்தால் இடது பக்கம் திருப்பியவர் பூரண நிரபராதியாகமாறி விட்டாலும், ஒரு குறிப்பிட்ட விகிதம் நிரபராதியாகலாம்.

இடது பக்கம் சந்தியில் திருப்பும் போது நேரே வரும் வாகனங்களுடன் உருவாகும் விபத்துகளில் சரி? பிழை? எந்தப் பக்கம் என்பதனை மூன்று வித்தியாசமான கோணங்களிலிருந்து ஆய்வு செய்கின்றார். திரு. ஸ்கொட் ஹலொக் (Mr. Scott Hallock) என்னும் இன்னொரு விபத்துகளின் புலனாய்வாளர்.

1. சந்தியில் இடது பக்கம் திருப்ப பச்சை நிற சைகை ஒளியில் நிற்பவர் சைகை ஒளி மஞ்சளாக மாறும் போது திருப்புகின்றார். அந்த நேரம் நேரே வந்த வாகனத்துடன் மோதல் நடக்கின்றது.

இடது பக்கம் திருப்பியவரே தப்புக்குரியவர் ஆகின்றார். நேராக வந்து மஞ்சள் நிற சைகை ஒளியில் சந்தியினை கடக்க முயற்சித்த வாகனத்திற்கு முதல் உரிமை வழங்கி அவரை போகவிட்டு இடது பக்கம் திருப்பியிருக்க வேண்டும். (Failing to yield the right of way) இந்த முடிவு பொதுவாக சகலரும் எடுத்துக் கொள்ளும் முடிவு! ஏனெனில் மஞ்சள் நிற சைகை ஒளியில் நேரே வந்த வாகனம் சந்தியினை கடக்கும் போது நீதிமன்றம் மஞ்சள் நிற சைகை ஒளி தொடர்பான சட்டத்தினை திருப்பி பார்க் கின்றது. அந்த சட்டப்பிரிவு ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.


A yellow light actually means stop, unless the stop cannot made safety (sec. 128 of motor vehicle act)

அதாவது பாதுகாப்பான முறையில் மஞ்சள் நிற சைகை ஒளியில் நிறுத்த முடியாது என்றால் கடந்து செல்லவும், இதன் பிரகாரம் நேரே வந்தவருக்கு மஞ்சள் நிற சைகை ஒளியில் விட்டுக் கொடுக்க வேண்டும். **பொதுவாக இப்படியான சந்தர்ப்பத்தில் நேரே வருபவரை ஆங்கிலத்தில் *'Dominant position'* அதாவது அதிகாரம், உரிமை ஓங்கிய நிலையில் இருப்பவர் எனவும் இடது பக்கம் திருப்புவரை *'Servient position'* அதாவது பணிந்து போகின்ற நிலையில் இருப்பவர் என்ற ஆங்கில சொற்றொரினை உபயோகித்து இப்புலனாய்வு நிபுணர் தெளிவு பண்ணுகின்றார்.**

சந்தியில் இடது பக்கம் திருப்ப நிற்கும் போது சைகை ஒளி சிவப்பாக மாறி விட்டது. அந்த நேரம் நேரே வந்த வாகனம் ஒன்றுடன் மோதல் நடந்து விட்டது. இந்த விபத்தில் நேரே வந்த வாகனத்தில் முழுமையான தப்பு என்பது உறுதிப்படுத்தப் படுகின்றது. (Fail to stop at red light)

இடது பக்கம் திருப்ப சந்தியில் நிற்கும்போது சைகை ஒளி சிவப்பாக மாறுகின்றது. அந்தக் கணப்பொழுதில் சந்தியினை விட்டு நகர முடியாத நிலையில் மறுபக்கத்தில் பச்சை நிற சைகையில் வந்த வாகனம் மோதி விட்டது. இங்கு பச்சை நிற சைகை ஒளியில் மறுபக்கத்திலிருந்து வந்தவர் தப்புக்குரியவர் ஆகின்றார். (Entering an intersection that is not clear) இப்படியான விபத்துகளில் 'நிருபணம்' என்பது மிகமிக சிக்கலான விடயமாகும். விபத்துக்குள்ளானவர்கள் எவரும் தங்களை நிரபராதியாகவே நிருபிக்க முயல்வார்கள். ஆனால் பின்வரும் நிலையில் சாட்சியங்கள் இருந்தால் மட்டுமே தீர்ப்பு சரியான முறையில் வழங்கப்படும். இங்கு இருபக்கக் காப்புறுதிக் கம்பனிகளின் மத்தியஸ்தர்களினால் முடிவு செய்யப்படும்.

1. வாகனத்தில் சேர்ந்து வராத, விபத்துக்கு உள்ளானவருடன் எதுவிதமான உறவு, தொடர்புகளில் இல்லாதவரின் நேரடியாக கண்ட சாட்சியம். (Outside eye witness)
2. சந்திகளில் பொருத்தப்பட்ட கமராக்களில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள். (Traffic camera evidence)
3. வாகனங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் பாதிப்புகளை வைத்து புலனாய்வு, நிபுணர்கள் வழங்கும் உறுதியான அறிக்கை



கள் (Accident report reconstructionist)


மேலே குறிப்பிடப்பட்ட மூன்று சாட்சியங்களினால் நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்படும் போதெல்லாம் இடது பக்கம் திருப்பியவர் தப்புக்குரியவர் ஆகின்றார். (At fault) நேரே வந்தவர் நிரபராதி ஆகின்றார் (Not at fault)

ஏனென்றால் புலனாய்வாளர் மேலே குறிப்பிட்டது போல நேரே வருபவர் சட்டத்தின் முன்பு அதிகாரம் ஓங்கிய நிலையில் நிற்பவர்! (Dominant Position) இருபக்கமும் வலுவான சாட்சியங்கள் மோதி, முடிவு பண்ணமுடியாத நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் 50% & 50% என தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவங்கள் பல உண்டு.

**லாம் எதிர் கியூம்மிங்** (Lam vs Cumming) என்னும் வாகன விபத்து தொடர்பான வழக்கின் தீர்ப்பு கடந்த 2002 இல் வன்கூவர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது.

வன்கூவர் நகரில் உள்ள சந்தி ஒன்றில் நடந்த இவ்விபத்தில் நேரே வந்த வாகனம்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை, அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புனர்தகனம், கல்பூசை) என்பவற்றை சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள் (பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: **647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com**



# Sell your home faster and more money

| Delaney & Westney | Maryham/Painted Post | Kingston Road & Salem | Grand Ridge And Harmony | Bur Oak/Highway 48 |
|---|---|---|---|---|
|   |   |   |   |   |
| 6+1 Bedrooms, 3 W Rooms Finished Bsmt With 3Pc Washroom | 3 Bedrooms, 2 W Rooms Finished Basement | 3 Bedrooms, 3 W Rooms Walk-Out To A Large Wooden Deck And Patio | 4 Bedrooms, 3 W Rooms Eating Area With W/O To Yard | 3 Bedrooms, 3 W Rooms Interlock Drwy Built-In Garage |
| **Main St. / 9th Line** | **9th Line/South Of 16th** | **Mccowan/16th Ave** | **Ravenshoe Rd /Hwy48** | **14th &9th** |
|   |   |   |   |   |
| 4 Bedrooms, 3 W Rooms 2nd Floor Laundry Service Entrance From Garage | 3+1 Bedrooms, 3 W Rooms Freshly Painted Through Out, Double Car Garage | 3 Bedrooms, 3 W Rooms Fantastic Location, Interlock Walkway | Excellent Investment Property Is 123 Acres, | 4 Bedrooms, 4 W Rooms Open Concept Main Flr. Eat-In-Kitch |
| **W Of 9th Line / Bur Oak** | **Sheppard/Port Union** | **9th Line And 14th Avenue** | **Steeles & Markham 'Staines'** | **Kingston/Meadowvale** |
|   |   |   |   |   |
| 5 Bedrooms, 3 W Rooms 2860 Sq Ft. Main Floor 9'Ceiling & Office | 4+1 Bedrooms, 4 W Rooms Large Breakfast Area With Walk Out To Large Deck | 4 Bedrooms, 4 W Rooms Upgraded Kitchen With Walk-Out To Deck | 6+1 Bedrooms, 5 W Rooms Master Bedroom W/Gas Fireplace And 5 Pc Ensuite | 5 Bedrooms, 4 W Rooms Oak Staircase W/Iron Pickets, Granite Counters In All Baths |

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



RE/MAX

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative/Builder

**Direct 416 - 276-1225**

**Email: esrinathan@yahoo.com**

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# கனடா ஒரு கண்ணோட்டம்

03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒட்டாவாவில் உள்ள எனது நாடாளுமன்ற உறுப்பினர்:

*உங்கள் அரசாங்கப் பிரதிநிதிகளின் பெயர்களையும், மற்றும் பிற முக்கிய விபரங்களையும் குறித்து வைப்பதற்கு இந்தப் பக்கத்தைப் பயன்படுத்தவும்.*

### எனது கூட்டாட்சித் தேர்தல்தொகுதி:

## மாகாண ஆட்சி

அரசுத் தலைவர்: எனது மாகாணத்துக்கான அரசியின் பிரதிநிதி, உப ஆளுநர்:

அரசாங்கத் தலைவர்: பிரதமர்:

மாகாண ஆளும் கட்சி:

மாகாண எதிர்க்கட்சிகள், தலைவர்கள்:

மாகாண பிரதிநிதிகள்:

எனது மாகாணப் பிரதிநிதி:

### ஆள்புல ஆட்சி

அரசுத் தலைவர்: எனது ஆள்புலத்தின் ஆணையாளர்:

அரசாங்கத் தலைவர்: பிரதமர்:

எனது ஆள்புலப் பிரதிநிதி:

### மாநகராட்சி

நான் வாழும் இடத்து மாநகராட்சியின் பெயர்:

மாநகராட்சித் தலைவர் (மாநகராதிபதி அல்லது ஊராட்சியாளர்):

| ஆட்சிக் கூறுகள் | தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் | சில பொறுப்புகள் |
|---|---|---|
| கூட்டாட்சி | நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MPs) | தேசிய பாதுகாப்பு<br>வெளிநாட்டுக் கொள்கை<br>குடியுரிமை<br>காவல்துறை |
| மாகாண, ஆள்புல ஆட்சி | சட்டப் பேரவை உறுப்பினர்கள் (MLA)<br>அல்லது<br>தேசிய பேரவை உறுப்பினர்கள் (MNA)<br>அல்லது<br>மாகாண மன்ற உறுப்பினர்கள் (MPP)<br>அல்லது<br>பேரவை உறுப்பினர்கள் (MHA) | கல்வி<br>சுகாதார பராமரிப்பு<br>வீதிகள்<br>காவல்துறை |
| மாநகராட்சி (உள்ளூராட்சி) | மாநகராதிபதி<br>மன்றாளர்கள் | காவல்துறை<br>தீயணைப்பு<br>பனித்திரள் அகற்றல் |

மக்களவைக்கு தாம் விரும்பும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக கனடியர்கள் தேர்தலில் வாக்களிக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் தற்போதைய மக்களவை உறுப்பினர்களை அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கலாம் அல்லது புதிய உறுப்பினர்களைத் தெரிவுசெய்யலாம்.

கூட்டாட்சித் தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடப்பது வழக்கம். முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கும்படி ஆளுநர் அதிபதியிடம் பிரதம அமைச்சர் கேட்டுக் கொள்ளலாம். கனடிய அரசியல் யாப்பின்படி கடந்த தேர்தல் நடந்து ஐந்து ஆண்டுகளுக்குள் அடுத்த தேர்தல் நடக்க வேண்டும்.

கனடா 308 தேர்தல்தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மக்களவை உறுப்பினர் ஒருவரால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் குறிச்சியே தேர்தல்தொகுதி ஆகும். ஒவ்வொரு தேர்தல்தொகுதியிலும் வசிக்கும் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்களவை உறுப்பினர் ஒவ்வொருவரும் மக்களவையில் அமர்வர்.



18 வயதுக்கு மேற்பட்ட கனடியப் பிரசை எவரும் கூட்டாட்சித் தேர்தலில் போட்டியிடலாம். தேர்தலில் போட்டியிடுவோர் வேட்பாளர்கள் எனப்படுவர். ஒரு தேர்தல் தொகுதியில் பலர் போட்டியிடலாம்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் சேர்ந்த வாக்காளர் தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்கலாம். அதிகப்படியான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அந்தத் தேர்தல்தொகுதியின் பிரதிநிதியாக மக்களவையில் அமர்வார்.

மக்களவை உறுப்பினர் ஒருவர் தனது தேர்தல்தொகுதியில் வசிக்கும் ஒவ்வொருவரையும், தனக்கு வாக்களிக்காதவர்களையும், பிரதிநிதித்துவம் செய்பவர். உங்கள் மக்களவை உறுப்பினரே உங்களைக் கூட்டாட்சி அரசாங்கத்துடன் இணைப்பவர். உங்கள் மக்களவை உறுப்பினர் உங்களுக்குப் புரியும் உதவிகள்:

- புதிய சட்டங்கள் முன்மொழியப்படும்பொழுது உங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தல்,
- உங்கள் சார்பாக கூட்டாட்சி குறித்து வினா எழுப்புதல்,
- கூட்டாட்சி அரசாங்கத்திடமிருந்து உங்களுக்கு ஏதாவது தகவல் தேவைப்பட்டால், அல்லது அதனுடன் உங்களுக்கு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், உங்களுக்கு உதவுதல்.

உங்கள் மக்களவை உறுப்பினருடன் நீங்கள் தொடர்புகொள்வது எளிது. தொலைபேசி விபரக்கொத்தின் நீலப் பக்கங்களைப் புரட்டி 'கனடா அரசாங்கம்' என்னும் தலைப்பின்கீழ் பார்த்து அவருடைய பெயரைக் கண்டறியவும். 'கனடா அரசாங்க தகவல்' என்னும் தலைப்பின்கீழ் உள்ள இலவச தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தவும். உங்களுக்கு மறுமொழி கூறும் தகவல் அதிகாரியிடம் உங்கள் முகவரியைத் தெரிவிக்கவும். உங்கள் மக்களவை உறுப்பினரின் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் அவர் தெரிவிப்பார்.

தொடரும்...

*- மனி வேலுப்பிள்ளை*

# உலக பணக்காரர்கள்

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ரொறொன்ரோவின் மேற்கு பகுதியில் High park, baby point, Bloor west village, Thorn crest village, Humer valley village, Kingsway போன்ற பகுதிகளில் விலை கூடிய வீடுகள் விற்பனையில் உள்ளதனை அவதானிக்கலாம்.

Kingsway இல் ஒரு வீட்டின் விலை $5,895 மில்லியனிற்கு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களிற்கு மேலாக ஆதன விலையின் அதிகரிப்பின் அதிகரிப்பே இதற்குரிய காரணம் எனினும் 2 மில்லியனிற்கு மேற்பட்ட விலையுள்ள ஆதனங்களின் விற்பனை மந்தமாகவே உள்ளது.



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# GRADE 9 FAST TRACK PREPARATION FOR HIGH SCHOOL

# MATH & SCIENCE

**FROM JULY TO AUGUST**

**We Cover 100% of the School Curriculum Within Two Months**

***We Used MCGRAW - HILL Ryerson Mathematics Text Book & Science Text Book***

**Teached By More Than 10 Years Experience Certified Teachers**

*How Do Program Work To My Child?*

We Do More Sample Exam Questions & More Exams On Each Units. Also We Inteduce.

*Why Do I Send My Child To This Program?*

**Contact: 416.738.8824**

*3011 Markham Road, Unit 58*
*Scarborough, ON M1X 1L9*

# காலத்தோடு வளரும் கணினிகள் -24

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் இணைய உலாவியான (இன்ரநெற் எக்ஸ்புளோரர் (Internet Explorer) எனப்படும் மென்பொருளைப் பயன்படுத்துவதற் குரிய செயன்முறைக் குறிப்புக்களைக் கவனித்தோம். இந்த மென்பொருள் மைக்கிரோ சொவ்ற் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதால் வின்டோஸ் எக்ஸ்பி, வின்டோஸ் 7 போன்ற இயக்க அமைப்பு மென்பொருட்களுடன் (Operating System Software) கிடைக்கும். இதனால் மிகவும் பிரபல்யமான இணைய உலாவியாக விளங்குகிறது. சில சந்தர்ப்பங்களில் இந்த உலாவி செயலற்று (Corrupted) விடுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் கணினியில் இந்த மென்பொருளை இயக்க அமைப்பு மென்பொருள் மூலம் திரும்பவும் நிறுவிக் கொள்ள வேண்டும். உங்களின் கணினியில் குறைந்த பட்சம் வேறொரு இணைய உலாவி மென்பொருள் இருத்தல் நல்லது. இன்ரநெற் எக்ஸ்புளோரர் செயலற்றுக் காணப்படும் நேரத்தில் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் பல இணைய உலாவி மென் பொருட்கள் பாவனையில் உள்ளன. இவற்றை இணையம் மூலமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இவற்றில் Netscape, Google Chrome, Mozilla Fire Fox, Opera Browser, Safari போன்றவை முக்கியமானவை. இன்ரநெற் எக்ஸ்புளோரர் என்ற இணைய உலாவி மென்பொருளுடன் மேலே குறிப்பிடப்பட்டவற்றில் ஏதோ ஒரு இணைய உலாவி மென்பொருளைக் கணினியில் நிறுவிக்கொள்ளுதல் நல்லது. இணைய உலாவி மென்பொருட்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதால் இவற்றின் Shortcuts ஐகன்கள் டெஸ்க்ரொப்பில் இருப்பது நல்லது. இயங்கிக் கொண்டிருக்கும் கணினியில் இன்ரநெற் எக்ஸ்புளோரர் அல்லது ஏனைய உலாவியின் ஐகனை டபிள் கிளிக் செய்து இணையத்திற்குச் செல்லலாம். கணினி அடிப்படை அறிவு இல்லாதவர்களும் குறைந்தளவு நேரத்தில் இணையத்தளங்களைப் பார்வையிடப் பழகிக் கொள்ளலாம்.

இந்தக் காலத்தில் இணையத்தளப் பாவனை மிகவும் முக்கியமானதாக உள்ளது. கணினி யறிவு எங்களுக்கு இல்லையென நினைத்து இணையத் தளங்களையும் பார்வையிடாது இருக்க வேண்டியதில்லை. ஒரு சில மணித்தியாலங்களில் இணையத்தளங்களைப் பார்வையிடக் கற்றுக் கொள்ளலாம். கணினியை இயக்குவதற்குக் கூடத் தெரியா விட்டால் ஆரம்பத்தில் வேறு ஒருவரின்




துணைகொண்டு கணினியை இயக்குவித்து விட்டு இணையத்தளங்களைப் பார்வையிட லாம். இந்தத் தொடர்கட்டுரையை வாசித்து யாரின் உதவியின்றியும் கணினியை இயக்கவும், இணையத்தளங்களைப் பார்வை யிடவும் கற்றுக்கொள்ளலாம். கணினிப் பாவனையும், இணையத்தளப் பாவனையும் எல்லோருக்கும் தேவையான விடயமாக உள்ளது. வீட்டில் உள்ள பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் கணினியைக் கற்பித்துக் கொள்வார்கள். எல்லோரும் கணினிப் பாவனையாளர்களாக மாற வேண்டும் என்ற நோக்கத்திலேயே 'விளம்பரம் பத்திரிகை' நிறுவனத்தினரின் உதவியுடன் இந்தத் தொடர்கட்டுரையை எழுதி வருகின்றேன். இதுவரை இந்தத் தொடர்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிச் சுருக்கமாக மீளாய்வு செய்து கொண்டு தொடரலாம் என்று நினைக்கின்றேன்.

ஆரம்பத்தில் கணினியின் வரலாற்றை ஆராய்ந்தோம். எவ்வளவோ வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்து படிப்படியாகக் கணினித்துறை வளர்ச்சி பெற்றுள்ளதை நாங்கள் கவனிக்கலாம். கணினித்துறை சார்ந்த பல ஆங்கிலச் சொற்களையும் அவற்றிற்கான தமிழ்க் கலைச்சொற்களையும் அறிந்து கொண்டிருப்பீர்கள். சில சொற்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட தமிழ்க் கலைச் சொற்கள் பாவனையில் இருப்பதையும் அவதானித்திருப்பீர்கள். இரண்டு கணினித்துறை சார்ந்தவர்கள் உரையாடும் பொழுது பயன்படுத்தும் பல சொற்களை இந்தத் தொடர்கட்டுரை மூலமாக அறிந்திருக்கலாம். மேலும் கணினியின் வகைகள், கணினியின் பிரதான பாகங்கள், கணினி எவ்வாறு இயங்குகின்றது போன்ற பல விடயங்களை ஆராய்ந்தோம். கணினி யின் விசைப்பலகையில் உள்ள எழுத்துக்கள், குறியீடுகள் பற்றிய விபரங்களையும் ஆராய்ந்தோம். ஒரு கணினியை இயக்குவதற்குத் தேவையான செயன்முறை அறிவையும் இந்தத் தொடர்கட்டுரை மூலமாகப் பெற்றிருக்கலாம். இணையம், மின்னஞ்சல், சமூக வலைப்பக்கங்கள் பற்றிய விபரங்களையும் ஆராய்ந்து கொண்டோம். இதனையடுத்து இணையத்தளப் பாவனைக்குப் பயன்படும் செயன்முறை விடயங்களைப் பற்றி இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கின் றோம். தொடர்கட்டுரையை ஆரம்பத்தில் இருந்து வாசிக்கத் தவறியவர் கள் விளம்பரம் இணையத்தளத்திற்குச் சென்று (http://www.vlambaram.com) ஆவணப்பகுதியில் வாசித்துக் கொள்ளலாம். இந்தத் தொடர்கட்டுரை கணினி பற்றிய பொது அறிவை விருத்தி செய்யும் நோக்கில் எழுதப்பட்டாலும் கணினிக்குப் புதியவர்களின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு அடிப்படை விடையங்களைப் பற்றிய செயன்முறைக் குறிப்புக்களையும் இந்தத் தொடர்கட்டுரையில் எழுதி வருகின்றேன். அதிகமான செயன்முறைக் குறிப்புக்கள் ஐபிஎம் குடும்பக் கணினிகளுக்கே பொருத்தமானதாக இருக்கும். அப்பிள் குடும்பக் கணினிகளைப் பொறுத்தவரையில் சில வேறுபாடுகள் இருக்கும். இந்தச் சுருக்கமான மீளாய்வுடன் கட்டுரையைத் தொடர்கின்றேன்.

வலைப்பக்கங்களில் பணம் வசூலிக்கும் நிலை இருந்தால் சொப்பிங் கார்ட் (Shopping cart) உள்ளடக்கப்பட்டிருக்கும். சொப்பிங் கார்ட் இல் பொருட்களை அல்லது தேவையான சேவைகளைத் தெரிவு செய்த பின்பு கிரடிக் கார்ட் தகவல்களை கொடுக்கும் வலைப்பக்கம் திறக்கப்படும் பொழுது வலைப்பக்க முகவரியைக் கவனித்தீர்களானால் https:// எனத் தொடங்குவதைக் காணலாம். இதன் அர்த்தம் hyper text transfer protocol secured என்பதாகும். இந்தக் காலத்தில் இது ஒரு பொதுவான விடயமாக உள்ளது. ஆனாலும் கிரடிக் கார்ட் விபரங்களை https:// என்று குறிப்பிடாத பக்கங்களில் குறிப்பிட வேண்டாம். https:// என்று தொடங்கும் வலைப்பக்க முகவரி இருந்தால் கொடுக்கப்படும் கிரடிக் கார்ட் விபரங்கள் என்கோடிங் (encoding) செய்யப்பட்டுச் சேமிக்கப்படுவதால் யாரும் கிரடிக் கார்ட் விபரங்களை பார்க்க முடியாதவாறு இருக்கும். ஆனாலும் நூறு வீதம் பாதுகாப்பானது என்று கூறிவிட முடியாது. புதிய புதிய ஆரோக்கியமான தொழில் நுட்பங்கள் நாளுக்கு நாள் வருவது போலாக திருடுவதற்கும் புதிய வழிகளை சிலர் கண்டு பிடித்துக் கொண்டு இருப்பது வழமையானதாகும். குறைந்தளவு எல்லை கொண்ட கிரடிக் கார்ட் இனைப் பயன்படுத்துதல், பே பால் (Pay Pal) முறை மூலம் பணம் செலுத்துதல் போன்ற சில நடவடிக்கைகளைச் செய்தல் பாதுகாப்பான-தாக இருக்கும்.




என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரி யப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at **Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228**

# ஓடும் நீர் உறைவதில்லை 168

## இருவகை மாணவர்கள்

கற்றல் எல்லையற்றது. கற்பதற்கான விடயங்களும் எல்லையற்றன. எமது கற்றலானது பிறப்பில் இருந்தே ஆரம்பமா கிறது. ஐம்புலன்களின் ஊடாக நாம் தகவல்களைப் பெற்றுக்கொள்கிறோம். ஆரம்பத்தில் எமது கற்றலானது தொடு உணர்வு, கேட்டல் அவதானித்தல் என்பவற்றின் மூலம் ஆரம்பித்து படிப்படியாக வார்த்தைகளைக் கையாளும் திறனுக்கு வளர்ச்சியடைந்து செல்கின்றது. எமது ஆரம்பகாலக் கற்றலின் அடிப்படையாக எமது பெற்றோர்களும், நெருக்கமானவர் களும் சூழல் சார்ந்த ஏனையவைகளும் அமைகின்றன. மிகவும் சிறப்பு வாய்ந்த, மிகவும் சக்தி வாய்ந்த கற்றலுக்கான காலப்பகுதி முதல் ஐந்து வருடங்கள் ஆகும். ஆனால், இக்காலப் பகுதி, அதி பெரும்பாலான பெற்றோர்களாலும் நெருக்க மானவர்களாலும் தவறான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு வீணடிக்கப்படு கின்றது. ஒரு குழந்தையின் கற்றலானது பாடசாலையிலிருந்து தான் ஆரம்பிக்கின்றது என்ற மனநிலை இதற்கான காரணம் என்றால் மிகையாகாது.

ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஒரு மாண-வரின் கற்கும் தன்மையைத் தீர்மானிப்பவர் கள் அந்த மாணவருக்கு கற்பிப்பவர்களே. அதாவது, எது கற்பிக்கப்படுகிறதோ, எவ்வாறு கற்பிக்கப்படுகிறதோ அதுவே ஒரு மாணவரின் கற்கும் தன்மையைத் தீர்மானிக்கின்றது. இங்கு மிகவும் முக்கியமாக நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு குழந்தையின் முதலாவது ஆசிரியர் அக்குழந்தையின் பெற்றோர்கள் என்பது தான். பெற்றோர்களின் இந்தக் கற்பித்தல் முறையானது ஒரு குழந்தை எந்தவகையான மாணவர் ஆவார் என்பதைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு குழந்தையின் ஆரம்பத் தேவையானது உணவும் அரவணைப்புமாகும். இந்த அரவணைப்பைக் கருவியாகப் பயன்படுத்தி குழந்தைகளின் கற்றல் முறையை நாம் கையாளல் வேண்டும். குழந்தைகளுக்கு எவற்றை நாம் கற்பிக்க வேண்டும் என்பதை மிகவும் சுருக்கமாகக் கூறுவதாயின், ஒரு விடயத்தில் குழந்தை தனது அச்சத்தை வெளிப்படுத்தும் போது இந்த அரவணைப்பை ஆர்வம் ஊட்டும் கருவியாக மாற்றி அந்த அச்சம் முற்றாக அகலும் வரை ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கு துணையாக இருத்தல் வேண்டும். அச்சத்தில் இருந்து தாமாக வெளிவரும் குழந்தைகள் அனுபவக் கல்வியைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதுவே அவர்களது புரிந்துணர்வை அதிகரிப்பதோடு தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது.

துரதிஷ்டவசமாக, பெரும்பாலான பெற்றோர் கள் குழந்தைகளைப் புத்தகப் பூச்சிகளாக உருவாக்குகிறார்கள். ஒருவரது வாழ்க்கை யில் மிக ஆர்வமாக தகவல்களை உள்வாங்குவதில் பொன்னான காலமாகக் கருதப்படும் முதல் ஐந்து வருடங்கள் பெற்றோர்களின் தவறான கணிப்பீட்டினால் நினைவாற்றலை மட்டும் அதிகரிக்கும் ஒரு இயந்திரமாக மாற்றப்படுவது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். பாடாசாலைக்குச் செல்வதற்கு முன்னரே வீடு பாடசாலையாக மாறிவிடுகிறது. குழந்தைகள் இரண்டு வயதை அடைவதற்கு முன்னர் மனப்பாடம் செய்வதற்கு தூண்டப்படுகிறார்கள். இக்



குழந்தைகள் தாமாக ஒன்றை உருவாக்கு வதற்கு துணிவு அற்றவர்களாகவும் எப்போதுமே மற்றவர்களில் தங்கியிருப்பவர் களாகவும் உருவாக்கப்பட்டு விடுகிறார்கள். குழந்தைகள் மட்டுமல்ல, நாமும் வார்த்தை களாகவும் வடிவங்களாகவும் தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கும் மாணவர்களே. தகவல் சேகரிப்பில் வார்த்தைகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. மாணவர்களாகிய நாம் சேகரித்துக் கொண்ட வார்த்தைகளை எவ்வாறு கையாள்கிறோம் என்பதையே எமது வாழ்க்கை பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது. அதாவது நாம் கற்றுக் கொண்ட வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடும் மாணவர்களா அல்லது கற்றுக்கொண்ட வார்த்தைகள் மூலம் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடும் மாணவர்களா என்பதையே எமது வாழ்க்கை பிரதிபலிக்கின்றது. உங்களின் வாழ்க்கை எந்த வகையான மாணவரைப் பிரதிபலிக்கின்றது?

• • •

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

## மிக மோசமான போதைப்பொருள்

மிகவும் மோசமான போதைப்பொருள் எது? என்று கேட்டவுடன் அதிக அளவில் உடலுக்குப் பாதிப்பைத் தரக்கூடிய போதைப் பொருள் என்ற எண்ணம் தான் எமக்குத் தோன்றும். எமது அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஏற்றவாறு ஒரு மதுபானத்தையோ அல்லது போதை தரக் கூடிய வேறு ஏதாவது ஒன்றையோ நாம் குறிப்பிடுவது வழக்கம். இவ்வாறு நாம் குறிப்பிடும் ஒரு மதுபானம் அல்லது பொருள் ஒவ்வொருவர் பார்வையிலும் வெவ்வேறான கணிப்பீட்டைக் கொடுக்கும். அதாவது ஒருவருக்கு மிக மோசமானதாக கருதப்படும் மதுபானமோ அல்லது போதைப்பொருளோ இன்னொருவர் பார்வையில் அல்லது அனுபவத்தில் சாதாரணமானதாகக் கருதப்படும். இதுதான் மிக மோசமான போதைப் பொருள் என்று ஒருவர் உறுதியாகக் கூறுவதற்கு இந்தப் பூமியில் உள்ள அத்தனை வகைகளையும் பயன்படுத்தியவராக இருத்தல் வேண்டும். இந்த வாய்ப்பு எவருக்குமே கிடைப்பதில்லை. அப்படியாயின் மிகவும் மோசமான போதைப் பொருள் எதுவாக இருக்க முடியும்? என்ற ஆர்வம் உங்களுக்குத் தோன்றுவது நியாயமானதே.

இந்த மிகவும் மோசமான போதைப்பொருள் எது என்பதை நாம் அறிவதற்கு முன்னர், போதை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். போதை என்றதும் தடுமாற்றம் என்பது தான் முதலில் எமது நினைவுக்கு வரும். இந்தத் தடுமாற்றம் என்பது போதையின் ஆரம்ப அறிகுறியே. போதையின் ஆரம்பத்தில் தடுமாற்றம் அடைபவர்களில் பெரும்பாலானவர்களிடம் பாதி நடிப்பும் மீதி தடுமாற்றமாகவும் இருக்கும். தாம் உபயோகிக்கும் போதைப் பொருளை கையாளக்கூடிய நிலையில் இருப்பவர்கள் போதை ஏற ஏற போதைப்பொருள் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடுகிறார்கள். போதைப்பொருள் இவர்களைக் கையாளத் தொடங்கி விடும். போதைக்கு அடிமையாகும் மனிதர்கள் தமது சுய நினைவையும் சுய கட்டுப்பாட்டையும் இழந்து விடுவார்கள். அதாவது தாம் பயன்படுத்திக் கொண்ட அந்தப் பொருள் தான் தமது தற்போதைய நிலைக்கு காரணமாக இருக்கின்றது என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். இவ்வாறான பல தன்மைகள் போதைக்கு அடிமையா பவர்களிடம் காணப்படுவதற்குக் காரணம் அவர்களது மனநிலையாகும். இந்த மன நிலையைத் 'தன்னிலை மறந்த நிலை' எனக் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது. எனவே போதை என்பது ஒருவர் தன்னிலை மறந்த நிலையை அடைதல் என்றும் போதைப் பொருள் என்பது ஒருவரை தன்னிலை மறக்கச் செய்யும் தன்மை கொண்ட ஒன்று என்றும் பொருள் கொள்ளல் பொருத்தமானதாகும்.

இப்போது, நான் குறிப்பிடவுள்ள போதைப் பொருளை 'மிகவும் மோசமானது' எனக் குறிப்பிடுவதற்கான காரணங்களைக் கவனத்தில் கொள்வோம். இந்தப் போதைப் பொருளை எவரும் பாவிக்கலாம். எவ்வளவும் பாவிக்கலாம். எங்கும் பாவிக்கலாம். எப்போதும் பாவிக்கலாம். இதைக் கொடுப்பதற்கும் பெறுவதற்கும் எந்த வரையறைகளோ கட்டுப்பாடுகளோ இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பொருளின் போதைக்கு உட்படுபவர்கள் இந்தப் போதைப் பொருளுக்கு மட்டுமல்லாது அதைக் கொடுப்பவருக்கும் அடிமையாகிவிடுவார்கள். இந்த அளவிற்கு மோசமான அந்த போதைப் பொருள் எது? தன்னிலை மறந்த நிலைக்கு எம்மை உள்ளாக்கும், உள்ளாக்கியிருக்கும் "இரவல் அறிவு" தான் அந்த மோசமான போதைப் பொருள். இதுவரை நாம் உள்வாங்கிக் கொண்ட, தொடர்ந்தும் உள் வாங்கிக் கொண்டிருக்கின்ற ஆனால் நமது சொந்த வாழ்க்கையைச் சிறப்பாக்குவதற்கு அறவே பயன்படுத்த முடியாத, சுய அனுபவமாக மாற்றப்பட முடியாத, இரவல் அறிவே மிகவும் மோசமான போதைப்பொருள். இந்த மோசமான போதைப்பொருளின் தாக்கத்துக்கு அகப்படாமல் வாழ்வதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. சொந்த வாழ்க்கைக்குப் பயன்படாத இரவல் அறிவை சுடுகாட்டுக்கு அனுப்பி வைப்பதுதான் அந்த வழி.

**KG Master:** --
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்



On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

**Math Adventure Club!!!**

# Summer Math Program 2013

## THE MOST ADVANCED PREPARATION FOR G12-UNIVERSTIY STANDARD

## And all other grade as well from Gr1 to Gr12

**Complete your school math before school starts Sept 2013**

**Starts July 2nd 2013**

**INFO:**
**416.666.5515**
**416.878.3215**

* Pre-algebra
* Pre-calculus
* University & College Algebra
* Business Calculus

The most productive results found within the last 12 yrs of experience in teaching math.

Advanced function & Calculus and Vector will be covered based on Ontario Math Curriculum.

Gr12 students will also get to learn 1st year university math in advance as a bonus.

The hardest Practice Question will be covered from different text books

Students are guaranteed to have a high average in their math course.

Students in Gr. 9, 10, &11 will finish the full math curriculum for their grade school starts.ts.

Learn in Advance and Score the highest in the class.

Location: ***Markham & Steeles***

## APPRECIATION LETTERS

NEGI SAMSOM LLP
15 Wertheim Court, Suite 206,
Park Place Corporate Centre,
Richmond Hill, ON LAB 3H7
Phone: 289 597 0606

*I would like to introduce myself as Raphael Samson; I am a practicing Lawyer and partner of Negi Samson LLP.*

*Sharma has a wonderful rapport with people of all ages especially students, and the art of teaching and simplifying the Ontario Math Curriculum and making it easy and interesting at the same time.*

*He understands each student's level and works to improve them equally. I have enrolled my children in the "learn in advance" and recommend this brilliant program of math studies to everyone!-*

*I recommend Mr. Sharma to all without reservation.*

*Yours Truly ,*
***Negi Samson LLP***


Binaya Nepal
222-195 Forum Drive,
Mississauga, ON L4Z 3M5
Tel: 905-756 4840

*My daughter was enrolled to Sharma's math class this year when she was notified by her grade 11 math teacher that math was just not the subject for her.*

*I was rather appalled and took her to Sharma and the result were phenomenal. She finished Calculus and Vector with a high score and ranked in the top 3 in her class and accepted to all her university programs.*

*Thank You Sharma.*

*Your truly,*
***Binaya Nepal***
*Licensing Process Lawyer Candidate.*



Math Adventure Club!!
Preparing Students to Be A Math Genius.
"Become a child math genius"
Dear Parents!
Won't you be proud of your child when they become math genius around the world.
We know that only a few children want to be in this category, and those children are special.
Don't worry!
We evaluate and train them to do well in math. If your child, done
G6 & G 7 call us for a
Free Evaluation
Summer Program
Start July 22, 2013
You can Register at:
416 666 5515 / 416 878 3215

# விடுமுறை கால விசேட வகுப்புகள்

## கணித வகுப்புக்கள்

3ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான கணித பாட வகுப்புக்கள் அநுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன

- ஒன்ராறியோ பாடத்திட்டம்
- இலவச பயிற்சிப் பரீட்சைகள்
- நியாயமான கட்டணங்கள்
- இலவச பாடக் குறிப்புகள்
- தனிப்பட்ட வகுப்புக்கள்




**Call us: 416 - 726 – 4417**

## சதுரங்கப் பயிற்சி வகுப்புக்கள்
## CHESS CLASSES



சிறுவர்களின் நினைவாற்றல், மன ஒருங்கிணைப்பு, பல்முகச் சிந்தனை, துரித முடிவெடுக்கும் ஆற்றல் என்பவற்றை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை நிற்கும் சதுரங்க விளையாட்டை ஆரம்பம் முதல் தெளிவாகவும் இலகு நடையிலும் சதுரங்க விளையாட்டில் பல வருட அநுபவம் உள்ளவரும் கனேடியப் பாடசாலைகளில் பயிற்சிகளை வழங்கும் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன

**5 வயது முதல் 15 வயது வரையான சிறுவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

எமது மாணவர்களில் பலர் கனடாவில் நடைபெறும் சிறுவர்களுக்கான சுற்றுப்போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**Call us: 416 - 726 – 4417**

சிறுவர்களுக்கான

## கணனி வகுப்புக்கள்
## COMPUTER CLASSES



நவீன யுகத்தில் எழுத்தறிவிற்கு இணையான கணனி அறிவை உங்கள் குழந்தைகளுக்கும் வழங்குங்கள்

4 வயது முதல் 12 வயது வரையான சிறுவர்களுக்கான கணனி பயிற்சி வகுப்புக்கள்

கணனியுடன் துணையுடன் கணிதம், ஆங்கிலம், தமிழ், உள்ளிட்ட பாடங்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படும்.

**Call us: 416 - 726 – 4417**

அனைத்துப் பாடநெறிகளையும் ஒரே கட்டணத்துடன் கற்றுக் கொள்ள இன்றே அழையுங்கள்

**416-726-4417**

கணித வகுப்புகள் வீடுகளுக்கு வந்து தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்

TBC Toronto Business College

கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
Duration: 35 Weeks (co-op available)

Business Administration
Duration: 26 Weeks

Computerized Accounting
Duration: 26 Weeks

Medical Office Admin.(MOA)
Duration: 32 Weeks

Personal Support Worker(PSW)
Duration: 26 Weeks (NACC Diploma)

SECOND CAREER

யார் தகுதி உடையவர்கள்?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்
New Immigrants are also Welcome

Certificate Courses

MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

OACC PROUD MEMBER

416-291-5155

4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# மண்ணின் மைந்தர்



கார் மேகமே வலிக்கின்றதே
பார் மேகமே சொந்தமண் கண்ணீர் சொரிகின்றதே
மண்ணின் மைந்தர் எங்கே காணவில்லையே
எங்கு தேடியும் தென்படவில்லையே
மேகமே மறைத்து வைத்தாயோ
ஒரு முறை காட்ட மாட்டாயோ
நட்சத்திரமாய் மின்னுகின்றாரோ
இல்லை ஒளிதர மெழுகுவர்த்தியாய் உருகிப்போனாரோ
சூரியக் கதிர்களாகி பகைவரை சுட்டெரிப்பாரோ
கல்லறையில் தூங்குகின்றாரோ
சற்று நேரம் இளைப்பாறவாமோ
கருவறை அழுகின்றதே தழுவிடத் துடிக்கின்றதே
நெஞ்சும் நெருப்பில் வேகின்றதே
வெற்றிடத்தை நிரப்ப வழியின்றி தவிக்கின்றதே
வெறிச்சோடி கிடக்கின்றதே வீதி கிடக்கின்றதே
எங்கே அந்த வீரர்கள் வீறுநடை போட எங்கே அந்த வீரர்கள்
மறவர் குல மாணிக்கங்கள் மதுரமாய் வீசுங்கள் வீணையாய்
மாறுங்கள் விளையாடிப் பாருங்கள் காற்றினில்
கலந்து கானம் இசையுங்கள் ஈழம் நமதென்று முரசு கொட்டுங்கள்
உம் இழப்பை நாம் ஈடு செய்யவே
உரிமை கீதம் பாடுங்கள்
உம் கனவு ஈடேறும் என்றே நம்புங்கள்.

- இனியா -

# ஞானாவின் சிறுவர் செந்தமிழ்ப் பாடல்



எந்தன் செல்ல நாய்க்குட்டி
வாலைச் சுழட்டி வளையும் நாய்க்கு
வண்தமிழ்ப் பாட்டுப் பாடுவோம்
மாலை நேரம் மகிழ்ந்து கூடி
மழலை நாங்கள் ஆடுவோம்
எங்கள் வீட்டை என்றும் காக்கும்
எமது அன்பு நாய்க்குட்டி
தொங்கிப் பாய்ந்து தோலை நக்கி
தடவச் செய்யும் நாய்க்குட்டி
வெளியில் போக வாஞ்சை கொண்டு
வாலை வாலை ஆட்டுமாம்
வழிகள் எல்லாம் வடிவாய்ப் பார்த்து
வீடு வந்து சேருமாம்
தீயர் காணின் தொங்கிக் குரைத்து
துரத்தி ஓட வைக்குமே
நாயைப் பார்த்து நாமும் என்றும்
நன்றி செலுத்தி வாழ்வமே!

*ஆக்கம்: அருட்கவி தம்பிஜயா ஞானகணேசன்*


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

Summer TUTORING

"By Qualified & Experienced Tutors"

KEEN TUTORING CENTRE

- ➢ MATH, SCIENCE
- ➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- ➢ Adv. FUNCTIONS, CALCULUS &VECTORS
- ➢ UNIVERSITY 1st & 2nd year

✓Get a head start for High Scoring

Call : 647 341 3975, 647 869 3974

# நீரிழிவு நோயை நீக்குவது எப்படி?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உலக மக்கள் தொகையில் நீரிழிவு நோயானது விகிதாசாரப்படி வருடந்தோறும் அதிகரித்துச் செல்வதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இந்த நோயின் பாதிப்புகள் மனித வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### நீரிழிவு ஏன் ஏற்படுகிறது?

1. அறுசுவை உணவு முறைப்படி சாப்பிடாததனால் வருகிறது. அதாவது கசப்பு, துவர்ப்பு சுவை அதிகமாக உணவில் சேராததனாலும் வருகிறது.

2. இன்சுலின் சரிவர சுரக்காததால் வருகிறது. நாம் உண்ணும் உணவிலுள்ள சர்க்கரையை குளுக்கோஸ் சக்தியாக மாற்றி இரத்தத்தில் கலக்கச் செய்வது கணையத்தின் வேலையாகும். இந்த கணையமானது பாதிப்புக்குள்ளானால் சர்க்கரை முறையாக வெளியேற்றப்படாமல் இரத்தத்திலும் சிறுநீரிலும் அது கலந்து விடுகிறது.

3. அளவுக்கு அதிகமாக சாப்பிடுபவர் களுக்கு, இனிப்பு அதிகமாக உட்கொள்பவர் களுக்கு நீரிழிவு வரும்.

4. அளவுக்கு மீறி கட்டுப்பாடற்ற உடலுறவு கொள்பவர்களுக்கு வரும். பெரும்பாலும் நடுத்தர வயதினருக்கே வருகிறது.

5. பரம்பரையாகவும் குறிப்பிட்ட குடும்பத்தினருக்கு வருகிறது.



6. தொடர்ச்சியான மன அழுத்தம், மிகுந்த கவலை வாழ்வில் விரக்தி என்பன உடையவர்களுக்கு வருகிறது.

7. உடல் உழைப்பின்றி சோம்பேறியாகவும் அல்லது கடின உழைப்பிற்கேற்ப உறக்கமும் ஓய்வும் போதியளவு கிடைக்காதவர்களுக்கு வருகிறது.
8. அதிகமாக மருந்து மாத்திரைகளை உட்கொள்பவர்களுக்கும், பதனிட்ட குளிர்பானங்கள் எண்ணெய் மற்றும் பால் பொருட்கள் அதிகம் கலந்த உணவுகள் அடிக்கடி சாப்பிடுபவர்களுக்கும் இந்நோய் வருகிறது.

இவ்வாறே பல காரணங்களால் நீரிழிவு உண்டாகின்றது. எனவே எதிலும் அளவுடனும் பொறுப்புடனும் இயற்கை விதிகளைப் பின்பற்றி வாழ்வை அமைத்துக் கொள்பவர்களுக்கு நீரிழிவு தோன்ற வாய்ப்பில்லை.

### நீரிழிவு நோயின் அறிகுறிகள்

1. கோபமும் மனத்தில் பதட்டமும் (Tension) அதிகமாக இருக்கும்.
2. அடிக்கடி அடக்கமுடியாத அளவு சிறுநீர் கழித்துக் கொண்டே இருப்பர்.
3. உடலில் ஏற்பட்ட புண் எளிதில் ஆறாது.
4. அதிகமான தூக்கமும் களைப்பும் சோர்வும் காணப்படும்.
5. இனிப்புப் பண்டங்கள் மீது விருப்பம் அதிகமாகும்.



6. அளவுக்கு அதிகமாக உண்ணத் தோன்றும்.
7. மயக்கம், தலைசுற்றுதல் பலருக்கு இருக்கும்.
8. பொதுவாக ஆண்மைக்குறைவு ஏற்படும்.
9. பசி உணர்வு அதிகமாக இருக்கும். பசியைப் பொறுத்துக்கொள்ளும் சக்தி இருக்காது.
10. பற்கள் பாதிப்படைவதும், உடல் அடிக்கடி மரத்துப் போவதுடன் வலியும் உணரப்படும்.
11. உடலில் எரிச்சல், தோல் அரிப்பு நா வரட்சி என்பன இருந்து கொண்டே இருக்கும்.

### உணவுமுறை

நோயாளி வயிறு புடைக்கச் சாப்பிடக்கூடாது. தினமும் மூன்றுவேளை உணவைப் பகிர்ந்து ஆறு வேளையாக அதாவது காலை 7 மணி, 10 மணி, 12 மணி, 3 மணி, மாலை 5 மணி, 7 மணி என்று உண்ணவேண்டும். எந்த காரணம் கொண்டும் அதிகமாக உண்பது அல்லது நீண்டநேரம் பசியுடன் இருப்பது கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

சோறு உண்பதானால் புழுங்கல் அரிசிதான் சிறந்தது. பொதுவாக வெள்ளைச் சர்க்கரை, இனிப்புப் பண்டங்கள் எண்ணெயில் பொரித்த பலகாரங்கள் போன்றவற்றை தொடவே கூடாது. மோர் இடையிடையே அருந்தலாம். கீரைகள், காய்கறிகள் என்பவற்றை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். அன்றாடம் உணவில் கசப்பு, துவர்ப்பு சுவையுள்ள, உணவை அதாவது பாகற்காய், கறிவேப்பிலை போன்றவற்றை மதிய உணவில் சேர்ப்பது அதிக பலனைத்தரும். வேகவைத்த காய்கறி ஒரு பங்கு, ஒரு பங்கு கீரை, ஒருபங்கு சாதம் என முறைப்படுத்தி உண்ண வேண்டும். சோற்றைத் தவிர்த்தல் ரொட்டி சப்பாத்தி சாப்பிடலாம். ஆனால் அது ஒரு பங்குதான். மிகுதி காய்கறி, கீரைகள் என்பன முக்கியம். இதை விடுத்து மாத்திரைகள் மூலம்தான் நிவாரணம் பெறலாம் என நினைத்தான் காலப்போக்கில் பல தீய விளைவுகள் ஏற்படலாம்.

காலையில் அறுகம்புல், சிறுகுறிஞ்சான், வல்லாரை இவற்றில் ஏதாவது ஒன்றின் சாற்றினை சிறிதளவு குடிக்கலாம். நெல்லிக்காய் தூள், கடுக்காய் தூள் இரண்டையும் கலந்து சிறிதளவு தினமும் சாப்பிடலாம். வெந்தயத்தை பொடிசெய்து ஒரு தேக்கரண்டியளவு உண்ணலாம். அத்துடன் காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி செய்தல் மிகவும் நன்று. அதிலும் உடல் சோர்வடையாத அளவுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

### யோகாவும் தியானமும்

***Yoga Meditation***

யோகாசனப் பயிற்சிகளில் கணையத்தை (Pancreas) செம்மைப்படுத்தப்படக்கூடிய ஆசனங்களைத் தெரிவு செய்து தினமும் பயிற்சி செய்ய வேண்டும்.

1. பஸ்ஸிமொத்தாசனம்
2. சலபாசனம்
3. நவாசனம்
4. தனுராசனம்
5. விபரீத ஹரணி
6. நாடி சுத்தி
7. உட்டியாண பந்தம்

இறுதியாக மனதில் அமைதியின்மை மன இறுக்கம் (Stress), சமநிலையின்மை (Anxiety) இருக்குமானால் நீரிழிவின் தாக்கம் அதிகரிக்கும். எனவே அவற்றை சமப்படுத்த காலையும், மாலையும் சிறிது நேரமாவது மனதை ஒரு நிலைப்படுத்தி தியான நிலையில் இருக்க பழக வேண்டும். நாளடைவில் அதிசயிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்படும்.



மேற்கூறப்பட்டவற்றை முறைப்படி கடைப்பிடித்து வரும்போது நீரிழிவு நோயை வாழ்நாள் முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், இன்சுலின் உபயோகிப்பவர்கள் நாளடைவில் மாத்திரைகளை மட்டும் உட்கொள்வதுடன் மாத்திரைகளை உபயோகிப்பவர்கள் அதை விடுத்து முறைப்படுத்தப்பட்ட உணவின் மூலமாக நீரிழிவின் தொல்லைகளிலிருந்து விடுபடமுடியும்.




416.289.2033 after 7:00pm
416.617.5721



mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவலுத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# "A GUN & A RING" ஷெல்லி அன்ரனியுடன் ஒரு நேர்காணல்

சீனாவின், ஷங்காய் மானிலத்தில் கடந்த ஆனி 15, 2013 முதல் ஆனி 23, 2013 வரை நடைபெற்ற 16வது ஷங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் தங்க தாமரை விருதிற்கு பரிந்துரைக்கப்பட்ட 12 சர்வதேச படங்களில் A Gun & A Ring படமும் ஒன்றாகும். இந்த படம் முழுக்க முழுக்க ஈழத்தழிழ் மகனால் தயாரிக்கப்பட்ட தமிழ் படமாகும். அதேபோன்று சிறந்த தமிழ் சினிமா இயக்குனர் என்ற பெயரை சர்வதேச அரங்கில் '1999' என்ற படத்தின் மூலம் நிரூபித்த திரு. லெனின் எம் சிவத்தின் கதை, திரைக்கதையில் உருவாகி ஈழத்தமிழர்களின் சினிமா வரலாற்றை சர்வதேசத்தில் பதிவு செய்த முதல் படமுமாகும். இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்திரங்களில் ஒன்றில், நடித்து ஷங்காய் சர்வதேச திரைப்படவிழாவில் பங்கு பற்றி கனடா வந்துள்ள திரு. ஷெல்லி அன்ரனி அவர்களை விளம்பரம் பத்திரிகைக்காக பேட்டி காண்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாலன்: வணக்கம். திரு. ஷெல்லி அன்ரனி. உங்களுக்கு கலை சார்ந்த துறையில் ஈடுபாடு ஏற்படுவதற்கான உந்துதலாக இருந்தது யார்?

ஷெல்லி: வணக்கம். திரு. பாலன் அவர்களுக்கு முதலில் உங்களின் விளம்பரம் பத்திரிகைக்கு நன்றி கூறுகின்றேன். அடுத்ததாக உங்களின் கேள்விக்கான பதில் என்னுடைய அப்பா தான் முதல் காரணம். எனது சிறு வயது முதலே பாட்டு பாட வைப்பதிலிருந்து நடனமாடுவது, நடிப்பு என்று ஒரு கலை ரசிகர் அவர். எனக்கு விபரம் புரியும் வயதில் தான் சொன்னார் தங்கள் குடும்பமே கலையில் ஆர்வமுள்ள குடும்பமென்று. குறிப்பாக எனது அப்பப்பா ஒரு சிறந்த தென் மோடி நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவருக்கூடாக என் பெரியப்பா சட்டத்தரணி யேசுதாசன் அவர்கள், அடுத்து என் அப்பா, அடுத்து என் அத்தான்மார் அருணா, றெஜி இப்படியாக ஏன் என் தம்பி பிறகாஷ், டார்விக் கூட கலையில் ஆர்வம் கொண்டவர்கள் தான்.

பாலன்: சின்ன வயதில் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபாடு கொண்டீர்கள்?

ஷெல்லி: எங்கட வீட்டில் நடக்கின்ற பிறந்த நாள், மற்றும் எந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வாக இருந்தாலும் சரி என் அபபா எங்களை ஏதாவது செய்ய ஆயத்தப்படுத்துவார். அப்படியாக ஆட்டம், பாட்டம் கொண்டாட்டமாக எமது வீட்டு நிகழ்ச்சிகள் அமையும் அப்படியான கொண்டாட்டங்களுக்கு வரும் எமது உறவினர்கள் அப்பாவின் நண்பர்கள் எல்லோரும் கை தட்டி எம்மை மகிழ்விப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். சில வேளைகளில் அப்பாவின் நண்பர்கள் காசு கூட தருவார்கள். இப்படியாகத்தான் நடிப்பின் மேல் ஆர்வம் பிறந்தது.

பாலன்: நீங்கள் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. படித்தீர்கள். இப்போது அமெரிக்காவில் கலை துறை சார்ந்த உயர்படிப்பினை படிப்பதாக அறிகின்றேன். எப்படி இந்த துறையை தேர்ந்தெடுத்தீர்கள்? காரணம் என்ன?

ஷெல்லி: உண்மையிலேயே நான் ஒரு சட்டத்தரணியாக வருவதாக தீர்மானித்து என் பல்கலைகழக படிப்பை ஆரம்பித்தேன். ஆனால் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற போது அங்கு நடைபெறுகின்ற நாடகம், குறும்படங்களில் நடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அப்படி நடித்த குறும்படங்கள் இரண்டில் நான் சிறந்த நடிகனாகவும் பரிசு பெற்றேன். அதை பார்த்த என் நண்பர்கள் எனக்கு கொடுத்த உற்சாகம் தான் இந்த துறையில் மேற்படிப்பு படிப்பதற்கான காரணம்.

பாலன்: இதற்கு உங்களின் பெற்றோர் எப்படி ஆதரவு தந்தார்கள்?

ஷெல்லி: நான் இந்த துறையில் மேற்படிப்பு படிக்க போகின்றேன் என்றபோது என் அம்மாவிடமிருந்து மிகவும் கடுமையான எதிர்ப்புத் தான் வந்தது. ஆனால் என் அப்பா இதற்கு ஆதரவு தந்தது மட்டுமல்லாமல் அம்மாவையும் சம்மதிக்க செய்தார். காரணம் ஒரு மனிதன் தனக்கு



விருப்பமான ஒன்றை செய்கின்ற போதுதான் அவனால் வெற்றி பெற முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர் என் அப்பா. அப்பாவையும் விட என் பெரியப்பா தான் மிகவும் எனக்கு ஆதரவாக இருந்தவர் என்பதனை இந்த இடத்தில் கூறுவது என் கடமையாகும்.

பாலன்: பாடசாலை, பல்கலைகழகங்களில் நடித்ததை விட, வேறு நாடகம், படம் எதிலும் நடித்துள்ளீர்களா?

ஷெல்லி: கனடிய நாடக கொம்பனிகளிடம் வாய்ப்பு கேட்டு சென்ற வேளையில், The Scarborough Players என்ற நாடக கொம்பனியிடம் வாய்ப்பு கேட்டு சென்ற போது அவர்கள் எனது பல்கலைக்கழக நாடக, குறும்பட அனுபவங்களை பார்த்தது மட்டுமல்லாமல் இரண்டு முறை நேர்முக பரீட்சைக்கு அழைத்துத்தான் William Shakespeare's "Much ado about Nothing" என்ற நாடகத்தில் "Borachio" கதாபாத்திரத்தில் நடிக்க தேர்ந்தெடுத்தார்கள். இந்த நாடகம் சார்ந்து Scarborough Mirror தமது நாடக விமர்சனத்தில் எனக்கு மிகவும் சிறந்த பாராட்டை தந்தது முறக்கமுடியாது. இதில் நிறைய அனுபவங்களை பெற்றுக்கொண்டேன்

பாலன்: எப்படி "A Gun & A Ring" என்ற படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது?

ஷெல்லி: அது வந்து நான் இயக்குனர் திரு. லெனின் அண்ணா அவர்களின் '1999' படத்தை பார்த்து, அவரின் ஒரு படத்திலாவது நடிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அதற்கான முயற்சியாக அவருடனான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த போது ஒருநாள் திரு. லெனின் அண்ணாவிடமிருந்து ஒரு மின்னஞ்சல் வந்தது. அதை பார்த்ததும் ஒரு கணம் என்னையே நம்ப முடியாமல் துள்ளிக்குதித்தேன். இந்த மின்னஞ்சல் தான் ஷெல்லி, நீ எனது 'ஏ கண் அண்ட் ஏ றிங்' என்ற படத்தில் நடிக்கிறாயா? என்பதாகும். இந்த வாய்ப்புக்காக காத்திருந்த எனக்கு இன்ப அதிர்ச்சி. உடனே சம்மதம் சொல்லி பதில் அனுப்பினேன். அந்த படம் தான் ஈழத்தமிழ் சினிமாவை இன்று சர்வதேச அளவிற்கு உயர்த்தியுள்ளது. இதற்காக இயக்குனர் திரு. லெனின் அண்ணா அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

பாலன்: ஷெல்லி, இந்த படத்தில் உங்களின் பாத்திரம் எப்படிப்பட்டதென்று கூறமுடியுமா?

ஷெல்லி: இந்த படத்தில் 6 முக்கிய கதா பாத்திரங்கள். அந்த ஆறு முக்கிய கதாபாத்திரத்தில் ஒன்று என்னுடையது. ஆனால் படம் வெளியிடுவதற்கு முன்பாக எனது பாத்திரம் பற்றி சொல்வதை தவிர்ப்பது நல்லதென்று நினைக்கின்றேன்.

பாலன்: ஷங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் உங்களின் A Gun & A Ring படத்திற்கு வரவேற்பு எப்படி இருந்தது?


ஷெல்லி: உண்மையிலேயே வார்த்தைகளால் சொல்ல முடியாது. அந்த அனுபவம் என் வாழ்நாளில் மறக்க முடியாது. இதற்காக என் பெற்றோர் உறவினர்கள், நண்பர்கள், இயக்குனர் திரு. லெனின் அண்ணா அவர்களுக்கு நன்றி கூறி, உங்களுடைய கேள்விக்கு பதில் கூற வருகிறேன். ஷங்காயில் எமது படத்திற்கு நாங்கள் எதிர்பார்க்காத அளவு வரவேற்பு கிடைத்தது. மூன்று படக்காட்சி காண்பிக்க பட்டது. இந்த மூன்று காட்சியுமே அரங்கு நிறைந்த காட்சிகளாக இருந்தமை குறிப்படத்தக்கது. இதில் எமது உத்தியோக பூர்வ காட்சிக்கு சீனாவுக்கான கனடிய தூதுவரின் ஷங்காய் நகர பிரதிநிதி அந்திரே கிளாக் கிறிக்னொன் (Andre Clark Grignon) கலந்து கொண்டு சிறப்பித்தது மட்டுமல்லாமல் எமது படம் பற்றி பத்திரிகையாளர் மகாநாட்டில், "A Gun & A Ring" படம் கனடிய சினிமா தரத்தினை சர்வதேச ரீதியில் உயர்த்தி எமக்கு பெருமை சேர்த்துள்ளது என்று கூறியதே எமது படத்திற்கு கிடைத்த வெற்றியாக நான் கருதுகின்றேன். இந்தப் பெருமையை ஈழத்தமிழர்களுக்கு ஈட்டித் தந்த இயக்குனருக்கு நாம் எல்லோரும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

பாலன்: ஷங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் வேறு என்ன மறக்க முடியாத அனுபங்கள் ஷெல்லி உங்களுக்கு ஏற்பட்டது என்று கூற முடியுமா?

ஷெல்லி: நிறையவே உண்டு. ஒரு சிலதை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகின்றேன். முதலாவது சிவப்பு கம்பள வரவேற்பு. அதில் நடந்து செல்லுகின்ற போது எனது மனம் எங்கோ மகிழ்ச்சியின் எல்லையில் ஊஞ்சலாடியது. இந்த வரவேற்பு இரண்டு தடவை கிடைத்தது. இது எனது வாழ்வில் மறக்க முடியாது. அடுத்தது எமது கனடிய துணைத்தூதரகம் எம்மை அழைத்து விருந்துபசாரம் செய்தமை. உலகிலேயே சிறந்த இயக்குனருக்கான ஆஸ்கார் விருதினை வென்ற ரொம் கூப்பர் (Tom Hooper) அவர்களை சந்தித்து 5 நிமிடங்கள் உரையாடியது. அவருடன் இணைந்து நடனமாடியது. ஷங்காய் மக்களின் அன்பு இப்படி நிறையவே இருக்கின்றன.

பாலன்: உங்கள் படத்திற்கு விருது கிடைக்காதது ஏன்?

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

கனடாவில் முதன்முறையாக

**Federation of Tamil Sangams of North America**
**வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை**
கனடியத் தமிழர் பேரவையுடன் இணைந்து வழங்கும்

# July 5-7
SONY CENTRE (1 Front St E Toronto, ON M5E 1B2)

26ஆவது ஆண்டு FeTNA TORONTO '13 தமிழ் விழா

## www.fetna2013.com

# நிகழ்ச்சி நிரல்

போக்குவரத்துச் சேவைகளுக்கு 416-240-0078 அழைத்துப் பதிவு செய்யவும் $5 BUS

## வெள்ளிக்கிழமை யூலை 5 நிகழ்வுகள்

**காலை நிகழ்ச்சிகள் - 9 am - 12 noon**
- நடனத் தாரகைகளின் நடன விருந்து
- ரோபோ சங்கரின் நகைச்சுவை நிகழ்ச்சி
- "தமிழா நீ என்ன செய்யப்போகிறாய்" என்ற தலைப்பில் கவிஞர் புகபாரதியின் தலைமையில் கவியரங்கம்
- நியூ யோர்சி தமிழ்ச் சங்கத்தின் கலை நிகழ்ச்சி
- சொக்கலிங்கம் சண்முகம் வில்லுப்பாட்டுக் குழுவினர் வழங்கும் "ஈழத்து மரபுவழி" வில்லுப்பாட்டு

**மதிய நிகழ்ச்சிகள் - 1 pm - 5 pm**
- தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த் தொண்டை விளக்கும் விவரணக் காணொளியும் சிறப்பு உரையும்
- பொஸ்டன் தமிழ்ச் சங்கத்தின் கலை நிகழ்ச்சி
- தனிநாயகம் அடிகளார் "தமிழ் ஆரம்" நூல் வெளியீடு
- தமிழிசைக் கலா மன்றத்தின் இசை நிகழ்ச்சி
- சாருலதா மணியின் தமிழ் இசைக் கச்சேரி
- மிட் சவுத் தமிழ்ச் சங்கத்தின் கலை நிகழ்ச்சிகள்
- தமிழ் ஆர்வலர்களை மதிப்பளித்தல்
- சி மகேந்திரன், பிரான்சிஸ் கெரிசன், நீதிபதி விக்னேசுவரன் அவர்களின் உரை

**இரவு நிகழ்ச்சிகள் - 5 pm - 11 pm**
- "No Fire Zone" விவரணக் காணொளி இயக்குனர் வடஅமெரிக்காவில் முதல் முறையாக கலம் மக்ரே (Callum Macrae) உரை
- தாயக மக்களின் வலியைப் பிரதிபலிக்கும் உணர்த்தும் வண்ணம் பிரேம் கோபாலின் நடனம்
- தமிழருவி மணியனின் சிறப்புரை
- மதுரை முரளிதரனின் ஆக்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர்க் கலைஞர்கள் பங்கெடுக்கும் கல்கியின் "சிவகாமியின் சபதம்" நாட்டிய நாடகம்.

## சனிக்கிழமை யூலை 6 நிகழ்வுகள்

**காலை நிகழ்ச்சிகள் - 9 am - 12 noon**
- ரோபோ சங்கரின் நகைச்சுவை விருந்து
- மினிசோட்டா தமிழ்ச் சங்கத்தின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி
- தமிழ் மொழி வட அமெரிக்காவில் எதிர்நோக்கும் அபாயத்தைச் சித்தரிக்கும் குறும்படம் "தமிழ் இனி"
- இலக்கிய வினாடி வினா
- நடிகர் இளவரசின் தலைமையில் விவாத மேடை

**மதிய நிகழ்ச்சிகள் - 1 pm - 5 pm**
- மிசூரி மற்றும் சார்லெட் தமிழ் சங்கம் வழங்கும் கலை நிகழ்ச்சி.
- வாசிங்டன் வட்டார தமிழ்ச் சங்கத்தின் கலை நிகழ்ச்சி
- தமிழ்த் திறன் போட்டிப் பரிசளிப்பு
- தவில், நாதசுவர இசைக்கச்சேரி
- சினிமாக் கலைஞர்களுடன் கலந்துரையாடல்
- சமூக சீர்திருத்தத்தை ஊக்குவிக்கும் நடன விருந்து
- தனிநாயகம் அடிகளாரைப் பற்றி அருட்தந்தை கிறித்து நேசனின் சிறப்புரை
- இளையோரின் "மேடைக் கோணல்" நாடகம்

**இரவு நிகழ்ச்சிகள் - 5 pm - 11 pm**
- Vijay தொலைக்காட்சியின் புகழ் நந்தாவின் நடன நிகழ்ச்சி
- இரா. சம்பந்தன் அவர்களின் சிறப்புரை
- மனுவேல் யேசுதாசன் தமிழ் இலக்கியத் தோட்டத்துடன் இணைந்து வழங்கும் "வேந்தனின் சீற்றம்" எழுத்து நாட்டுக்கூத்து
- பிரபல பாடகர் மனோ, சாருலதா மணி, Vijay தொலைக்காட்சி புகழ் சத்தியப்பிரகாசு, மற்றும் பாடகி பிரகதி, அக்னி இசைக்குழுவினருடன் இணைந்து வழங்கும் மெல்லிசை நிகழ்ச்சி

## ஞாயிற்றுக்கிழமை யூலை 7 நிகழ்வுகள்
9am - 12 noon at Novotel Toronto Centre Hotel
- தமிழ் மொழி மற்றும் இலக்கியம் சார்ந்த கலந்துரையாடல்கள்

### Side Sessions - Friday July 5th
*Business Forum (9am - 5pm)*
*இளையோர் - Youth Forum (1pm - 3pm)*
*World Tamil Organization (1pm - 3pm)*
*TGTE (3pm - 5pm)*

### Side Sessions - Saturday July 6th
*CME (8am - 12pm)*
*Thaninayagam Adigal (9am - 12pm)*
*USTPAC (1pm - 3pm)*
*Youth Forum (9am - 5pm)*
*Global Tamil Forum (3pm - 5pm)*
*Tamil Match (3pm - 5pm)*

**அனுமதி $75**
3 நாட்களுக்கும்

Gold Sponsors
SERANDIB TRAVEL Your Satisfaction is Our Success

Silver Sponsors
Gary Anandasangaree Professional Corporation
HomeLife GTA Realty Inc.
AMBIKA JEWELLERS
SKYWAY
Canadian Tamils' Chamber of Commerce
DYNEVOR EXPRESS
Aalayaa
IDHAYAM
BBT

**416-240-0078**

ONTARIO CANADA
INVEST TORONTO
Tourism Toronto


TRIDEL®
BUILT FOR LIFE
NEW PROJECT
By Tridel
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc., Brokerage*
AQUALINA
AT BAYSIDE TORONTO
SPECIAL
VIP
PACKAGE
Occupancy
Fall 2016
COMING SOON | CONTACT NOW
FOR MORE INFORMATION CALL:
HomeLife/GTA
Realty Inc., Brokerage*
* Independently owned and operated.
416-321-6969
FRONT ST. E
PARLIAMENT ST.
GARDINER EXPY
LAKESHORE BLVD. E
QUEENS QUAY E
AQUALINA
LAKE ONTARIO

# ஷங்காய் சர்வதேச திரைப்பட விழா

பதினாறாவது ஷங்காய் சர்வதேசத் திரைப்பட விழா யூன் 23- 2013 இல் இனிதே நிறைவடைந்தது. கனடாவிலிருந்து தங்கக் குவளைக்கான போட்டிக்குத் தெரிவாகிய கனடியத் திரைப்படங்கள் இரண்டில் எதற்கும் பரிசுகிடைக்காவிடினும், தெரிவாகிய வகையில் அவர்களுக்கு நாம் கொடுக்கும் உற்சாகமும், பாராட்டும் அவர்களுக்கான விருதுகளாக இருக்கட்டும். குறிப்பாக ஐ-கச் மன்ரி மீடியா விஷ்ணு முரளியின் தயாரிப்பில், சுரேஷ் ரோகினின் ஒளிப்பதிவில், பிரவீன் மணியின் இசையமைப்பில் லெனின் எம். சிவம் திரைக்கதை எழுதி நெறியாள்கை செய்திருந்த 'A Gun and A Ring' திரைப்படத்தினை ஷங்காயின் தங்கக் குவளை இறுதிப் போட்டிவரை கொண்டு சென்றதுவரை இதற்காகப் பாடுபட்ட இத்திரைப்படக் குழுவின் அனைவருக்கும் தமிழர் நாம் கொடுக்கும் பாராட்டும், உற்சாகமும் அவர்களுக்கான விருதாகட்டும்.



**- அருண் சிவகுமாரன் -**

ஷங்காய்த் திரைப்பட விழாவின் உயரிய விருது சீனரின் புராதன தேனீர்க் குவளை உருவில் தங்கத்தால் செய்யப்படும் தங்கக் குவளை விருதாகும். ஷங்காய்த் திரைப்பட விழாவில், இவ்வருடத்தின் சிறந்த திரைப்படத்திற்கான தங்கக் குவளையை ரஷ்ய திரைப்படமான மேஜர் திரைப்படம் தட்டிக்கொண்டது. இத்திரைப்படத்தை நெறியாள்கை செய்திருந்த 32 வயதினரான யூரி பிகொவ் சிறந்த இயக்குனருக்கான தங்கக் குவளை விருதைப் பெற்றிருந்தார். அதியுர்ந்த கலையாக்கம் என்ற விருதும் யூரி பிகொவ் இற்கே கிடைத்திருக்கிறது. யூரர்களின் சிறப்புத் தேர்வுக்குரிய திரைப்படமாக சுவீடன் நாட்டுத் திரைப்படமான நிலயன்ஸ் திரைப்படத்திற்குத் தங்கக் குவளை கிடைத்தது. இத்திரைப்படத்தை வில்லியம் ஒல்சன் நெறியாள்கை செய்திருந்தார். இத்திரைப்படத்திற்குத் திரைக்கதை மற்றும் வசனம் எழுதியிருந்த அங்கஸ் மக்லாக்கன் இவ்வருடத்து சிறந்த திரைக்கதையாசிரியருக்கான தங்கக் குவளையைப் பெற்றுக்கொண்டார். இத்திரைப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்திருந்த வச்சன் சர்மாவும், போல் புளும்கிறென் டோவனும் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான தங்கக் குவளை விருதைப் பகிர்ந்துகொண்டனர். சிறந்த நடிகருக்கான தங்கக் குவளை விருதும், சிறந்த நடிகைக்கான தங்கக் குவளை விருதும் கொங்கோங்-சீன திரைரைப்படமான அண்பீற்றபிள் திரைப்படத்திற்குக் கிடைத்தது. இந்தத் திரைப்படத்தில் குத்துச் சண்டை வீரராக இருந்து சமூகத்தின் தாழ் நிலையில் வாழும் ஒருவராக நடித்திருந்த கொங்கொங் நடிகர் நிக் செயங் யியகூயி சிறந்த நடிகராகவும், அவரது மகளாக நடித்திருந்த மலேசியாவைச் சேர்ந்த பத்து வயதேயான கிறிஸ்ரல் லீ சிறந்த நடிகையாகவும் விருதுகள் பெற்றனர். ஷங்காய்த் திரைப்பட விழாவின் சரித்திரத்தில் இத்தகைய குறைந்த வயதான நடிகைக்குத் தங்கக் குவளை விருது கிடைத்திருப்பது சாதனையாக அறிவிக்கப்பட்டது. இவ்வருடத்தின் ஷங்காய் சர்வதேசத் திரைப்படவிழாவில் இப்படி இத்தனை விருதுகளையும் மேஜர், நிலயன்ஸ், அண்பீற்றபிள் ஆகிய மூன்று திரைப்படங்களுமே பகிர்ந்து கொண்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒஸ்கார் விருதுபெற்ற பிரித்தானிய திரைப்பட நெறியாளரான ரொம் கூப்பரின் தலைமையில் பிரான்ஸ் தேசத்து சினிமா விமர்சகர் மைக்கல் சைமெந், ஜேர்மனிய திரைப்பட நெறியாளர் கிறிஸ் கிறவுஸ், ஈரானிய திரைப்பட நெறியாளர் க்கரோசோ மசோமி, செக் நாட்டு திரைப்பட நெறியாளர் ஜிரி மங்கல், சீனத் திரைப்பட நெறியாளர் நிங் கவொ ஆகியோருடன் ஷங்காய் வாசியான சீன நடிகை யு நான் என ஏழு நடுவர்கள் கொண்ட குழு விழாவின் ஒன்பது நாட்களும் இந்த விருதுகளைத் தெரிவு செய்வதில் மும்மரமாகப் பணியாற்றினர்கள். விழாவில் தங்கக் குவளை பெற்ற சிறந்த திரைப்படத்தைப் பற்றிப் பேசிய ரொம் கூப்பர், விழாவின் நடுப்பகுதிவரை பார்த்த திரைப்படங்களில் எதற்கு விருது வழங்கலாம் எனத் தாம் குழம்பியிருந்த நிலையில் மேஜர் திரைப்படத்தைப் பார்த்ததும் சந்தோசப்பட்டோம் என்பதுடன், இறுதியில் சகல யூரர்களும் ஏகமனதாக மேஜர் திரைப்படத்திற்கே சிறந்த திரைப்படத்திற்கான தங்கக் குவளை விருது கொடுக்கலாம் என்ற முடிவுக்கும் வந்திருந்தோம் எனக் குறிப்பிட்டிருந்தார். ரஷியாவின் குக்கிராமம் ஒன்றில் வாழும் இராணுவ பொலீஸ் மேஜர் ஒருவர் பிரசவ

**தொடர்ச்சி 33ஆம் பக்கம்**

# திரைவிமர்சனம் - தீயா வேலை செய்யணும் குமாரு

சுந்தர். சி படங்கள் என்றாலே கலகலப்புக்கு பஞ்சம் இருக்காது. இந்தப் படத்தில் அவருடன் 'சூதுகவ்வும்' நலன் குமாரசாமியும் சேர்ந்து கொண்டிருக்கிறார். கேட்கவா வேண்டும்? இருவரும் சேர்ந்து லாஜிக்கை பற்றி யோசிக்க நேரமில்லாத ஒரு பொழுதுபோக்கு படத்தைக் கொடுத்து, தங்களை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்!

காதலித்து கல்யாணம் செய்து கொள்வதையே பரம்பரை பெருமையாய் கொண்டவர்கள், கதாநாயகன் சித்தார்த் குடும்பத்தினர். கொள்ளு தாத்தா, தாத்தா, அப்பா என்று தலை முறை, தலைமுறையாக காதலித்தே திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆனால், குடும்பத்தின் 'பெருமையை' குலைப்பதுபோல் பெண்கள், காதல் என்றாலே எட்டிக்காயாய் கசக்கிறது சித்தார்த்துக்கு. பெண்களால் ஏமாற்றப்பட்ட வலி மிகுந்த நினைவுகள் அதற்குக் காரணம். இத்தனைக்கும் சித்தார்த் ஒரு சாஃப்ட்வேர் நிறுவனத்தில் வேலை செய்கிறார். கை நிறைய சம்பளம் வாங்கிறார். தன் கல்யாணத்தை தானே தீர்மானிக் கும் சக்தியுள்ள பெண்கள் அவரைச் சுற்றி நடமாடுகிறார்கள்.

'இப்பிடியே இருந்திடாதேடா, யாரையாவது 'லவ் பண்ணுடா' என்று வீட்டிலும் வேலை செய்யும் அலுவலகத்திலும் சுற்றியுள்ளவர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், சித்தார்த்துக்கு 'பொண்ணு' அமையலை. காதலிக்கவும் பிடிக்கவில்லை. எப்பிடி காதலிப்பது என்பதுகூட தெரியாமல், ஒவ்வொரு முயற்சியிலும் சொதப்பிக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில்தான் அவரது அலுவலகத்தில் புதிதாக ஹன்சிகா வேலைக்குச் சேர்கிறார். ஹன்சிகாவைப் பார்த்தவுடனேயே சித்தார்த்துக்கு உள்ளே வண்ணத்துப்பூச்சி பறக்கிறது. ஆனால், அலுவலகத்திலே எல்லா பெண்களுக்கும் பிடித்த கணேஷ் வெங்கட்ராம், ஹன்சிகா மீது விருப்பம்கொள்கிறார். பாதை தெளிவாக இருந்தாலே திணறும் சித்தார்த், இப்படியொரு பெரிய தடை குறுக்கே வர நிலைகுலைந்து போகிறார். ஒரு வழியும் தெரி யாத சித்தார்த்துக்கு அவரது அத்தான் ஒரு ஐடியா குடுக்கிறார். ஊரில் 'நோக்கியா' என்று ஒரு 'காதல் குரு' இருக்கிறார். அவரிடம் போனால் எல்லாம் சரியாகிடும் என்கிறார். அந்த காதல் குரு சந்தானம். அதன்பின்னர் சந்தானம் வழிகாட்டுதலில் ஹன்சிகாவை மடக்க எத்தனிக்கிறார், சித்தார்த். ஒரு கட்டத்தில் சந்தானத்தின் ஆலோசனைகள் செல்லுபடி ஆகிவிடுகிறது.

ஆனால், சித்தார்த்துக்கு ஆலோசனைகள் கொடுத்து காதலிக்க வைத்த பொண்ணு தன் தங்கைதான் என்பது, அதன்பிறகுதான் சந்தானத்திற்கு தெரிய வருகிறது. 'காதல் குரு'வாக அவர்களைச் சேர்க்க ஆலோசனைகள் கொடுத்தவர், இப்போது, ஹன்சிகா அண்ணனாய் அவர்களைப் பிரிக்க முயற்சிக்கிறார். காதலர்கள் வெற்றி பெற்றார்களா, அண்ணன் வெற்றிபெற்றாரா என்பது மீதிக்கதை.

அப்பாவி இளைஞன் பாத்திரத்துக்கு சித்தார்த் சரியாகப் பொருந்துகிறார். இவருக்கு நகைச்சுவையும் நன்றாகவே வருகிறது! தமிழ் சினிமாவில் கார்த்திக் விட்டுசென்ற இடத்தை நிரப்ப இவரால் நிரப்ப



**- ஃபிலிம் நியூஸ் கிருஸ்ணன் -**

முடியும். சந்தானத்திடம் பயிற்சி எடுக்க சித்தார்த் படும்பாடும் அதற்காக அப்பாவித்தனமாக அவர் சொல்லும் பதில்களும் நடிப்போடு சேர்ந்தே நம்மைக் கவர்கிறது. ஹன்சிகா இளைத்தாலும் நன்றாகவே இருக்கிறார். ஆனால், நடிப்பதற்கு என்று பெரிதாய் ஏதுமில்லை. படம் முழுவதும் இவரது இளமையை எப்படியாவது, எந்தக் கோணத்திலாவது வெளிப்படுத்திவிட வேண்டும் என்று இயக்குர் சுந்தர்.சி, ஆடை வடிவமைப்பாளர் குஷ்பூ, ஒளிப்பதிவாளர் மூவரும் கூட்டணி சேர்ந்து, 'தீயா வேலை செய்திருக்கிறார்கள்.'

படத்தின் கதாநாயகன் சித்தார்த் என்றாலும் சந்தானத்துக்குதான் முக்கியத்துவம். இந்தப் படத்தில் அவர் கொஞ்சம் நடிக்கவும் செய்திருக்கிறார். அப்பாவுடன் நடுரோட்டில் மல்லுக்கட்டும் காட்சியில், கோபத்திலும் ஆத்திரத்திலும் அவர் பேசும் பேச்சுக்கள் நகைச்சுவையைக் காட்டிலும் ஒரு சுவாரஸ்யத்தைக் கொடுக்கிறது. சித்தார்த் தின் வீட்டில் தங்கிவிட்டு, காலையில் அவர்கள் போடும் நாடகங்களைப் பார்த்து நம்ப முடியாமல், 'விக்ரமன் ஸார் படம் மாதிரியிருக்கு' என்று சொல்வது சிரிப்பை வரவழைக்கிறது. 'நான் வில்லனா? டேய் ஹீரோவுக்கும் வில்லனுக்கும் பெரிய

**தொடர்ச்சி 29ஆம் பக்கம்**


Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto, ON

Tel.: 416.321.6969


விலா கருணா
முதியோர் இல்லம்
'பழமுதிர் சோலையிது'
HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
பத்தாவது ஆண்டுப் பூர்த்தியை
முன்னிட்டு நிகழ்த்தும்
முதியோர் படைப்பாக்கப் போட்டிகள்
சிறுகதைப் போட்டி :
கனடிய வாழ்வு அனுபவங்களைக் கருவாகக் கொண்டதாகவும், 8½ X11 பேப்பரில் 5 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
கட்டுரைப் போட்டி:
கனடிய வாழ்வும் வளமும்' என்ற தலைப்பில் எழுதப்பட்டதாகவும், 8 X11 பேப்பரில் 5 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
கவிதைப் போட்டி :
'அந்திப் பொழுதழகு' என்ற தலைப்பில் எழுதப்பட்டதாகவும், 8½ X11 பேப்பரில் 2 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
தயவுசெய்து போட்டிக்கென அனுப்பும் ஆக்கங்களில் உங்கள் பெயரை எழுத வேண்டாம். தனியாக ஒரு பேப்பரில் உங்கள் முழுப் பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி(இருந்தால்), ஆக்கத்தின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு, ஆக்கத்துடன் இணைத்து அனுப்பி வையுங்கள். உங்கள் சொந்த ஆக்கமாகவும், முன்னர் பிரசுரிக்கப்படாததாகவும், பேப்பரின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
முதல் மூன்று இடங்களைப் பெறுவோர், விலா கருணா- முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு விழாவில், பெறுமதிமிக்க பரிசில்களும், விருதுகளும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
போட்டிக்கான ஆக்கங்கள்-
Villa Karuna, 602 Brimley Road, Scarborough, ON, M1J 2B5
என்ற முகவரிக்கு 31-7-2013க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416-266-6473, 416-200-6971, 647-991-7983
www.hhseniorcare.com / email: villakaruna@sympatico.ca

# வெற்றி! விரிந்து கிடக்கிற வானம்

இன்றுள்ள சூழ்நிலையில் நாமெல்லாம் வெற்றி பெறவேண்டும் என்பதில் மாறாத சிந்தனையுடன் உள்ளோம். எல்லோருக்கும் வாழ்வில் வெற்றி பெற உரிமையுண்டு. ஆனால் அதற்காக நாம் எடுக்கின்ற முயற்சிகளே ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென துடிப்பவர்களில் சிலர் நேர்மையாகவும், சிலர் நேர்மையில்லாமலும் தங்கள் நடவடிக்கைகளை எடுப்பர். அலையோடு அள்ளுண்டு போகாமல் எதிர்நீச்சல் போட்டே வாழ வேண்டிய காலமிது. 'வெற்றி வேண்டுமா போட்டுப்பாரடா எதிர்நீச்சல்' என்ற சினிமா பாடல் வரிகளில் கூட வெற்றிக்காக பட வேண்டிய கஷ்டங்கள் பற்றி உள்ளன. 'வேடிக்கை மனிதரைப் போல் நானும் வீழ்வேன் என நினைத்தாயோ' என்று கூறிய பாரதியின் வரிகளில் கூட ஒரு வைராக்கியம் எழுகின்றது. உண்மையில் ஒருவர் பெற்றிருக்கும் வெற்றி தான் அவரின் அடையாளம் என கூறமுடிகிறது. பொதுவாக சிறியவயது முதல் பெரியோர் வரையில் வெற்றியின் ருசியை சுவைக்க துடிக்கின்றனர். வெற்றிப் பந்தயம் என்பது மரதன் ஓட்டம் போன்றது. எனினும் வெற்றியை பெறுவது சிலராகவே இருப்பர்.

'நீ எத்தனை புயல்களை சந்தித்தாய் என்பது பற்றி உலகத்திற்கு கவலை இல்லை. பத்திரமாக கப்பலை கரை சேர்த்தாயோ என்பது தான் முக்கியம்' என்று கூறிய சுவாமி விவேகானந்தரின் ஆழமான சிந்தனை பலருக்கு உதவுவது. அறிவு மட்டும் ஏற்பட்டுவிட்டால் வெற்றி பெற முடியாது. அதேவேளையில் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் வெற்றியை பெறக்கூடிய ஆளுமை பலரிடம் தேவை. அத்துடன் மக்கட்பண்பு (Hyman skills) இல்லாத அறிவுக் கூர்மை எந்த விதத்திலும் வெற்றிக்கு உதவமுடியாது. 'என்னால் வெற்றி பெற முடியும்' என்பதனை மனப்பூர்வமாக நம்புவதே வெற்றிக்கான ஆரம்பம். உயரமான மலையில் ஏறுவது போன்றது தான் இந்தப் பயணம். உண்மையில் எத்தனை பேர் வேண்டுமானாலும் வெற்றி பெற முடியும். யாரும் யாரையும் தோற்கடிக்காமலேயே வெற்றி பெற முடியும். நாம் எல்லோருமே வெல்ல முடியும். நாம் தோற்ற காரணத்தைக் கண்டு பிடித்தாலே போதும், நாம் வெற்றிக்கான திறவுகோலை வடிவமைத்து விட்டோம் என்பது பொருள். அசாத்தியமான வெற்றியை கைக்குள் கொண்டு வரும் போதுதான் மனதில் இனிமை வழியும்.

வெற்றிக்காக ஆங்கிலமொழியில் பல சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. அவை Victory, success, achievement, win trump, conquest, over coming, supremacy போன்ற எல்லாமே ஒருவருடைய வெற்றி ஈடேற்றம். புகழாக்கம், புகழுயர்வு, புகழ்பேறு, பதவிப்பேறு என்பவற்றினை கருதுபவை. குறிப்பாக Victory என்ற ஆங்கில பதம் கிரேக்கத்தில் வெற்றிக்குரிய பெண் தெய்வத்திற்குரியதாக உள்ளது.



எந்த ஒரு துறையிலும் வெற்றி பெறுவதே எல்லோரினதும் விருப்பமாகும். விளையாட்டு, தொழில், முயற்சி, யுத்தம், அறிவு போன்ற பல்வேறு துறைகளில் எந்த வேளையிலும் வெற்றிக்குரிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். காதலில் வெற்றிபெற துடிப்பவர் முதல் சர்வதேச விளையாட்டில் வெற்றி பெறுவோர் வரையில் எத்தனையோ ரகமான மனிதர்களை நாம் காணமுடியும். சங்க இலக்கியங்களில் யுத்தத்தில் வெல்பவர்கள் வாகைப் பூவை சூடுவதால் 'வெற்றிவாகை' என்று பொருள்பட கூறுவர். இப்படியே பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வெற்றி என்பதன் அர்த்தமும் மாறி மாறி செல்லும்.

பல்வேறு அறிஞர்கள் பல்வேறு காலங்களில் வெற்றிக்கு பல்வேறு காரணிகளை கூறியுள்ளனர். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய தரப்படுத்தலில் இதனை வரிசைப்படுத்தியுள்ளனர். ஆரம்பமும் முடிவும் வேறு வேறு முடிவுகளில் அமைந்தாலும் பொதுவான அடிப்படை-யொன்று அதற்குள்ளாக இருக்கும். பண்டிதர் கலாநிதி அலெக்சாந்தர் தனது நூலில் கலிபோர்ணியா பல்கலைக்கழக பேராசிரியர் போல் டபிள்யு ஜமி என்பவர் ஒருவர் வெற்றி பெற பின்வரும் காரணிகளை குறிப்பிடுவதாக குறிப்பிட்டுள்ளார். ஏனையோருடன் அவர்களது கருத்துப் பிழை என விவாதிப்பதினை தவிர்த்தல், தேவையில்லாமல் ஒருவரை புகழ்வதினை தவிர்த்தல், மற்றவர்களை குறை கூறுவதனை தவிர்த்தல், மற்றவர்களின் பெயர்களை கூறி அழைத்தல், புன்னகை புரிதல், நன்றி கூறுதல் போன்றனவே அவை.

துணிவும், துடிப்பும், தேடலும், தீராத ஆர்வமுமாக வெற்றியை தேடி ஓடுகிற, அதற்கென ஓயாமல் உழைக்கிற இளைய தலைமுறைக்கு இருக்கும் சவால் மற்றையோரைப் புரிந்து கொள்வது தான். மனிதர்களைப் புரிந்து கொள்ள தேவைப்படுவது மனப்பான்மை (Attitude) என்பது தான். 'எல்லாமே மனப்பான்மை தான்' (Attitude is everything) என்று கூட கூறலாம். நாம் எந்த செயலை செய்கிறோம் என்பதனை விட, எதை எந்த மனப்பான்மையுடன் செய்கிறோம் என்பது தான் முக்கியம். அறிவு சார்ந்த (Cognitive), மனஎழுச்சி சார்ந்த (Emotional), நடத்தை சார்ந்த (Behavior) தன்மைகளே ஒருவரின் மனப்பான்மையை தோற்றுவிக்கின்றன. ஆளுமையின் முக்கிய கூறாகவும் இதுவே உள்ளது. பரந்தமனப்பான்மை எல்லோருக்கும் வராது. ஒரு ஆய்வாளர் எண்கணித அடிப்படையில் A=1, B=2, C=3 என்றவாறு எழுத்தினை எழுதி Attitude என்ற சொல்லுக்கு கூட்டு மதிப்பு 100 என எழுதியுள்ளார். நல்லதொரு மனநிலையில் நின்று நூறு சதவிகிதம் நேர்த்தியுடன் செய்கின்ற எந்த காரியமும் நிச்சயம் வெற்றி பெறும். அதிலும் சாதகமான மனப்பான்மை (Positive attitude) பாதகமான மனப்பான்மை (Negative attitude) என்பது முக்கியமாகும். எதிர்மறையான நிகழ்வுகளையும் சாதகமாக எடுத்துக்கொள்வதே பரந்த மனப்பான்மை. பெரிய பெரிய பட்டங்கள், பதவிகள் அடைந்தாலும், ஏழை, பணக்கார பேதம், சாதியுணர்வு, அதிகார வெறி உள்ளவர்களை எவரும் மதிப்பதில்லை. ஆபிரகாம் லிங்கனின் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்தது. அவரின் தகப்பனார் செருப்பு தைக்கும் தொழிலாளியாக வாழ்ந்தவர். அவரை சபையில் கீழ்மைப்படுத்த ஒருவர் 'நீ ஒரு செருப்பு தைப்பவரின் மகன் தானே, என் செருப்பு அறுந்து விட்டது தைத்துத் தர முடியுமா?' எனக் கேட்டார். அதற்கு லிங்கன் 'அறுந்த செருப்பை என்னிடம் தாருங்கள், அதனை தைத்து தருகிறேன்' என்றார். இதைக் கேட்டதும் அந்த உறுப்பினர் வெட்கி தலைகுனிந்தார். இப்படியான அறிவுக் கூர்மையும், அயராத உழைப்பும், உயர்ந்த மனப்பான்மையும் கொண்ட அவரின் வாழ்வு பெரியதொரு வரலாறு ஆயிற்று. வாழ்க்கை என்பது ஒரு நிலைக்கண்ணாடி. அதற்கு முன் நின்று சிரித்தால் அதுவும் சிரிக்கும். அழுதால் அதுவும் அழும். முறைத்தால் முறைக்கும். எனவே எம்மை ஒருவர் நேசிப்பதற்கு எமது மனப்பான்மையே முதற்காரணம். வெற்றிக்கும் இதுவே முதற்படி.


வெற்றிக்கான இரண்டாவது செயல்பாடு ஒருவர் ஏனையோருடன் பழகும் தன்மை (Inter personal skills)யில் தான் தங்கியுள்ளது. பலர் எந்த நேரமும் சிடுசிடுப்பாக இருப்பார்கள். கதைக்கும் போது முகத்தில் கோபக்கனல் தெறிக்கும். வாயால் ஏதோவெல்லாம் உளறிக் கொட்டுவார்கள். கையை தூக்கி காட்டி சுட்டுவிரலை அசைத்து எல்லாம் தெரிந்தவர் போல் நடந்துகொள்வார்கள். இவர்களால் எந்தவொரு காரியத்தையும் சாதிக்க முடியாது. தன்னைத்தவிர வேறு எவரும் சிறந்தவர்களல்ல என்பது தான் அவர்களின் எண்ணம். சிலர் மற்றவர்களோடு சரியாக பழகாமல் தம்மை சுற்றி சுவர்களை எழுப்பி விடுவர்.

இக்கால இளையோர்களிடம் இப்பழகும் தன்மை படிப்படியாக குறைகிறது என்பதே பொது அபிப்பிராயமாக உள்ளது. குழந்தை, வியாபாரி, அதிபர், தொழிலாளி, நண்பர் இப்படி பலருடன் மனம் திறந்து பழகுபவர்களாலேயே எதனையும் சாதிக்க முடியும். விதவிதமான மக்களுடன் பழகினால் அதற்குமொரு பக்குவம் வேண்டும். பலர் மற்றவர்களை எடுத்தெறிந்து பேசுவர். எவ்வளவு திறமை சாலியாகவும் நேர்மையாளராக, பெரிய பதவி வகிப்பவராக இருந்தாலும் இனிமையாக பழகும் தன்மையில்லை என்றால் எந்த முன்னேற்றமும் ஏற்படாது.

மிகவும் அவசரமான இவ்வுலகில் சிறந்த முறையில் உறவாடுதல் வேண்டும். ஒரு விடயத்தில் உடன்பாடில்லை என்றாலும் மற்றவர் உணர்வுக்கு மதிப்பளித்தல் மிக அவசியம். இதனால் தான் தன்முனைப்பு, அகங்காரம் (Ego) என்பதனை முற்றாக இழந்துவிட வேண்டும். மதத்தில் நம்பிக்கையில்லாத பெரியார் கூட பழகும் விதத்தில் அவர் பெரியவரானார். எனவே ஒருவரின் வெற்றிக்கு பழகும் விதம்

இரண்டாவது படியாகும்.

ஒருவரின் வெற்றிக்கு அடுத்துள்ள அடிப்படை கேட்கும் திறன் (Listening) ஆகும். இன்றுள்ள இளையோர் எதனையும் நின்று கேட்கும் திறனற்றவர்களாக



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 28ஆம் பக்கம்


## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

**Pl. Call: 416.451.0271 / 416.315.9397**

# சார்பியல் - 24

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### ஈர்ப்புவிசையின் விலகல்

1905 ஆம் ஆண்டில் அயன்ஸ்ரைன் சிறப்புச் சார்புத் தத்துவத்தினை கூறியதில் இருந்து அது ஒரு வெற்றிகரமான தத்தவமாக இயற்பியல் உலகில் வலம் வரத் தொடங்கியது. இத்தத்துவமானது 'மாறா வேகத்தில்' என்ற சிறப்பான நிபந்தனையில் இயங்குகின்ற பொருட்களின் இயக்கங்களுக்கே பொருத்தமானதாக இருந்ததால் தான் அதனைச் சிறப்புச் சார்புத் தத்துவம் என்றார்கள். அதாவது சிறப்புச் சார்புத் தத்துவமானது ஒரு வரையறைக்குள் மாத்திரமே பாவிக்கப்படக் கூடியது. அதனால் அதனை முழுமையானதல்ல, ஒரு அண்ணளவானது என்றே கூறவேண்டும். இயற்பியலில் அதிக செல்வாக்குடன் இன்னொரு விதியும் இருந்தது. அது, 3 நூற்றாண்டுகளுக்கு முன்னராக நியூட்டன் தந்த ஈர்ப்பு விதி. சிறப்புச் சார்புத் தத்துவம் வந்ததும் நியூட்டனின் ஈர்ப்பு விதிக்கும் சிக்கல் வந்தது. எப்படி எனப் பார்ப்போம். குறிப்பாக இரண்டு பொருட்களை எடுத்துக் கொள்வோம். இவையிரண்டு எவ்வளவு தூரங்களுக்கு அப்பால் இருந்தாலும், ஒன்றை ஒன்று கவரும். இதில் எதுவித சிக்கலும் இல்லை. இரண்டில் ஒன்றில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்திப் பார்ப்போம். எப்படியெனில், ஒன்றினை இன்னமும் தள்ளி வைப்போம் அல்லது அதனுடைய திணிவினை அதிகரிக்கச் செய்வோம். என்ன நிகழும்? ஈர்ப்புவிதி கூறுகிறது, உடனடியாகவே இம்மாற்றத்தின் விளைவானது இரண்டுக்கும் இடையிலான ஈர்ப்புவிசையில் மாற்றத்தை உண்டாக்கும். பொருட்கள் எவ்வளவு இடைத்தூரத்தில் இருந்தாலும் இந்த மாற்றம் நடக்கும் என ஈர்ப்புவிதி கூறுகின்றது.

எமது அன்றாட நடைமுறையில் இதனை நாம் பார்க்கிறோம், ஏற்றுக் கொள்ளுகிறோம். ஏன், இன்னும் பாவிக்கிறோம் கூட. இதில் இப்போது வருகிற சிக்கல் என்னவெனில், சிறப்புச் சார்புத் தத்துவத்தில் இருந்து, எங்களுக்குத் தெரியும், ஒளியைவிட வேகமாகச் செல்லக் கூடியது ஒன்றுமே இல்லை. அப்படியிருக்க, எப்படி ஈர்ப்பு விசையானது அக்கணத்திலேயே முடிவிலி தூரத்தில் உள்ள பொருளிலும் உடனடியா-கச் செயற்பட முடியும்? ஒரு பொருளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தினை யார் அல்லது எது மற்றப் பொருளுக்கு எடுத்துச் சென்றது? அதிலும் ஒளியின் வேகத்தை விட வேகமாகவா? இந்த ஈர்ப்புவிசையானது முடிவிலியான வேகத்தில், ஒளியைவிட வேகமாகச் செல்கின்றதா? இருக்காது என நிறுவப்பட்டுவிட்டதே. எங்கேயோ என்னவோ இருக்குது, அப்படித்தானே. இதே நேரத்தில், நியூட்டனின் ஈர்ப்புவிதியும் தன்னை ஒரு முழுமையான விதியாகக் காட்டவில்லை என்பதனையும் வல்லுனர்கள் கண்டு கொண்டார்கள். எடுத்துக்காட்டாக, கதிரவனைச் சுற்றும் எல்லாக் கோள்களும் ஈர்ப்புவிதியிற்கு இணங்க இயங்குகின்றன என்பது அறிவியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தற்கால தொழில் நுட்ப அறிவில் இது சரிதானா எனப் பார்த்த போது, அதிலும் சில சறுக்கல் தெரிந்தது. கதிரவத் தொகுதியின் முதலாவது கோளான புதன் தவிர்ந்த மற்றய உருப்படிகள் எல்லாம் ஈர்ப்புவிதியை திருப்தியாக்கின. ஆனால் புதன் மாத்திரம் ஈர்ப்பு விதிக்கு அமைவாக நடக்கவில்லை. எல்லாக் கோள்களும் நீள்வளையப் பாதையில் கதிரவனைச் சுற்றிவர, புதன் மட்டும் கிட்டத்தட்ட வட்டப் பாதைபோன்று இயங்கியது. அது அவ்வளவாக ஆய்வாளர்களுக்குப் பிரச்சினையைத் தரவில்லை. இன்னொரு வித்தியாசமான இயக்கத்தையும் புதன் காட்டியது. எல்லாக் கோள்களும் தொடர்ந்து ஒரே நீள்வளையப் பாதையில் சுற்றிவர, புதன் மட்டும் ஒவ்வொரு முழுச்சுற்றின் பின்னரும் பழைய பாதையில் செல்லாது புதிய பாதையில் செல்லத் தொடங்கியது. அது மாத்திரமல்ல, ஒவ்வொரு முழுமைச் சுற்றுகைகளின் போதும் கதிரவனுக்கும் புதனுக்கும் இடையிலான மிகக் கிட்டிய தூரங்களும் (perihelion) மாற்றிக் கொண்டே இருந்தன. புதனின் உயர்ந்த வேகமும், குறுகிய வட்டமும் பாதை மாற்றங்களும் சேர, புதன் கோளின் இயக்கமானது ஒருவித 'துள்ளல்' போன்று காணப்படுகிறது. இந்த மாற்றம் அதாவது துள்ளல் புதனுக்கும் கதிரவனுக்கும் கிட்டவான நிலையில் இருந்தே நிகழத் தொடங்கும். இதனால் ஒவ்வொரு சுற்றும் வெவ்வேறு தளங்களில் இருந்தன. சுற்றுகைகளின் தளங்களுக்கு இடையிலான கோணம், நூறு வருடங்களில் 43 பாகை செக்கன்கள் ஆக இருந்தது. (ஒரு பாகையை 3600 ஆல் வகுக்கும் போது ஒரு பாகைசெக்கன் பெறப்படும். பாகை செக்கனை விகலை எனவும் கூறலாம்) மிகச் சிறிய கோணத்தால்தான் இந்த விலகல் காணப்படுகின்றது. ஆனாலும், கோள் புதனில் மாத்திரம் ஏனிந்த விலகல்? ஆக, ஈர்ப்பு விதியும் தன்னுடைய சிறப்புச் சார்புத் தத்துவம் போன்று ஒரு



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



# BASEMENT RENT

### MORNINGSIDE & SEWELLS
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

### WARDEN & HWY 401
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Washrooms. Close to all facilities. Avail. August 01, 2013.
416.817.6514 / 416414.0439

### WARDEN & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. immediately.
416.431.9832 / 416.315.9348

### MCCOWAN & STEELES
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

### MARKHAM & STEELES
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, bank, mall, TTC. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 647.971.1836

### MARKHAM & MAJOR MACKENZIE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.294.3260 / 647.708.2101

### MIDDLEFIELD & FINCH
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 647.296.7932

### NEILSON & FINCH
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to malls, TTC, school. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.297.9742

### MCCOWAN & STEELES
1 Large bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 647.866.8564

### MARKHAM & PAINTED POST
2 Bedroom walk-out bsmt இல் 1 bedroom avail. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.771.3801 / 416.431.4730

### MORNINGSIDE & SEWELLS
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.4564

### MARKHAM & ELLESMERE
2 bedroom walk-out bsmt for rent. Sept. entrance. Kitchen, dining, laundry & parking. 5 Min. to Woburn, Centennial college, TTC. Living space, shared kitchen, dining, laundry. Rooms also avail. on main floor.
தொடர்புகளுக்கு: 416.817.8226

### MCCOWAN & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.604.6114

### MIDDLEFIELD & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013
905.554.5810 / 416.648.1987

### SCAR.GOLF CLUB & ELLESMERE
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, hospital. Couple or Girls preferred. Avail. September 01, 13.
தொடர்புகளுக்கு: 416.836.5482

### MORNINGSIDE / SHEPPARD
Brand new 2 or 1 bedroom bsmt for rent. Sep. entrance. Gardening செய்யும் வசதியும் உண்டு. Malvern mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. Daycare available.
தொடர்புகளுக்கு: 416.834.1081

### MARKHAM & STEELES
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking. Close to bus, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.896.7740

### MORNINGSIDE & MCNICOLL
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.346.8148 / 647.531.6176 / 416.833.3575

### BIRCHMOUNT & FINCH
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.393.5300

### MARKHAM & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.471.2582 / 647.505.2582

### MORNINGSIDE & SHEPPARD
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.400.3097

### NEILSON & FINCH
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. Anytime. Family preferred. தொடர்புகளுக்கு: 416.832.6457

### MIDDLEFIELD & ELSON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2013.
905.202.6197 / 647.680.7505

### MORNINGSIDE & OLD FINCH
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.286.8450 / 647.762.6328

### MIDDLEFIELD & DENISON
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.908.1250

### HIGH GLEN & MCCOWAN
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

### BIRCHMOUNT & EGLINTON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.8086

### LAWRENCE & SCAR. GOLF CLUB
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, Tamil stores. Avail. immediately.
416.438.2857 / 416.728.9580

### VICTORIAPARK & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 2 or 3 people preferred.
தொடர்புகளுக்கு: 416.441.1830

### MCCOWAN & 14TH AVE.
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. July 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.727.7550

### MCCOWAN & ELSON
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.472.4122

### BRIMLEY & LAWRENCE
1 Bedroom bsmt fo rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.448.1411 / 647.628.1410

### MIDDLEFIELD & MCNICOLL
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.983.3082

### KENNEDY & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.912.8352

### MARKHAM & MAJOR MACKENZIE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.471.8992 / 647.526.9695

### MORNINGSIDE & SHEPPARD (ROUGH RIVER)
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.300.7595

### PHARMACY & FINCH
3 Bedroom bsmt for rent. Also 1 bedroom avail. on main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. August 01, 2013.
416.201.1222 / 416.299.4895

### VICTORIA PARK & LAWRENCE
2 bedroom walk-out bsmt apt. for rent. Cable television, internet, parking. Close to TTC, Wexford Swimming Pool & Wexford High school, Temples & Churches.
416.288.9575 / 647.866.9575

### FINCH & TAPSCOTT
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.318.2750

### LAWRENCE & PHARMACY
Newly renovated 2 bedrooms raised bsmt for rent. Ample sunlight & ventilation throw large windows. Sep. entrance. Big living room, full kitchen & washroom. Close to TTC, school, mall, temples, etc. Affordable rent. Cable with TVI, Tamil one TV free.
தொடர்புகளுக்கு: 416.285.0428

### MARKHAM & STEELES
2 bedrooms bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $750. தொடர்புகளுக்கு: 416.735.5623

### STEELES & STAINES
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.321.8587 / 647.868.8975

### MORNINGSIDE & NIGHTSTAR (Close to Nightstar park)
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, huge living room, laundry. Close to TTC, school, mall. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.265.9713

### MARKHAM & BUR OAK
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to elementary & high school, mall, Go station. Avail. July 15, 2013.
905.209.1421 / 647.405.1962

### BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

### NEILSON & MCLEVIN
1 Bedrooms bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, Malvern mall, school. No smoking. Avail. immediately.
416.724.8727 / 647.280.6163

### MARKHAM & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.

### KEELE & FINCH
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
**905.209.9212 / 416.562.5113**

### MORNINGSIDE & STAINES
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Internet, cable. Avail. immediately.
416.299.7876 / 647.857.9463

### MORNINGSIDE & MCNICOLL
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school. All bills inclusive. No smoking & No pets. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.844.9571

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு *www.vlambaram.com*

மேலும் பக்கங்கள் 27, 28

# BASEMENT FOR RENT

***MARKHAM & BUR OAK***
2 Bedroom bsmt for rent. Close to Go station, TTC. Rooms also available.
தொடர்புகளுக்கு: 905.472.8167
call after 3:00 pm

***MORNINGSIDE & MCNICOLL***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school.
Avail. Anytime. Family preferred.
416.332.3624 / 416.898.1242

***MARKHAM & STEELES***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. New appliances, laminated floor. No pets.
தொடர்புகளுக்கு: 416.917.0557

***MARKHAM & SHEPPARD***
1 Bedroom bsmt + 1 Room for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.7172

# ROOM FOR RENT

***NEILSON & SHEPPARD***
1 Bedroom for rent in main floor. Close to all facilities. Girls preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.822.2827

***MORNINGSIDE & SHEPPARD***
***(Rough river)***
1 Bedroom for rent. Washroom, parking, laundry. Close to all facilities. Working people, ladies or old people preferred.
Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.899.1123

***LAWRENCE & PHARMACY***
***2*** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

***MCCOWAN & DENISON***
1 Bedroom for rent in a main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
905.554.3595 / 647.532.1233

***VICTORIAPARK & ELLESMERE***
1 Bedroom immediately available for rent in a main floor. Parking, laundry and washroom available.
416.754.0823 (Call after 6.00pm)
416.291.3153 / 647.388.2478

***FINCH & BIRCHMOUNT***
1room for rent. Laundry. Close to all facilities. No smoking. Rent $350
தொடர்புகளுக்கு: 416.890.5267

***MORNINGSIDE & SHEPPARD***
1 Bedroom for rent. Laundry, internet, sep.entrance. Ladies or old people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.822.2031

***WARDEN & FINCH***
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking. Close to TTC, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

# ROOM FOR RENT

***MORNINGSIDE & NEILSON***
1 Large bedroom வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.740.5162

***BELLAMY & LAWRENCE***
Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Kitchen, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.726.9414

***MARKHAM & SHEPPARD***
Sept. apartment 1 bedroom rent on main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
416.919.9964 / 905.683.5105

***MARKHAM & SHEPPARD***
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

***FINCH & MIDDLEFIELD***
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $650. Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

***KENNEDY & LAWRENCE***
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

***MCCOWAN & LAWRENCE***
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.294.2212 /416.837.9797
after 6:00 pm

***MIDLAND & EGLINTON***
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

***MORNINGSIDE & SHEPPARD***
***Morningview Trail***
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred.
Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

***BIRCHMOUNT & MCNICOLL***
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.783.4876

***NEILSON & FINCH /MORNINGSIDE***
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
2 & 3 bedrooms condo. for rent.
647.361.9527 / 416.825.9717

## தமிழ் அச்சு வடிவமைப்பு

தமிழ் அச்சுவேலைகள், வடிவமைப்பு தமிழ் மொழியில் வாழ்த்து பா, பாராட்டுப் பத்திரம், நிகழ்ச்சி நிரல், விளம்பரம், துண்டுப்பிரசுரம், விழா மலர், புத்தகம், நினைவு மலர், அறிவித்தல், என்பவை வடிவமைத்து, உரிய நேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு: 647.938.7750

# HOUSE FOR RENT

***MARKHAM & DENISON***
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.900.7782

***MARKHAM & STEELES***
3 Bedroom house for rent. 2 1/2 Washroom, parking, laundry. Close to all facilities. Avail. July 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.889.1083

***NEILSON & SHEPPARD***
3 Bedroom house for rent. Parking, laundry. Finished bsmt. Close to all facilities. Avail. immediagtely.
416.287.6503 / 647.657.7436

***SCAR.GOLF CLUB & ELLESMERE***
2 Bedroom house for rent. Kitchen, dining & living room. Rent $1,275. Including water, hydro & gas.
தொடர்புகளுக்கு: 416.726.8403

***MORNINGSIDE & SHEPPARD***
2 Bedroom house for rent. Close to TTC, mall, school. Very big balcony.
Avail. July 01, 2013.
416.847.9802 / 416.388.3497

***BRIMLEY & EGLINTON***
3 Bedroom house, Living Room, Kitchen, Full wash room, Main floor Bungalow house. Close to TTC (Kennedy Subway), School, all Amenities. Quiet place. Avail. immediately.
416.265.9138 / 416.271.8467

***MIDLAND & EGLINTON***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.896.2511

# CONDO FOR RENT

***NEILSON & MCLEVIN***
2 Bedroom + 2 washroom condo. for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
***Birchmount & Finch***
2 bedroom + 2 washroom condo. also available.
தொடர்புகளுக்கு: 416.804.1291

***MCCOWAN & SHEPPARD***
2 Bedroom condoவில் 1 Bedroom வாடகைக்கு உண்டு. Sep. washroom, laundry, swimming, gym. Avail. immediately. Close to TTC, mall.
416.616.7882 / 416.299.8947

***MCCOWAN & EGLINTON***
2 Bedroom condo. for rent. parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.761.2499

***BRIMLEY & ELLESMERE***
1 + Den brand new condo for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.817.8479

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## குழந்தைகள் பராமரிப்பு

உங்கள் குழந்தைகளை நீங்கள் வேலைக்கு செல்லும் நேரத்தில் வீட்டில் இருந்து பராமரிக்க வேண்டுமா?
அழையுங்கள்: 416.716.2484

## குழந்தைகள் பராமரிப்பு

***MARKHAM & 14TH AVE.***
பகுதியில் 2 வயதுப்பிள்ளையை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. இடவசதியும், உணவும் கொடுக்கப்படும்.
416.830.6184 / 905.472.7679

## முதியோர் பராமரிப்பு

***Brampton Area***
உங்கள் வீடுகளுக்கு வந்து முதியவர்களை பராமரிக்கப்படும். நடைப்பயிற்சி, உணவு கொடுப்பது, உடைகள் துப்பரவு செய்வது ஆகிய சேவைகள் செய்து தரப்படும். வாகன வசதியும் உள்ளது. நீங்கள் விடுமுறைகளுக்குச் செல்லும் போது முதியவர்களை வைத்து பராமரிக்கப்படும்.
647.847.2990 / 647.712.2942

## JOB JOB JOB

***KENNEDY & EGLINTON***
***Metro Appliance*** இல் பகுதி நேர வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.298.4800

## JOB JOB JOB

Stairs நிறுவனம் ஒன்றிற்கு helper ஒருவர் தேவை. ஆசாரி வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Monday - Saturday
8:00am to 5:00pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

## SPACE FOR RENT

Space Rent for classes & meeting
தொடர்புகளுக்கு: 416.738.8824

## தையல் வகுப்புக்கள்
## தையல் *Orders*

***MARKHAM & LAWRENCE***
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SAREE BLOUSE

தையல் தேவைகளுக்கு
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

## SPACE AVAILABLE FREE*

***KENNEDY & EGLINTON*** பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:416.856.0408

மேலும் பக்கங்கள் 26, 29




# வெற்றி!...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளனர்.
உண்மையில் பரிதாபமான சூழ்நிலைதான். எம்மை முதன்மையாக வர வள்ளுவர்



அன்று கூறிய திருக்குறளை எல்லோரும் மறந்து விட்டனர். “செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை” என்ற குறளில் இந்த கேட்கும் திறன் வலியுறுத்தப்பட்டுள்ளது. எதனையும் காதால் கேட்டால் போதும். பல பிரச்சினைகள் தீர்ந்து விடும். தற்கொலை செய்ய துணிந்தவர் கூட இன்னொருவரின் புத்தியை செவிமடுத்தால் மனம் மாறிவிடும். எவர் மற்றவர்களின் சொற்களை கேட்டார்களோ அவர்களே முன்னேறுவர். எதையும் காது கொடுத்துக் கேட்கத் தயங்குபவர்கள் பொறுமையற்றவர்களாகவே இருப்பர். அத்துடன் கூர்ந்து செவிமடுக்கும் திறன் உள்ளவர்கள் தான் பெருந்தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அடுத்துள்ள முக்கிய விடயம் பேச்சுக்கலை என்பதாகும். வாய்மொழி தொடர்பு அல்லது பேச்சுக்கலை (Oral communication) என்பது இன்றுள்ள முக்கிய தேவை. பலருக்கும் முன்பாகவோ அல்லது மேடையிலோ பேசுவதற்கு பலர் மிகவும் பயப்படுகிறார்கள். அச்சவுணர்வு (Phobia) பலரிடம் உள்ளது. உலகில் பல பதவி வகித்த தலைவர்கள் மிகச் சிறந்த பேச்சாற்றலை கொண்டிருந்தனர். அமெரிக்க ஜனாதிபதிகள் அத்தனைபேரும் மிகச்சிறந்த பேச்சாளர்களாகவே திகழ்ந்துள்ளனர். தமிழ் நாட்டின் முன்னாள் பிரதம அமைச்சராகவிருந்த சி.என் அண்ணாத்துரையின் பேச்சாற்றல் இன்றுவரை பாராட்டப்படுகிறது. மேடையில் மட்டுமல்ல எந்த துறையிலும் சிறந்த நாவன்மை அவசியம். பயத்தினை குறைத்து துணிச்சலை வளர்க்க வேண்டி பல நிலையங்கள் உள. அதிலும் Toastmasters International என்ற அமைப்பு பிரசித்த பெற்றது. இதன்மூலம் தமது கருத்துக்களை நீண்ட உரைகளில் நிகழ்த்துபவர்களாக, அமைதியும் நம்பிக்கையும் உடையவர்களாக, தமது கருத்துக்களை துணிச்சலாக வெளியிடுபவர்களாக மாறி விட முடிகிறது. அதைப்போலவே வாழ்வில் வெற்றியும் பெறுகிறார்கள். சாதகமான வார்த்தைகள் இதற்கு முக்கியமாகும்.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



**PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE**

**AVAILABLE
FOR RENT**

Starting from $100.00

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

**GTA Square Mall (FINCH & MIDDLEFIELD**

தொடர்புகளுக்கு: 416.917.6883

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், பிராமண மணமகனுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: Sarmathil@gmail.com

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடா பிரஜையுமான திருமணம் முறிவடைந்த பட்டதாரிப் பெண்ணுக்கு இந்து மணமகன் தேவை. மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு: 647.779.3783

## மணமகள் தேவை

1973ஆம் ஆண்டு பிறந்து கனடாவில் வாழும் Net Work Dip. முடித்து நிரந்தர வேலை செய்யும் நற்பழக்கங்கள் உள்ள ஆணுக்கு 1976ஆம் ஆண்டுக்குப்பின் பிறந்த நற்பழக்கங்கள் உள்ள படித்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.764.1989

## திருமண சேவை

கனடாவில் வாழும் 37 வயது விவாகரத்தான பெண்ணிற்கு கனடாவில் அல்லது வேறு நாடுகளில் மணமகனும், மற்றும் அவுஸ்ரேலியாவில் வாழும் 34 வயதையுடைய மணமகளுக்கு கனடாவில் மணமகனும் தேவை.
தொடர்புகளுக்கு: 647.770.7759
nerajah@live.com

## திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு : தனம் - **647.918 0027**
**nallai@hotmail.ca**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

### HOME VISIT MATH TUTORING

Grade 1 - Grade 12
Rate $20/hr.
Locations: Scarborough, Markham, Brampton, Richmondhill 7 Mississauga
தொடர்புகளுக்கு: 647.766.0804

## TUTORING

By Tutor experienced at colombo schools, university & technical college.
- Math 6 - 12,
- Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders birthdays etc.
Contact: 416.706.1654

உடனடி வாடகைக்கு
3 BR+ 3 WR புத்தம் புதிய வீடு
Markham / 16th Ave: 1BR+1WR
உடனடி விற்பனைக்கு
4 BR +3 WR Back split
3+3 BR +2 WR Bungalow
2 BR + 2 WR Condo
மேலதிக விபரங்களுக்கு
Jey 416-816-9011

### WAREHOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1000 sq.ft for rent in 2300 Sq.ft warehouse.
தொடர்புகளுக்கு: 416.569.4065

### FREE SUMMER CLASS

Gr. 3 - Gr.12, Math, Science, English classes.
3 P.M. - 9 P.M. Every Tuesday & Thursday.
July 2nd - July 30th.
University Preparation Class.
Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
Ruban Master: 416.817.8226

## TUITION

### KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

மேலும் பக்கங்கள் 26, 27

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## CAR WANTED

***Toyota Camry - Sienna***
***1997 - 2002. Any KM / Condition***
***Contact: 647.448.2569***

## GRACE HOPPERS DINNING & TAKEOUT

***• Breakfast • Lunch • Dinner Enjoy our Tasty***
***Hoppers, Dosa, Rotti, Kulal pittu with sambol, sambar, Curries, Seafood, Meat, Vegi, Biriyani, Noodles, Salad, Fries, Chicken.***
**We do Catering for your parties too.**
And also enjoy: Coffee, Tea, Icecream, Fresh fruit Juice, Cake, Vadai, Rolls, sandwich.



***We can come and make hoppers for your home parties.***
***Contact: 647.522.7599*** ***3850 Finch Ave. W., Scarborough, ON (Kennedy & Finch)***

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**



## FLOORING CLEARANCE CENTER

- Wall to wall carpet starting from 50¢/sqf
- Solid Hardwood starting from $3.49sqf
- 8.33mm Laminate $.89sqf
- USA Eng. Hardwood from $2.99sqf
- 12mm Laminate (10 colours) from $1.15 sqf

***Professional installers available***
***Flooring Clearance Center***
***Please call me for any of your flooring needs : Rajah: 416.917.0557***
***4965 Steeles Avenue West North York, ON, M9L 1R4***

# திரைவிமர்சனம்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

வித்யாசம்

இல்லை... கல்யாணம் பண்ணிட்டு கசமுசா பண்ணா ஹீரோ.... கசமுசா பண்ணிட்டு கல்யாணம் பண்ணா வில்லன்" போன்ற வசன உச்சரிப்புகளிலும் கைத்தட்டல் பெறுகிறார். கணேஷ் வெங்கட்ராம், திவ்யதர்ஷிணி, தேவிப்ரியா, மனோபாலா, வித்யா, பாஸ்கி, பாலாஜி, சித்ரா லட்சுமணன், ஹன்ஸிகாவின் தோழி என்று பலரும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு நடிப்பைக் கொட்டியிருக்கிறார்கள். இசை: சத்யா. 'அழகென்றால் அவள் தானா' பாடல் கேட்க கொஞ்சம் நன்றாக இருக்கிறது. ஆர்.ஆர். கூட கொஞ்சம் சுமார் என்றே சொல்ல வேண்டும். மற்றபடி, சந்தானம் - ஹன்ஸிகா சம்பந்தப்பட்ட பிளாஷ்பேக் காட்சிகளில் ஒட்டியிருக்கும் பின்னணி இசை மட்டுமே கவர்கிறது..!

படத்தின் மிகப் பெரிய பலமே திரைக்கதைதான், கணேஷ் வெங்கட்ராமன் - ஹன்ஸிகாவை பிரிக்க சந்தானம் சொல்லும் ஆலோசனைகளும், சித்தார்த்துக்கு அவர் கொடுக்கும் பயிற்சியும் படு சுவாரஸ்ய மானவை. ஒளிப்பதிவு: கோபி அமர்நாத்.

குறிப்பிட்டு சொல்ல வேண்டியது ப்ரவீன் ஸ்ரீகாந்தின் எடிட்டிங். கச்சிதமாக இருக்கிறது. அலுப்புத் தட்டாத வகையிலும், லாஜிக்கை பார்க்க வைக்காத வகையிலும் நகைச்சுவை படங்களுக்கு திரைக்கதை அமைப்பது



ரொம்பவே கஷ்டம். அந்த சவாலில் சுந்தர்.சி. மீண்டுமொருமுறை வெற்றி பெற்றிருக்கிறார்.

பார்க்கலாம்.

# "A GUN & A RING" ...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

ஷெல்லி: எங்களின் படம் முதல் தடவையாக உலக அங்கீகாரம் பெற்றதே பெரிய விடயமாகும். அதற்காக இயக்குனர் திரு. லெனின் அண்ணாவை பாராட்டுவதுடன் அவரை உற்சாகப்படுத்துவோம். அப்போதுதான் அவர் இன்னமும் சிறப்பான படத்தினை இயக்கி பரிசினை பெறுவார்.



பாலன்: இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் ஷெல்லி?

ஷெல்லி: தயவு செய்து இந்தப் படம் திரைக்கு வரும்போது எல்லோரும் ஆதரவு தாருங்கள். அப்போதுதான் நாம் இன்னமும் சிறந்த சினிமாவை உருவாக்க முடியும். இறுதியாக இந்த சந்தர்ப்பத்தை தந்த விளம்பரம் பத்திரிகைக்கு நன்றி. இதே போன்று எனக்கு எல்லா வகையிலும் உதவிய என் அப்பா, அம்மாவின் குடும்பத்தார் அனைவருக்கும் நன்றி. எனது உயர்வில் மிகவும் அக்கறை கொண்டுள்ள என் அப்பாவின் நண்பர்களான திரு. ஜெயபால் மாமா, A1 Studio உரிமையாளர் திரு. உருத்திரன் மாமா ஆகியோருக்கும் என் மனமார்ந்தந்த நன்றிகளை கூறி நிறைவு செய்கின்றேன்.

# வெற்றி!...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

குருடன், செவிடன், ஊமை, நொண்டி இப்படியான வார்த்தைகளுக்கு பதிலாக பார்வையற்றோர், செவி கேளார், வாய்பேசார் என்றவாறு நல்ல தமிழில் பேசலாம். முன்பு ஊன முற்றோர் (Handicapped) என்ற சொல் வலுவளர்வினர் (Physically Challanged) என மாறியுள்ளது. எவரது மனநிலையும் புண்படுத்தாத சொல்லாடல், இனிமையாக பேசுதல் அவசியம். எதிர்காலத்தில் நன்றாக பேச, உரையாட தெரிந்தவர்களே வெற்றி பெறுவர் எனலாம்.




வெற்றி பெறுவதில் முக்கியமானதொரு சூழ்நிலை நேரநிர்வாகம் அல்லது நேரப்பங்கீடு (Time Management) ஆகும். நேரத்தின் அருமை தெரிந்தவர்களுக்கு, எப்போதும் நேரம் மிச்சம் இருக்கும். சோம்பேறிகள் தான் 'நேரமில்லை' என்ற ஒரே பல்லவியைப் பாடுவார்கள். உலகில் பணக்காரர்களில் ஒருவரான பில்கேட்ஸ் கூட எயிட்ஸ் ஒழிப்பில் தீவிரமாக உள்ளார். ஆனால் எமக்கு சாப்பிட நேரமில்லை. தூங்க நேரமில்லை. எல்லோரும் எல்லாவற்றையும் தள்ளிப்போடுபவர்களாக இருப்பர். 24 மணித்தியாலம் இதில் 12 மணித்தியாலங்களை திட்டமிட்டுபழகினாலே போதும். ஒரு வேலையின் ஈடுபாடு, சரியான நம்பிக்கை, முக்கியத்துவம், அறிவு, விருப்பம், நேரத்தை சிக்கனமாக்க வேண்டும். கடந்து போன ஒரு நொடியை கூட திரும்ப பெற முடியாது. எனவே வெற்றிக்கு திட்டமிடாதவர்கள் தாமாகவே தோல்விக்கு திட்டம் போட்டு விடுகிறார்கள் என்பதே அர்த்தம்.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


**AMBIHA SILK (Fancy Jewellery)**

**FINCH & MIDDLEFIELD**



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



அழையுங்கள்: **416.297.5261**


# இடது பக்கம்...


08ஆம் பக்கத்தொடர்ச்சி

சந்தியிலிருந்து சுமார் 140அடி தூரம் வரும்போதே அங்கு சைகை ஒளி மஞ்சளாக மாறியிருந்தது. இவ்வளவு தூரமும் நேரே எதிர்பக்கத்திலிருந்து வந்து கொண்டிருக்கும் வாகன சாரதிக்கு நிறுத்துவதற்கு போதுமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இடது பக்கம் சந்தியில் நின்றவர் திருப்பி விட்டார். நேரே வந்தவர் மஞ்சள் நிற சைகை, சிவப்பாக மாற இடது பக்கம் சந்தியில் திருப்பிய வாகனத்துடன் மோதல் நடந்து இடது பக்கம் திருப்பிய சாரதிக்கு பலமான காயம்.

நேரே வந்தவர் சிவப்பு நிற சைகை ஒளியில் நிறுத்த தவறினார் என்ற குற்றசாட்டு நிருபணமாகிய போது அவர் மீது 100% தப்புக்குரியவர் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. இப்படி தீர்ப்புகள் வழங்கப்பட்ட வாகன விபத்து வழக்குகளில் உதாரணத்திற்காக ஒன்றினை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். ஏராளமான வழக்குகளில் இதே மாதிரி தீர்ப்பு வழங்கப்பட்டது.

**ஷீயானி எதிர் தீடி**
(Ziani vs Thede)

என்னும் வாகன விபத்து தொடர்பான வழக்கின் தீர்ப்பினை அவ்வழக்கில் ஆஜராகிய வக்கீல் திரு. ஏரிக் மக்கிறகென் (Mr. Erik Magraken) பின்வருமாறு



குறிப்பிடுகின்றார்.

இங்கு வழக்கு தொடர்ந்த ஷீயானி என்பவர் சந்தியினை கடப்பதற்கு அண்மித்த போது சைகை ஒளி மஞ்சளாக மாற அதிவேக மிதி பெடலை மிதித்து வேகமாக கடக்கும் போது, இடது பக்கம் திருப்பிய வாகனத்துடன் மோதல் நடந்து விட்டது. இங்கு 50% & 50% தப்பு என இருவர் பக்கத்திலும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

**வாகன விபத்துகளில் நிரபராதி (Not at fault) என்ற முடிவு ஏன் அவசியம் தேவை?**

இது இங்கு முக்கியமான ஒரு கேள்வி! ஏனெனில் விபத்துகளில் நட்ட ஈடு கோருபவர் இருவழிகளில் நட்டஈடு கோரிக்கையினை முன் எடுக்கின்றார்.

1. காயமுற்றவர் தத்தமது காப்புறுதி கம்பனியிலிருந்து குறிப்பிடப்பட்ட சட்ட ஆதிக்கத்தினுள்ளிலிருந்து நட்டஈடு கோரல் (Statutory Accident Benefit Claims)

2. விபத்தில் தப்புக்குரியவர் வாகன சாரதியின் காப்புறுதி கம்பனிக்கு எதிராக நிரபராதியாக பாதிக்கப்பட்டவர் பெருந்தொகையினை வழக்கு தொடர்ந்து நட்டஈடு பெறுவது (Tort Claim)

இந்த இரண்டாவது நிலையில் பெறமுயல்பவர் விபத்தில் பூரண நிரபராதியாகவிருத்தல் வேண்டும். அத்துடன் உடல் காயம் என்பது வாழ்வின் அன்றாட செயல்பாட்டினை பாதிப்பதாக இருத்தல் வேண்டும். (Catastrophic Impairment) நிரபராதி என்பது அப்பால் பட்ட முறையில் நிருபிக்கப்படவில்லை யானால் இந்தவகையான நட்டஈடு கோர முடியாது. மேலும் விபத்தில் நிரபராதி என்பது பதிவில் போகும் போது தொடர்ந்து கட்டண உயர்வுகளிலிருந்தும் தப்பிக் கொள்ள முடியும்?

**பொதுவாக விபத்துகளில் தப்புக்குரியவர் எவர் என்ற தீர்ப்பு எவரால் வழங்கப்படுகின்றது.?**

விபத்து நடந்த இடத்தில் வீதி ஒழுங்கு சட்டத்தினை (Traffic Law Violations) பாதுகாப்பான வாகன ஓட்டத்தின் (Safety Driving) மீறினார் என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிருபணமாகும் போதே பொலீஸ் உத்தியோகத்தர் தண்டனை ரிக்கற் வழங்குவார். அல்லது நீதிமன்றத்திற்கு அழைப்பார். 'குற்றம்' என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் என்பது சரியாக தெரியவில்லையானால் தண்டனை ரிக்கற் விபத்துகளில் பொலிசார் வழங்கமாட்டார்.

விபத்துக்குள்ளாகியவர்கள் இரு பகுதியினரின் காப்புறுதி கம்பனி புலனாய்வாளர்கள் (Insurance Adjusters) இருவரும் சேர்ந்து பல ஆதாரங்களின் அடிப்படையில் தப்புக்குரியவர் யார்? நிரபராதி யார்? என்ற முடிவுக்கு வந்து அது பதிவில் போகின்றது. இந்த முடிவுகளில் ஆட்சேபனை உள்ள பகுதியினர் பலமான ஆதாரங்களிலிருந்தால் அதனை நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லும் போதே அங்கு முடிவு உறுதிப்படுத்தப்படும் அல்லது மாற்றியமைக்கப்படும்.

# பிரச்சனைக்கு எனது பங்களிப்பு என்ன?

என்னைப்பற்றி மேலும் கற்றுக் கொள்வதற்கு நான் செய்ய வேண்டியவற்றைச் செய்திட இப்போ உடன்படுவதால் நம்பிக்கையையும் அதன் சக்தியையும் இப்போ நன்கு உணர்கிறேன்.

நீ முதல் செய்த தவறையே இன்னொருவருடன் வேறொரு உறவிலும் செய்வதை அவதானித்தாயானால் முடிக்காத விடயத்தில் அகப்பட்டிருக்கிறாய் என்பதைப் புரிந்து கொள். பிறரைப் பற்றி அல்ல உன்னைப்பற்றியே நீ தெரிந்து கொள்ள வேண்டியது ஏதோ இருக்கிறது. கண்டுகொள்ள வேண்டியது ஏதோ இருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகின்றது. இந்த அலசலினால் உன்னைப் பற்றிக் கண்டறியப்போகும் தகவல்கள் உனது சரித்திரத்தைச் சிறப்பாக மாற்றியமைக்க உனக்கு உதவும்.

உண்மை என்னவென்றால் அநேகருக்குப் பல உறவுகள் இருப்பதில்லை. பலருடனும் அவர்கள் ஒரேமாதிரியான உறவைத்தான் கொண்டிருப்பார்கள். ஒரு உறவில் உனக்கிருக்கும் பிரச்சனைகளும் சவால்களும் தான் சகல உறவுகளிலும் உனக்கு இருப்பவை. உனக்கு எவ்வளவு உறவுகள் இருந்தாலும் உனது பிரச்சனையின் அடி மூலத்தை அடையாளங்காண நீ முயற்சிக்கும்போது பிரச்சனையை எது உன்பால் ஆகர்ஷிக்கிறது என்பது உனக்குத் தெளிவாகும். பிரச்சனையின் காரணகர்த்தாவை நீ அடையாளங்கண்டதும், உறவுகளுடன் நீ செய்வதை ஏன் செய்கிறாய் என்பது உனக்கு விளங்கியதும், நீ எப்படி மாறவேண்டும் என்பதை நீ தெரிவு செய்து கொள்ளலாம். உறவுகளுடனான அணுகுமுறையை நீ மாற்றும்போது உனது நடத்தை மாறுகிறது. உனது நடத்தையையும் பழக்கவழக்கத்தையும் நீ மாற்றிக் கொள்ளும்போது உனது அச்சங்கள், தவறான எதிர்பார்ப்புகள், தீர்ப்புகளுடன் உனது ரணங்களையும் குணப்படுத்துகின்றாய்.



உனது வாழ்க்கைத் துணையுடன், உனது தாயாருடன், உனது ஆருயிர் நண்பனுடன் நீ அடிக்கடி வாக்குவாதப்பட்டால் உனது தொழில் சகபாடிகளுடன், கடைகளில் மற்றவர்களுடன் சர்ச்சைப்பட்டால் பின்வருவதைக் கவனத்திலெடுத்துக் கொள். உனது வாழ்வெனும் மேடை மத்தியில் கவனித்து சீர்திருத்தப்பட வேண்டிய ஒன்று இருக்கின்றது.

உனது வாழ்வில் ஒவ்வொரு உறவும் மற்ற உறவுகளைவிட வித்தியாசமானது என நீ இதுவரை நினைத்திருக்கலாம். இன்று உனது உறவுகள் அனைத்திலுமுள்ள ஒரே மாதிரியான பிரச்சனைகளையும், ஒரேமாதிரியான அனுபவங்களையும் பரிசீலித்து அடையாளங் கண்டுகொள். பின்னர் உன்னையும் உனது சாதாரண குற்றங்குறைகூறல் முறையீடுகளையும் பரிசீலனை செய்துகொள்.

**எனது உறவுகளுடன் எனக்கிருக்கும் பிரச்சனைகள் யாவற்றிலும் நான் நடிக்கும் பாகம் என்ன, எனது பங்களிப்பு என்ன என்பதை விசுவாசத்துடன் இன்று அலசி ஆராய்ந்து தெரிந்துகொள்ளப் போகின்றேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

223

மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புரூடி



# JEN BOOK STORE

## *Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்

*JK* **தொடக்கம்** *Gr 12* வரையிலான

அனைத்து பாடப்புத்தகங்கள் **(Text Books)** மற்றும் அனைத்து செயல்நூல்களும் **(Work Books)** மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம்
**JEN BOOK STORE.**


உங்கள் பிள்ளைகள் **Math, English, Science** ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா?
கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




***3011 Markham Road, Unit 58 M1X 1L9***

***TEL: 416.738.8824 / 416.335.1500***

# ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிளை போடா தூ.....! B




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். கடந்த கடிதத்தில் பாக்கியத்தின் பரிதாபத்தைச் சொன்னேன். இந்தக் கடிதத்தில் அந்தோனி யின் அத்தியாத்தை எழுதுகின்றேன். அந்தோனியும் பாக்கியமும் கணவன் மனைவியாக வாழ்ந்தவர்கள். இடையில் ஒருவருக்கு மூளைக்கோளாறு உண்டாக மற்றவருக்கு மனச்சிதைவு தோன்றிவிட்டது. இருவருக்கும் உள்ள இணக்கமான இன்ப அன்புதான் தோன்றி விட்டது. இருவருக்கும் உள்ள இணக்கமான இன்ப அன்புதான் காரணம். இரண்டு உடல் ஓர் உயிர் என்பார்களே, அப்படியான ஐக்கியம். இருவரும் மிகுந்த தன் நம்பிக்கை கொண்டவர்கள். இதனால் கடவுள் நம்பிக்கையை கை கழுவி விட்டவர்கள். தன் நம்பிக்கையும் வல்லமையும் இவர்களுக்கு ஆணவத்தை வளர்த்தன. எவருடைய ஆதரவும் ஆலோசனையும் தேவையில்லை என்ற தலைக்கணம் நூறு வீதத்துக்கும் மேல்நுழைந்து ஆட்டம் போட்டது.


ஆணவம் இருள் மயமானது. இருட்டை விடக் கொடியது. இருள் தன்னைக் காட்டும். தன்னுள் இருப்பதை மட்டும் காட்டாது. ஆணவம் தன்னையும் காட்டது. தன்னுள் இருப்பதையும் காட்டாது. இதனால் இருளை விட ஆணவம் கொடியது. அந்தோனியின் ஆணவமும் பாக்கியத்தின் ஆணவமும் அவர்களுக்குள் பிரச்சனையை உருவாக்க வில்லை. இதற்கு அடிப்படையில் அவர்களுக்குள்ளிருந்த அந்நியோன்னியம் விட்டுக் கொடுத்தும் ஒத்துப் போயும் வாழும் முறைமையும், அவர்களைச் சாடிக்கேற்ற மூடியாய் பொருந்திப் போகச் செய்தது. இந்த இணைவு பிறரை மதிக்காத மனப்பான்மையை உண்டாக்கியது. பொருள் வசதியும் இருந்ததால் தலைக்கனம் கண்ணை மறைத்தது. தலைகால் புரியாமல் தாளமும போட்டது. பிறரோடு பழகுதல், உறவாடுதல், கொண்டாடுதல் அனைத்தை யும் தவிர்த்தார்கள். கோவிலுக்குப் போவதில்லை. சாமி கும்பிடுவதில்லை. கல்யாண வீடுகளுக்கு அழைத்தாலும் போவதில்லை. செத்தவீடுகளுக்கும் செல்வதில்லை. இதனால் அயலில் உள்ளவர்கள், உறவினர்கள், ஊரவர்கள் இவர்களை வெறுத்தார்கள்.

பெரியோரை வயதானவர்களை அறிஞர்களை மதித்தில், போற்றுதல் ஆலோசனை கேட்டல் எதுவும் இல்லாத ஒதுங்கிய தனிப் போக்குவாழ்க்கை வாழ்ந்தார்கள். எவரையும் மதிக்காத இவர்கள் போக்கு, இவர்களையும் யாரும் கணக்கெடுக்காத நிலைமைக்கு கொண்டு வந்தது. திடீர் என அந்தோனிக்கு மூளைக்கோளாறு வந்தது. ஊழ்வினையோ, ஆள்வினையோ என்று பல பண்டிதர்கள் வாசிகசாலைகளிலும், குளக்கரைகளிலும் இருந்து மாலை நேர ஆய்வு நடத்தினார் கள். அந்தோனியயை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் யாருடனும் பழகாத, பேசாத இறுக்கம் மூளையை தாக்கியிருக்கலாம் என்று கூறினார்கள்.

பலருடனும் பேசிப்பழக உறவாடி வாழும்படி ஆலோசனையை கூறினார்கள். பாக்கியம் புதிதாய் உறவுகளைத் தேடினாள். ஊரை ஒதுக்கிய இவர்களோடு உறவாட எவரும் முன்வரவல்லை. இந்த வெறுமையும் ஏக்கமும் பாக்கியத்தின் மனதையும் தாக்கியது. வறுமை செம்மைப்படுத்தும். வெறுமை சிதைத்து விடும். காலப்போக்கில் அந்தோனிக்கும் பாக்கியத்திற்கும் நோய் முற்றியது. மருந்து கிடைத்தாலும் அனுமானம் கிடைக்கவில்லை. ‘ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்’ என்ற பழமொழிக்கு இருவரும் உதாரணமானார் கள். வீட்டிற்குள் தனியே இருந்த இருவரும் பேச்சுப்பட்டார்கள். அடிபட்டார்கள். மண்டை உடைந்து மாறாட்டம் கொண்டார்கள். வீட்டை விட்டு வெளிப்பட்டு ஓடத்தொடங்கினார்கள்.

திக்குத் திக்காய் ஓடியவர்கள் கண்காணாத இடங்களுக்கெல்லாம் போய் மாதக்கணக்கில் பிரிந்திருந்தார்கள். பின்னர் விதிவசத்தால் ஒன்று கூடினார்கள். ஒன்று கூடிய போதும் ஒருவரை ஒருவர் இனங்காண முடியாமல் திண்டாடிப் பிரிந்திருந்தனர். பாக்கியத்திற்கு நாய் குட்டிகள் ஆதரவாயின. அந்தோனிக்கு சாப்பாடு ஆதரவானது. அந்தோனி இடைவிடாது சாப்பிட்டுக் கொண்டேயிருப் பார். சாப்பிட்டுக் கொண்டேயிருப்பதும் ஒருவகை மனநோய் என்று இன்றைய மருத்துவர்கள் சொல்வதும் உண்மைதான். எந்தநேரமும் இருவருக்கும் சாப்பாடு கிடைக்காது. எந்த நேரமும் சாக்கு நிறையச்சாப்பாடு கிடைக்கும் யாழ். இந்துக்கல்லூரி விடுதியை நாடி வந்திருக்கிறார்கள். பாக்கியம் ஏதோ ஒரு உணர்வுத் தூண்டுதலால் அந்தோனியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

நண்பா! விதிவசத்தால் இருவரும் ஒன்று கூடினார்கள் என்றும் உணர்வுத் தூண்டுதலால் பின்தொடர்ந்து கொண்டிருக் கிறார் என்றும் எழுதியது உன்னை யோசிக்க வைத்திருக்கும். ‘ஊழ்வினை உருத்து வந்து



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 34ஆம் பக்கம்




# தமிழர் கொண்டாட்டங்கள்

## தைப்பொங்கல்

தமிழர் சூரியனுக்கு நன்றி கூறும் நாள் தைப்பொங்கல். இது தை முதலாம் திகதி ஆகும். தெற்கில் இருக்கும் சூரியன் வடக்கு நோக்கிச்செல்ல ஆரம்பிக்கும் நாள் இது. ஆங்கில வருடத்தில் இது ஜனவரி 14 அல்லது 15 வரும். தைப்பொங்கலுக்கு மக்கள் சூரியன் வரும் முன்னர் எழுந்து, நீராடி, புது ஆடை அணிவர். பின்னர் புதுப் பானையில், புது அரிசியுடன், சர்க்கரை போன்றவற்றுடன் பொங்கல் பொங்கி சூரியனுக்கு படைப்பர். அதன் பின்னர் அதை உறவினர், நண்பர்களுடன் சேர்ந்து உண்பர். அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் மறுநாள் காணும் பொங்கல் ஆகும்.

மாட்டுப்பொங்கல் மாடுகளுக்கு நன்றி கூறும் நாளாகவும், காணும் பொங்கல் நண்பர்கள் உறவினர்களுடன் கொண்டாடும் நாளாகவும்



இருக்கும்.

## வருடப்பிறப்பு

தமிழர்களது வருடப்பிறப்பு சித்திரை 1ஆம் திகதி. இது வடக்கு நோக்கி செல்லும் சூரியன் பயணத்தில் பாதி தூரம் கடக்கும் நாளாகும். ஆங்கில வருடத்தில் இது ஏப்பிரல் 13 அல்லது 14 இல் கொண்டாடப்படும்.

இந்நாளில் பலர் சூரியனுக்கு பொங்கலும் பொங்குவர். வருடப்பிறப்புக்கு புது ஆடை அணிவர். பெரியோர்கள், பிள்ளைகளுக்கு கைவிசேடம் அளிப்பார்கள். இது வருடம் பிறந்தவுடன் பெரியோர்களிடம் ஆசீர்வாதம் பெறும்போது, சிறுவர்களுக்கு பெரியோர் அளிக்கும் பணமாகும். பின்னர் எல்லோரும் குடும்பத்தினரோடும், நண்பர்களோடும் புது வருடத்தின் வருகையை கொண்டாடுவர்.

## ஆடிப்பிறப்பு

இது வடக்கில் இருக்கும் சூரியன் தெற்கு நோக்கிச்செல்ல ஆரம்பிக்கும் நாள். இது ஆடி 1ஆம் திகதி. அதாவது ஆடிப்பிறப்பு இந்நாளில் கொண்டாடப்படும். இது ஆங்கில வருடத்தில் ஜுலை 15 அல்லது 16இல் வரும். இந்நாளில் கொழுக்கட்டை அவித்து, பனங்கட்டிக் கூழ் குடித்து மகிழுவர். ஆடிப்பிறப்பை பற்றி நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தமானந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டைத் தின்னலாம் தோழர்களே'

ஆடி மாதத்தில் நெல் விதைப்பார்கள். 'ஆடிப்பட்டம் தேடி விதை,' என்று ஒரு பழமொழியும் உண்டு.

தைப்பொங்கல், வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு மூன்றும் முக்கியமான தமிழர் திருநாட்கள் ஆகும். இவை மூன்றுமே எந்த ஒரு மதத்திலும் தங்கியில்லாமல், விஞ்ஞான நிகழ்வுகளில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.



ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஷங்காய்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

வேதனையில் அவதிப்படும் தன் மனைவியை தொலைவிலுள்ள வைத்திய சாலைக்குத் தன் வாகனத்தில் அவசரமாகவும் படு வேகமாகவும் அழைத்துச் செல்லும்



வேளையில் ஏழுவயதுச் சிறுவன் ஒருவனை மோதிக் கொன்றுவிடுகிறார். இந்தக் கொலையை மூடி மறைப்பதற்காக அவர் தன் சக பொலீஸ் உத்தியோகத்தர்களை அணுகியபோது அவ்வுத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் அளவுக்கதிகமான நடவடிக்கைகளால் நிலமை மிக மோசமடைகிறது. இதனால் பல அப்பாவிகளும் கொல்லப்படுகிறார்கள். மேஜர் தன் தவறை உணர்ந்து சகலதையும் ஒத்துக்கொள்ள நினைக்கும்போது எல்லாவற்றுக்குமான காலம் கடந்துவிடுகிறது. இதுவே மேஜர் திரைப்படக் கதை. ரஷியாவி-ன் சமுதாய வாழ்வியலையும், சீர்கேடுகளையும் பின்னியதான வெகு சிறப்பான திரைக்கதையாக்கி யூரி பிகொவால் இத்திரைப்படம் வெகு நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருந்தது. இத் திரைப்படம் கடந்த மே மாதம் நடந்த கான்ஸ் சர்வதேசத் திரைப்பட விழாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததென்பதும், இது யூரி பிகொவ் இன் இரண்டாவது திரைப்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஷங்காயில் யூரி பிகொவ் இற்கான விருது அறிவிக்கப்பட்ட போது அவர் அங்கு சமூகமளித்திருக்க வில்லை. கடும் வேலை நிமிர்த்தம் விடுப்பு எடுக்க முடியாதிருந்த யூரி பிகொவ் இன் சார்பில் அத்திரைப்படத்தின் தயாரிப்பாளரான அலெக்சி உச்சிற்றல் யூரி பிகொவ் இற்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

மின் தடை ஏற்பட்ட ஒரு இரவில் முகமூடியணிந்த ஒருவனால் பதினைந்து வயதச் சிறுமி பாலியல் வலோற்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு விடுகிறாள். அந்நேரம் அவ்வீட்டில் வேறு வேறு அறைகளில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் தாய், தகப்பன், தம்பி அவர்களுக்கு ஏற்படும் அதிர்ச்சி அதன் விளைவால் சகலருக்கும் ஏற்படும் மனப் போராட்டம் இத்தாக்கத்தால் அவர்களுக்குள் கட்டிவைத்திருந்த கற்பனைச் சுவர்கள் உடைவது என்பவற்றைச் சித்தரித்த மனோவியல் சார்ந்த சுவீடன் நாட்டுத் திரைப்படமே ரிலயன்ஸ். இந்தத் திரைப்படத்தின் பலம் வலுவான இறுக்கமான திரைக்கதையும் அதைக் காட்சிப்படுத்திய ஒளிப்பதிவுந்தான். இவ்விரண்டுக்குமான விருதை இத்திரைப்படம் பெற்றிருந்தது. இத்திரைப்படம் 2013 ஜனவரி- பெப்பிரவரி யில் நடந்த சுவீடனின் கொற்றபோக் சர்வதேசத்திரைப்பட விழாவில் முதலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆசியத் திரைப்படங்களின் வளர்ச்சிக்காக வும், ஆசியத் திரைப்படத்துறையை ஊக்குவிப்பதற்றாகவும் ஷங்காய் சர்வதேசத் திரைப்பட விழாவில் ஆசியாவின் புதிய தலைமுறைகளுக்கு விருது வழங்கப்படுவது வழமை. இவ்வருடத்தின் சிறந்த திரைப்படமாக கொரியத் திரைப்படமான வெரி ஓடினறி கப்பிள் என்ற திரைப்படத்திற்கும், சிங்கப்பூர் திரைப்படமான இனசன்ற் திரைப்படத்தை இயக்கிய வெங் செங் ∴சி இற்கு சிறந்த நெறியாளருக்கான விருதும், யூரிகள் தெரிவில் சிறந்த திரைப்படமாக சீனத் திரைப்படமான சிங்கிங் வென் வீ-யா யங் என்ற திரைப்படத்துக்கும் விருது கிடைத்திருக்கிறது. விருதுகள் பெற்ற இம்மூன்று திரைப்படங்களையும் இயக்கியவர்கள் முறையே கொரியரான நோ டொக், சிங்கப்பூரரான வெங் செங் ∴சி, மற்றும் சீனரான லியு யவான் எனும் பெண் இயக்குனர்கள் என்பதும் இவ்வருட விசேடமாகும். ஆசியாவின் இளம் திறமையா-ளர்களைத் தெரிவுசெய்யும் நடுவர்களாக சீன இயக்குனர் மற்றும் எழுத்தாளருமான லூ சுவான் தலைமையில் இந்திய திரைப்படங்களின் சர்வதேச ஒருங்கிணைப்பாளரான அருணா வாசுதேவ், கொரிய இயக்குனரான சொய் டொங் கூன், அமிரிக்க திரைப்படத் தயாரிப்பாளர் கிறே குருட்ஸ், பிரான்ஸ் நடிகை லோரா வைஸ்பேக்கர் ஆகியோர் கடமையாற்றியிருந்தனர்.

இவ்வருடத் ஷங்காய்த் திரைப்பட விழாவில் 1500 இற்கும் மேற்பட்ட சீனா உட்பட்ட பல நாட்டுத் திரைப்படங்கள் சீன, மற்றும் பிற தேசப் பார்வையாளர்களுக்காக நாற்பது திரைப்பட மாளிகைகளில் 150 திரையரங்கு களில் காட்சிப் படத்தப்பட்டிருந்தன. இந்தியாவிலிருந்து தெரிவான 13 திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதில் கமல் நடித்து சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கி தமிழில் பேசும் படம் என வந்திருந்த மௌனப் படத்தின் கிந்திப் பிரதி புஸ்பக் என்ற பெயரில் வந்திருந்தது. ராஜமௌளி இயக்கத்தில் தெலுங்கில் வெளியான ஈகா (இதுவே தமிழில் நான் ஈ எனவும் கிந்தியில் மக்கீ எனவும் வெளியாகியிருந்தது) இதைவிட அமீர்கானின் லகான், திறி இடியட்ஸ் போன்றன குறிப்பிடும்படியானவை யாகும்.

இப்படி ஒன்பது நாள்கள் கொண்ட ஷங்காய் சர்வதேச திரைப்பட விழா வெகு சிறப்பாக நிறைவடைந்தது. இவ்விழாவில் விருதுகள் பெற்ற திரைப்படங்களில் எவையெவை சிறப்புற அமைந்திருந்தன, எமது திரைப்படங்களில் நாம் செய்திருக்க வேண்டியன எவை, செய்யத் தவறியவை எவை, தவிர்த்திருக்க வேண்டியவை எவை என்ற பாடங்கள், எமது திரைப்படங்கள் வருங்காலங்களில் பெறப்போகும் விருதுகளுக்கான பாடங்களாய் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் இன்னொரு விழாவை நோக்கிக் காத்திருப்போம்.

• • •

# Education

**Review Tutorials 13-12**

➢ **CHEMISTRY 12 & IB Students**

(i) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(ii) Compare $3^{rd}$ ionization energies of magnesium and fluorine

➢ **CHEMISTRY 11**

A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

➢ **CHEMISTRY IB Organic**

(i) Predict whether an $E_1$ or $E_2$ mechanism proceeds when 2-chloro- 2-methyl butane undergoes β- elimination reaction.

(ii) Which of the following compounds contain stereo isomers.

(a) 2-chlorobutane (b) 2-methyl butane (c) 3-chloro – 1- iodo pentane (d) 1-chloro-2-methyl propane

➢ **BIOLOGY IB**

(i) List the roles of eukaryotic DNA polymerases.

(ii) Glucose can be obtained from the conversion of glycogen for ATP production. Do the liver glycogen and muscle glycogen supply the same amount of ATP to the muscles.

➢ **PHYSICS 11**

Assume that a 1800 kg car A is travelling 90 km/h behind an another car B with a distance of 70 m when the car B crashes and stops suddenly. If the average breaking force exerted by the car A is 6400 N determine whether the car A will collide with the car B. (Assume that the drivers reaction time is 0.5s).

➢ **PHYSICS 12** A bomber plane is diving to drop a bomb to reach a 2000m horizontal target in 20s. If the speed of the plane is 115m/s, determine the angle of the plane and its height when the bomb released from the plane.

➢ **ADVANCED FUNCTIONS 12**

(i) Determine an equation of a $4^{th}$ degree polynomial function with zeros 1,2 of order 1 and 3 of order 2 passing through (4, 20).

(ii) Determine the solution set for the inequality $x^4 + 9 \leq 6x^2$

**Answer Key : 13-11**

**CHEMISTRY 12**

(i) $HOAC + NaOH \rightarrow NaOAC + H_2O$

With the addition of 20mL of NaOH the concentration of HOAC = 0.006 mol/0/.6L = = 0.1 mol/L

$ka = \frac{[H^+][OAC]^-}{[HOAC]}$ ; $1.8x10^{-5} = \frac{[x\ ][x]}{[0.1 - x]}$

$X= 1.34 \times 10^{-3}$ mol/L $P^H = 2.87$

(ii) Half equivalence point , when 0.004 mol of NaOH added, 40 mL of NaOH is required.

$[HOAC] = \frac{0.004}{0.08} = 0.05$ mol/L;

$[NaOAC] = \frac{0.004}{0.08} = 0.05$ mol/L ; $P^H = 3.74$

(iii) At equivalence point,

$[NaOAC] = \frac{0.008}{0.12} = [\,OAC^-] = 0.067$ mol/L ;

$OAC^- + H_2O \rightleftharpoons HOAC + OH^-$

$K_b = \frac{K_w}{K_a} = 5.56 \times 10^{-10}$  $K_b = \frac{[OH^-][HOAC]}{[HOAC]^-}$

Calculate the $[OH^-]$ , and find out the $P^H$

(ii) voltaic cell .....

$Ni (s)/ Ag^+ (aq) \ // \ Ni^{2+} (aq) / \ Ag (s)$

$E°_{cell} = E°_{(cathode)} - E°_{(anode)}$

$E°_{cell} = (+0.8V) - (-0.24) = 1.04$ V

**PHYSICS 11**

(i) In transformers P incoming = P outgoing since $P = VI$; $Vp\ Ip = Vs\ Is$ if $V$ goes up then I goes down; Power loss , $P= I^2 R$ by increasing the voltage power loss can be reduced.

(ii) This is possible, If the internal resistance of the battery is comparable to the lamp resistance.

**PHYSICS 12**

x and y components of impulses are Jx and Jy

$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$

$= 0.16\ [(60cos25) - (40)] = 15.1$ kg.m/s

$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$

$= 0.16\ [(60sin25) - 0] = 4.057$ kg.m/s

Magnitude of impulse $I = \sqrt{I_{(x)}^2 + I_{(y)}^2} = 15.63$kg/m/s

$F = \frac{I}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3x10^4$ N

angle of impulse , tan ß= 4.057/15.1 = 0.2687; ß= 15°

**BIOLOGY 12**

5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail, (Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

➢ These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

*Answer key 13-12 - next issue*

Contact: 647 341 3975
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# ஆச்சிக்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

ஊட்டும்'

என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் குறிப்பிட்டதும், 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்று திருவள்ளுவர் கூறியதும் நினைத்துப் பார்க்க வேண்டிய கருத்துக்களே! போ கூழ் அலைக்கழிக்க ஆ கூழ் அரவணைக்கும். போகூழுக்கு நாம் செய்யும் பாபங்கள் காரணம். ஆ கூழுக்கு நாம் செய்யும் புண்ணியங்கள் காரணம். அந்தோனியும் பாக்கியமும் என்றோ ஒருநாள் அவர்களுக்கும் தெரியாமல் தினை அளவு அல்லது கடுகளவு அல்லது குறுணி அளவு அல்லது குண்டுமணி அளவு புண்ணியம் செய்திருக்கிறார்கள் போலும். பிரிந்து பிரிந்து அவர்கள் கூடுவதற்கு பண்ணிய புண்ணிய பாழ்போகாது உதவியது தான் காரணம். வேறும் ஒரு கதை உண்டு. அடுத்த முடங்கலில் எழுதுகின்றேன்.

வேறு என்ன?
பிறபின்பு

# சார்பியல்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

அண்ணளவான விதியோ என எண்ணத் தோன்றியது அயன்ஸ்ரைனுக்கு.

ஆக, 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இயற்பியலைப் பொறுத்த வரையில், இரண்டு அண்ணளவான அல்லது மட்டுப்படுத்த வரையறைக்குள் மட்டும் அமைவான விதிகள் இருந்தன எனலாம். இவ்விரண்டினையும் ஒன்றினைக்கும் முயற்சியில் அயன்ஸ்ரைன் மும்மரமாக ஈடுபடத் தொடங்கினார். அதற்காக, 1905ம் ஆண்டில் இருந்து 1915ம் ஆண்டு வரையில் மிகக் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. இந்தப் பத்து வருடங்களில் பலதடவை முயன்று ஈற்றில் வெற்றியடைந்த அயன்ஸ்ரைன் இறுதியில் ஈர்ப்பு விதியையும் சிறப்புச் சார்புத் தத்துவத்தையும் இணைத்து, சகலத்தினையும் விளங்கப்படுத்தக் கூடியதான பொதுச் சார்புத் தத்துவத்தினை உலகினருக்கு அளித்தார். அடுத்த தடவையில் பொதுச் சார்புக் கொள்கையை கண்டு கொள்வதற்கான வித்து எப்படிக் கிடைத்தது என்பதனைப் பார்ப்போம்

# வெற்றி!...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இவ்வளவு படிகளையும் தாண்டியவர்களுக்கு அடுத்துள்ள படி உற்சாகம் (Enthusiasm) ஆகும். உற்சாகம் என்பது வெளிச்சம் போன்றது. இதனால் இருட்டறைக்குள் தயக்கமின்றி நுழையலாம். வெற்றி பெற்ற மனிதர்கள் எல்லோரும் உற்சாகத்தை உள்ளங்கைகளில் வைத்திருந்தவர் களாகவே இருப்பர். சிறிய தோல்விக்கும் கப்பல் கவிழ்ந்து விட்டமாதிரி சோகத்தில் மூழ்குவர் பலர். இதற்காக உற்சாக முள்ளவர்களை நம்முடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். இன்றுள்ள பல இளையோர்கள் சொத்தைப் பறிகொடுத்தவர் போல உளர். அலுவலக பிரச்சினை, காதல் பிரச்சினை, வேலையற்ற பிரச்சினை, நட்பினால் ஏற்படும் பிரச்சினை என இப்படிப்பல பிரச்சினைகளை பட்டியலிடுவதை விடுத்து 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரை நம்புவோம். இந்திய ஜனாதிபதியாக திகழ்ந்த டாக்டர் அப்துல்கலாம் உற்சாகத்திற்கு நல்ல உதாரணம். அவர் புதிதாக ஒரு பூ பூத்திருக்கிறது என்றால் வேகமாகச் சென்று அதனை அகமகிழ ரசித்து விட்டு வந்து கவிதை எழுதுவாராம். இப்படி பாரதி கூட உற்சாகம் நிறைந்த ஒரு கவிஞர். தனது உடைகளின் கிழிசல்களை தானே தைப்பது போன்ற பல வேலைகளே செய்தும் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா'! என்று பாடினார். எத்தனைமுறை விழுந்தாலும் எழுந்து நிற்கும் உற்சாகம் வேண்டும்.


இறுதியாக என்ன வேண்டும்? வெற்றி பெற முக்கியமான விடயம் தன்னம்பிக்கை (Self Confidence) ஆகும். எமது இரண்டு கைகள் இல்லாது விட்டாலும் மலையில் ஏறலாம். தன்னம்பிக்கை மட்டும் இல்லை என்றால் எதுவும் முடியாது. பல்வேறு போட்டிகளில் இறுதிவரை விளையாடு பவர்களிடம் இந்த நம்பிக்கையே நிறைந்திருக்கும். இடையில் பலர் எழுந்து போனாலும் தொடர்ந்து வெற்றி பெறுபவர்கள் உளர். நம்பிக்கை உள்ளவர்கள் மரணத்தையும் ஜெயிக்கிறார் கள் என நம்ப முடியும். எம்மை அறிவுள்ளவர்கள் எமது நம்பிக்கையை உண்டாக்கும் உளிகள் போன்றவர்கள் மின்சாரத்தை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் ஆயிரத்துக்கு மேற்பட்ட பரிசோதனைகள் செய்தே வெற்றி கண்டார். நம்பிக்கை மட்டுமே அவருக்கு கை கொடுத்திருக்கிறது. ஸ்டீபன் ஹாக்கிங்ஸ் தனது உடல் இயக்கத்தை இழந்த போதும் மெழுகு வர்த்தியை கண்டுபிடித்தார். இது ஒன்றே நம்பிக்கை ஒளியை என்றும் தரும். எனவே எதற்கும் உழைப்பின் மீது நம்பிக்கை, சாதிக்க முடியும் என்ற சாதகமான நம்பிக்கை வேண்டும்.

இறுதியாக ஒருவர் வெற்றி பெற தனது சிறிய வட்டத்தினை மெல்ல மெல்ல பெரிதாக்க வேண்டும். அவரது வட்டம் பெரிதாக பெரிதாக அவர் வளர்ந்து கொண்டிருக்கிறார் என்பது தான் அர்த்தம். ஆக்க பூர்வமான அணுகுமுறையும் நேர்மறை எண்ணங்களும், நம்பிக்கையும், தொடர்முயற்சியும், ஆனந்தமான உணவும், தோல்வியை எண்ணாத மனமும், உடல் வலுவும் சேர்ந்து எம்மையெல்லாம் எங்கேயோ உயரத்தில் உள்ள வெற்றிக்கு கொண்டு சென்றுவிடும்.

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### *100% Guaranteed Result*

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- **கைரேகை**
- **கல்வி, உத்தியோகம்**
- **வதிவிடப் பிரச்சினைகள்**
- **குடும்ப பிரச்சினைகள்**
- **குழந்தை பாக்கியம்**
- **எதிரிகள் பிரச்சினைகள்**
- **கர்ப்ப தோஷம்**
- **நாம நட்சத்திரம்**
- **தொழில் வியாபாரம்**
- **நீதிமன்ற வழக்குகள்**
- **திருமண யோகம்**
- **கணவன் மனைவி ஒற்றுமையின்மை**
- **சர்ப்ப தோஷம்**
- **கஸ்ட நஷ்டங்கள்**

## *Tel.:647.856.0559*

*GTA Square Mall (2nd Floor)*
*5215 Finch Ave. E., Unit #257*
*Scarborough ON M1S 0C2*
*(FINCH & MIDDLEFIELD)*

## *Open 7 Days A Week, 10:00 am - 8:00pm*


Niru BRAND ®
நிரு
பிராண்ட்
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'என்ன வியாழ மாற்றம் பற்றி வாசிக்கிறியளா?'

சத்தம் கேட்ட திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தான், சிவா.

அங்கே ஒருவர் நின்றிருந்தார். 'இல்லை, வைரமுத்துவின் 'தண்ணீர் தேசம்' புத்தகத்தைப் பாக்கிறேன்' என்றவன் புத்தகத்தின் முகப்பினை உயர்த்திக் காட்டினான்.

'நல்லது, அது நல்ல புத்தகம்தான். படியுங்கள்' என்றவர் மெதுவாக நகர்ந்தார்.

வித்தியாதரனிடம் விடைபெற்றுக் கொண்டு ஸ்காபரோவில் இருந்த தனது உறவினனின் கடைக்கு வந்திருந்தான். ஏதாவது வாங்கிக் கொண்டு அதேநேரம் கடைமுதலாளி ஆனந்தனுடனும் கதைத்து விட்டுப் போகலாம் என்ற எண்ணத்தில் வந்திருந்தான்.

ஆனந்தனின் கடை பலசரக்குக் கடை. மரக்கறிகளும் மளிகைச் சாமான்களும்தான் அங்கு விற்பனையாகின்றது. இவனின் கடைக்குள் மீன் வியாபாரம் இல்லாததினால் தனிச் சைவம் பார்க்கிறவர்கள் இங்குதான் வருவார்கள். தமிழ்க் கொண்டாட்டங்களுக்கான பொருட்கள் முதல், பூசைக்கான பொருட்கள் வரை தூயதாகப் பெறலாம் என்ற நம்பிக்கை பொதுவாக உள்ளது.

கடையில் பல புத்தகங்கள் விற்பனைக்கு அடுக்கி இருப்பதைக் கண்டு அவற்றில் ஒன்றினை எடுத்து மேலோட்மாகப் பார்க்கையிலேயே (வாசிக்கையில் அல்ல) இந்தக் குரல் வந்தது.

மீண்டும் புத்தகத்தினுள் நுளைந்த சிவாவிற்கு, யார் இவர் என்று தெரிய வேண்டும் போல இருக்க,
புத்தகத்தில் இருந்த கண்களை நிமிர்த்திப் பக்கவாட்டில் பார்த்தான். கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்களுக்கு மேலாக அவர் தெரிந்தார். மெதுவாக நடந்து சென்றவரும் திரும்பி இவனைப் பார்க்க,
சிநேகிதமாகச் சிரித்தான் சிவா.
இவன் சிரித்தபோது இவனைப் பார்த்துச் சிரித்தவர் தனது நெற்றியைச் சுருக்கி இவனை ஆழமாப் பார்ப்பது போலப் பார்த்தார். பார்த்தவர் அப்படியே நின்றுவிட்டார்.

அவரது சுருங்கிய நெற்றி விரிவடைய, கண்கள் அகன்றன. முகத்தில் ஏதோ கிலேசம் தெரிவது போல இருந்தது. ஏதோ பதட்டமடைந்தது போலாகிவிட்ட அவர் சிவாவை நோக்கி ஓடாத குறையில் வந்தார்.

அப்பொழுதுதான் சிவா அவரை நன்றாகப் பார்த்தான். கறுத்தவராக இருந்தார். நெற்றியில் திருநீறிட்டு, திருநீற்றின் மத்தியில் சந்தனப் பொட்டும், அதன் மேல் குங்குமப் பொட்டும் இட்டிருந்தார். நிரம்ப முடியிருந்தது. அழகாகச் சீவியிருந்தார். நடுத்தர உயரத்தையும் விடச் சற்று உயரமாக இருந்த அவரைப் பார்த்தவுடனேயே தெரிந்தது, இவர் இந்தியாவில் இருந்து வந்தவர்தான் என்பது.

'தம்பி, உங்களைப் பாத்ததும் உடனே உங்களுக்கு உதவி செய்ய வேணும் போலை இருக்குது' என்றவர், சிவா ஏதும் கூறமுன்னரே தொடர்ந்தார்.

'உங்களுக்கு இப்ப சரியான பிரச்சனை. பிரச்சனை எண்டால் பணப் பிரச்சனை இல்லை. தேக ஆரோக்கியப் பிரச்சனை. உண்மையிலேயே உங்களுக்கு என்னுடைய உதவி தேவை' என்றவர்,

'நான் இந்தக் கடையின் பேஸ்மன்ரிலைதான் இருக்கிறேன். கீழை வாங்கோ! உங்களுக்கு உள்ள முழுப்பிரச்சனையையும் சொல்லி அவற்றிக்கான பரிகாரங்களையும் சொல்லுவேன்' என்று கூற, சிவாவுக்கு விளங்கிக் கொண்டது.

இவர் எங்களது தமிழில் கதைத்தாலும் இந்தியாவில் இருந்து வந்த சோதிடர் என்பது. அவரது உருவ அமைப்பும், உடைகளின் விதமும் அப்படியே கூறின.

சிவாவிற்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை. எதுவும் கூறாமல் நின்றவன், தண்ணீர் தேசத்தின் முகப்பைப் பார்த்தான்.

'தம்பி' என்று மீண்டும் அவர் அழைக்க மீண்டும் நிமிர்ந்து அவரைப் பார்த்தான். என்னை விட வயதில் இளையவராகத்தான் இருக்க வேண்டும் எனச் சிவாவின் மனம் கணக்குப் போட்டது.

'நான் பொதுவாக இப்பிடிக் கண்டவுடனேயே ஆருக்கும் சொல்லுறதில்லை. உங்கடை முகத்தைப் பாத்தவுடனேயே எனக்கு என்ரை அப்பன் சொல்லிவிட்டான், இந்தப் பிள்ளைக்கு உன்னுடைய உதவி தேவை என்டு. அதாலைதான் நான் உங்களுடன் இப்படியாகக் கதைக்கிறேன். விருப்பம் இல்லாட்டி பரவாயில்லை.' என்றார்.

சிவாவுக்குத் தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அவனுக்கு விருப்மில்லை. ஆனாலும் அவர் இவனை அழைத்த விதம் என்னவோ போலிருந்தது. தவிப்புடன் கண்களை அங்குமிங்கும் ஓடவிட்டான்.

மத்தியானவேளை! கடையில் வேறு ஒருவரும் இல்லை. ஆனந்தன் மட்டும், கல்லாப் பெட்டிக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். ஆனந்தன் தனக்கு முன்னால் ஒரு தட்டிலை வெத்திலையை அடுக்கிக் கொண்டு கீழ்க் கண்ணால் இவர்களைக் கவனித்துக் கொண்டு இருக்கிறதையும் சிவா கண்டான்.

சிவா ஆனந்தனைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

ஆனந்தன் எதுவுமே கூறவில்லை. வெற்றிலை அடுக்கி முடிந்திருக்க வேண்டும். தட்டினைக் கொண்டு போய் வைத்து விட்டு, வேறு காரியங்கள் பார்ப்பதற்காகப் போய்விட்டான்.

'பரவாயில்லை, உங்களுக்கு விருப்பமில்லைப் போலையிருக்கு. விட்டிடுங்கோ' என்றவர் திரும்பினார்.

◊ கனி ◊

இப்பவும் சிவாவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

பேஸ்மன் வாசல் கதவுவரை சென்றவர், நின்று மீண்டும் திரும்பி சிவாவைப் பார்த்தார். அவர் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்ற சிவாவின் கண்கள், அவரின் கண்களைச் சந்தித்தன.

'எனக்கு மனதிற்கு என்னவோ போலிருக்கு. சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். இனி எனக்கும் என்ரை அப்பனுக்கும் பிரச்சனையில்லை. விரும்பினால் கீழை வாங்கோ. எல்லாத்தையும் பாப்போம். நீங்கள் காசு பணம் எதுவும் தரவேண்டாம், வந்து ஒருக்கா விசயத்தை அறிந்சு போட்டு உங்கடை விருப்பப்படி நடவுங்கோ. நான் இப்ப பிரியாத்தான் இருக்கிறேன். தேவையெண்டால் கீழை வாங்கோ' என்றவர் படியிறங்கி பேஸ்மன்ருக்குப் போய்விட்டார்.

மீதி அடுத்த தடவையில்!

**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*
**HomeLife/GTA Realty Inc.**
**Cell - 647.525.7820**
**Office Scarborough - 416.321.6969**
**24 hrs.**
•Independently owned and operated

**EXCELLENT HOME AT HWY 48**
To Run Your own business 3 bedroom house with work shop 32x32 investment for home based auto shop or used car dealer.
Asking Only $249,000.

**Daisy Mart**
**Brand New convenience store at Tim Hortons**
North of Newmarket
at Leslie Main Road

**LAND VALUE**
**Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.**

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
**Rent will pay the mortgage.**
**Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.**

10 Acres in Holland lundry property with income. Good for seniors. Home, hobby, Farm.


**MERVIS & HWY 401**
**2 Story detached home for sale. Very demand area.**

**YOGA - MEDITATION CLASSESS**
**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்




**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**

## நகைச்சுவைத் தொடர் 268

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





காதற்ற ஊசியும் வாராது. காணும் கடைவழிக்கே ….பட்டினத்தார்.
உண்டானபோது கோடி உறவினர்கள்….

முருகேசர் நடுங்கும் கைகளால் எழுதி உலகருக்கு காட்ட உலகருக்கு பக்கத்தில் நின்ற தாமோதரம் சற்று விலகிப்போவதையும் தாமோதரத்தின் கண்களில் கண்ணீர் தளும்புவதையும் உலகர் கவனித்தார்.

சொந்த நாட்டில் சொத்துப் பத்துகளை முருகேசர் இழந்து கனடா வந்தாலும் பிள்ளைகளை கஸ்டம் தெரியாமல் இருந்த வசதி, செய்த தொழில் எல்லாவற்றையும் மறந்து கிடைத்த தொழிலில் சேமித்தது வசதியான வீடு கார் என பிள்ளைகளுக்காக அவர் பட்ட கஸ்டம் அவருக்குத்தான் தெரியும். தாயில்லாப் பிள்ளைகள் என்பதால் எந்தக் குறையுமின்றி வளர்த்தார். ஆனால் இன்று பிள்ளைகள் இரண்டு இருந்தும்…? அனாதரவாக பிள்ளைகளை வளர்த்தது பிள்ளைகள் மறந்தாலும் தாமோதரமும் உலகரும் மறக்கவில்லை.



முருகேசரைப்பற்றி கதைவரும்போது செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் அடிக்கடி சொல்லுவது தாய் தகப்பன் படும் கஸ்டத்தையும் செய்யும் தொழிலையும் பிள்ளைகளுக்கு சொல்லவேணும். அன்னையும் பிதாவும்...?
பல முதியவர்கள் வசதியாக வாழ்ந்த பொற்காலத்தை பிற்காலத்தில் நினைத்துப்பார்த்து பெருமூச்சு விடுகின்றனர்.


மாதக்கலண்டரையே பார்த்து மனம் புழுங்குபவர் பலர். தினக்கலண்டரைக் கிழித்து அன்றைய தினத்தையும் அடுத்தடுத்து வரும் நல்லதினங்களை தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சொல்லி அவற்றில் கலந்துகொள்பவர் சிலர்.

சிலரின் ரெலிபோன் வரும்பொழுது உலகர் தனது சிந்தனையை ஒருமுறை அப்டேற் பண்ணிக்கொள்ளுவார். உலகண்ணை என்ன புதினம். உலகர் ஆரம்பிப்பார். கல்கரியிலை இந்தியாவிலை வெள்ளம். ஆமிக்காரர் தானாம் உதவி செய்யினம்.





உலகர் முந்தி கொக்குவில் இந்துக் கல்லூரியிலை படிக்கேக்கை தாவடியாலை நந்தாவில் குளம் பெருகி தாவடி றோட்டுக்கு மேலாலை பாயேக்கை முழங்காலளவு தண்ணீக்குள்ளாலை நடந்து போனனான் என்றார். ரெலிபோன் எடுத்தவர் (அப்பவும் இப்பவும் அவரின் உயரம் நாலரை அடிதான்) செய்திகளை கேட்பவர்கள் ஒருபுறம் செய்தியைச் சொல்பவர்களிடம் தாழிப்பவர்கள் இன்னொருபுறம்.





பொருளாதாரத்தை எப்படி வளர்ப்பது. எந்த வரி-யக்கட்டுவது. எதைக் குறைப்பது என நாட்டுக்கு நாடு சட்டத்தைப் பந்தாடும் பொழுது இயற்கையின் சீற்றம் அதை விட மோசமாக உள்ளது.

வீதிகளை பெருப்பிக்கவேண்டும். பழைய பாலங்களை திருத்த வேண்டும் என பல திட்டங்கள் போட்டாலும் சனத்தொகை பெருகுகிறது.



ஒரு கார் இருந்த வீட்டில் 4, 5 கார்கள்.
வரப்புயர நீருயரும் என்பது போல,
வீதி சட்டவிதி மீற தண்டனை கிடைக்க இன்சூரன் மேலேற அதனால் ஏற்கனவே சற்று ஏறியிருந்த இரத்த அழுத்தம் பிறசர் ஏற...எல்லாம் ஒன்றோடு ஒன்றாக ஒருவரின் வாழ்க்கையில்
போட்டி…போட்டு…..துரத்துகிறது.
“வேகம் தடுத்தாண்ட வேந்தனடி போற்றி”


“எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்.
(இதுதான் இன்று பலர் மனதுள் முணுமுணுக்கும் பாடல்)





யூலை 1….15




1. கனடா டே – 1867 (146 வது ஆண்டு)
2. சர்வதேச குழந்தைகள் தினம்.
3. 1842ல் யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.




4. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவையின் முதலாவது தமிழ் மகாநாடு பென்சில்வேனியாவில் நடைபெற்றது. இந்தவருடம் 4..5..6..7..ம் திகதிகளில் ரொரன்ரோவில் நடைபெறுகிறது.
4. சுவாமி விவேகானந்தர் நினைவுதினம் (1863..1902)




4. ஐக்கிய அமெரிக்க விடுதலை நாள் 1776.
5. கரும்புலிகள் தினம். 1987 யூலை 5 (நெல்லியடியில் மில்னர் இராணுவமுகாம்மீது முதலாவது தற்கொலைத் தாக்குதல்)



5. சல்வேசன் ஆமி இங்கிலாந்தில் 1865 ஆரம்பிக்கப்பட்டது.
6. தவில் மேதை இணுவில் என். ஆர். சின்னராசா நினைவுதினம் (1934-1991)



8. அரிச்சந்திரா புகழ் நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுதினம் (1924-1989)
10. ஈழத்து எழுத்தாளர் நாவேந்தன் நினைவுதினம் (1932-2000)
11. உலகத்தின் 7 வது அதிசயமாக தாஜ்மகால் 1977இல் அறிவிக்கப்பட்டது.
11. உலக மக்கள் தொகை நாள்.
15. ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் என்.கே. பத்மநாதன் நினைவுதினம். (1933-2003)
15. ஈழத்து பிரபல எழுத்தாளர் நெல்லை க. பேரன் நினைவுதினம். (1946-1991)



உங்களைச் சுற்றியுள்ள பல கோவில்களில் திருவிழா.
கொடியேற்றம் தேர் தீர்த்தம் பூங்காவனம்...
ஆலய தரிசனம் செய்யலாமே!





யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

@ GTA Square

TUTORING



Saturday & Sunday 9:00 To 11:00
• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )

Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com www.tamilvanakkam.com


## காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க(கனடா) கோடை கால ஒன்றுகூடல்

எதிர்வரும் யூலை மாதம் 14ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுரோ, தொம்சன் பூங்காவில் அமைந்துள்ள ‘டி’ பிரதேசப் பகுதியில் இவ் ஒன்றுகூடல் காலை பத்து மணிக்கு ஆரம்பமாகி இரவு எட்டு வரை நடைபெற உள்ளது. இம்முறை நடைபெறும் ஒன்றுகூடலில் இவ் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தேர்வு செய்யப்படும். அனைத்து நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர்களையும் இம் முறை நடைபெறவுள்ள ஒன்றுகூடலுக்குத் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:** 647.710.6714 / 416.439.9326

# தமிழ் இலக்கியத்தோட்டம் இயல் விருது விழா





கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2012-ம் ஆண்டுக்கான இயல் விருது விழா வழமைபோல ரொறொன்ரோவில் யூன் 15ம் தேதி ராடிஸன் ஹொட்டலில் நடைபெற்றது. இம்முறை வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல் விருது நாஞ்சில் நாடன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இயல் விருதை தொடர்ந்து மற்றைய விருதுகளும் வழங்கப்பட்டன. புனைவு இலக்கியப் பிரிவில் "அஞ்சலை" நாவலுக்காக கண்மணி குணசேகரன் அவர்களுக்கும், அபுனைவு இலக்கியப் பிரிவில் "தாழப் பறக்காத பரத்தையர் கொடி" நூலுக்காக பிரபஞ்சனுக்கும், "வன்னி யுத்தம்" நூலுக்காக அப்பு அவர்களுக்கும், மொழி பெயர்ப்பு பிரிவில் தாஸ்தாயொவ்ஸ்கியின் "அசடன்" நாவலுக்காக எம்.ஏ.சுசீலாவுக்கும், சங்க இலக்கியத்திலுள்ள பதினெட்டு நூல்களில், பன்னிரெண்டை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளதற்காக தமிழகத்தின் தூத்துக்குடியைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருபவருமான வைதேகி ஹெர்பர்ட் அவர்களுக்கு (சங்க இலக்கிய நூல்கள்: "முல்லைப்பாட்டு & நெடுநல்வாடை") பரிசுகள் வழங்கப்பட்டன. கவிதைப்பிரிவில் "இருள் தின்ற ஈழம்" - தேவ அபிரா, "யுகபுராணம்" - நிலாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

சுந்தர ராமசாமி நினைவாக நிறுவப்பட்ட 'கணிமை விருது' முகுந்தராஜ் சுப்பிரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மாணவர் கட்டுரைப் போட்டியில் மிரா ரகுநாதன் பரிசு பெற்றார். இவ்விழாவுக்கு பல எழுத்தாளர்களும், கல்வியாளர்களும், அரசியல் பிரமுகர்களும், ஆர்வலர்களும் வருகை தந்து சிறப்பித்திருந்தனர்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

SMART KID'S SUMMER CAMP
HUNT FOR 2013

- We covers 50% of the school year's curriculum during these two months.
- We focus on the student's weak area will ensure to strengthen it.
- We build very strong communication and reading skills.
- We use very excellent work books designed according to the ontario school curriculum

ACTIVITIES INCLUDE:
*Math *Writing
*Communication Skill *Reading
*Grammer *World History
*French *Art Club
*Computer for Kids *Chess Club

Every day we provide free snacks. Once a week free pizza for lunch.
Time 9:00am to 4:30pm (Mon. to Fri.)
(Cost $2.25 / Hour Additional Child
in same family $2.00 per hour)
Early drop off and late pick up possible when necessary



HIGH SCHOOL SUMMER PREPARATION CAMP

Are you worried about your High school Dream Success

We finish following subjects before school starts:

Grade 9 & 10
Math & Science

Grade 11
Function Math

Grade 12
Advance Function

Time 11:00am to 3:00pm (Mon. to Fri.)
(Cost $5.00 / Hour Additional Child
in same family $3.00 per child)

Starting July 2nd to August 27th
Location: 3011 Markham Rd, unit 58, Scarborough, ON
If you register before June 25th you get a 10%off
Call: 416.738.8824

Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada



Subo Thevarajah.,AMP
MORTGAGES
SUBOSHAN.COM TD
416.627.2222

Every Story has a different Rate
What's Your's
Solution for every Mortgages
BonaFide
· New Mortagages · Refinance · First & Second Mortgages
New to Canada, Mortgage Switch, Self Employed
Pre-approvals, Residential & Commercial



Thayalan Gobalakrishnan
Mortgage Agent (GTA) Lic No:M12001612
Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462
E-Mail: thaya.gobal@gmail.com
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Call me for any Mortgage Financing Questions?

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்



SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"



SchurenSriskandarajah B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



Low Mortgage Rates
TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Commercial Investments



RE/MAX Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
416.575.5055
Hall Of Fame & Platinum Award Winner
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com,
Web: newcondoproject.ca & antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6
*Independently owned and operated
Having difficulty of getting your Mortgage
Please Contact me
"When bank says No We say Yes"

BRIMORTON & BELLAMY



Hugue 4 Bedroom Bungalow house for sale. 2 W/R.
Price: $549,900

MARKHAM & SHEPPARD



3 Bedroom T. house for sale
3 W/R.
Price: $359,900

WESTNEY & WILLIAMSON



4 Bedroom house for sale
4 W/R.
Price: $579,900

MAIN ST.WEST & VICTORIA



Retirement home for sale.
Price: 1,599,000

NEILSON & SEWELLS



4 Bedroom house for sale. 4 Washroom.
Price: 449,900

MCCOWAN & 14TH AVE



4 Bedroom house for sale. 4 Washroom.
Price: 549,900

Free Real Estate Class - Call: 416.321.6969

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
REAL ESTATE List Buy Sell
TOP 5% SALES REPRESENTATIVES IN CANADA
CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife GTA Realty Inc., Brokerage
Raj Paramasamy Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result

AUTO + HOME = BIG SAVINGS
Auto Insurance, Business Insurance, Home Insurance, Renter Insurance, Life Insurance
Office Hours:
Mon - Fri 9:30am to 9:30pm
Saturday 11:00am to 5:30pm
After hours by Appointment
http://www.insureontario.ca
LIKE A GOOD NEIGHBOUR STATE FARM IS THERE
Providing Insurance and Financial Services
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™
Li.chen.m8zn@statefarm.com
1200 Markham Road, Suite#123, Scarborough, ON M1H 3C3
(Corner of Markham & Ellesmere)




Li Chen, Agent
Call: 416.431.6800

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com


PRE CONSTRUCTION CONDOS FOR SALE
DOWNTOWN & OTHER AREAS
HARBOUR PLAZA RESIDENCE



AQUALINA



Price Starting From $200k
YONGE &RICH





RE/MAX Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng (Real Estate / Principal Mortgage Broker)
Dir: 416.575.5055
Call For VIP Pricing & Other Incentives